ஜனவரி 2018

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளிஅரசி

மங்கையரின் தோழி

ஒளி 05 இதழ் 01

பக்கங்கள் : 104 (84+12+VIII)

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புதப் படைப்பு

ரூபா 75 /-

## மிளிரும் ஆளுமைகள்







வாசி 38
வாசிக்கப்படுவாய்

காப்புறுதி என்றா...ப்பா ?
தாழிப்பு வார்த்தை காப்பாற்றுமா ?

Free

- ஆரோக்கிய கையேடு
- தரம் 5 திருத்தற் சேவை

## தரம் 5 (2018) - பெற்றோருக்கான ஆலோசனைகள்

## திருமதிக்கு ஒரு வெகுமதி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டமிடல்

# உங்கள் வெற்றிக்காக திட்டமிடும் 6 படிமுறைகள்

**திட்டமிடலே வெற்றிக்கனியை ருசிக்கச்செய்கின்றது. வாழ்க்கையின் நற்பேறைத் தீர்மானிக்கின்றது. வாசகர்களே நீங்களும் திட்டமிடுங்கள். வெற்றிபெறுங்கள்.**

★ Develop the right plan for you
சிறந்த ஆலோசகர்களின் உதவியுடன் ஒரு சிறந்த துறையைத் தெரிவுசெய்க.

★ Estabilish times to spend on.
அத்துறையை நேசித்து அதிக நேரத்தை செலவுசெய்து கடமைபுரியுங்கள்.

★ Keep a journal
நடப்பவற்றை ஒரு நாளாந்த பதிவேட்டில் விரும்பியமுறையில் பதிவுசெய்யுங்கள்.

★ Reflect
பதிவுகள் ஊடாக கற்றவற்றையும் அதன் விளைவுகளையும் சிந்தியுங்கள்.

★ Set goats
தெரிவுசெய்த துறைக்கு ஏற்ப ஒரு இலக்கை தீர்மானியுங்கள்.

★ Act on your plan
மேற்படி ஐந்து விடயங்களுக்கு ஏற்ப செயற்பாடுகளைத் திட்டமிடுங்கள்



**ஆர்.ஜனதன் BBA**

10 11 12 13 14 15 16

**இரண்டாம் வாரம்**

ஜனவரி

17 18 19 20 21 22 23 24

**மூன்றாம் வாரம்**

ஜனவரி

25 26 27 28 29 30 01 02

**நான்காம் வாரம்**

ஜனவரி

03 04 05 06 07 08 09

**முதலாம் வாரம்**

பெப்ரவரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...






மதம் சொல்லும் நெறி 26





பேசும் பெண்மை 60





சிறுகதை 76

நீங்களும் எழுதலாம் 48





நூலகம் 14











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை
# ஒளிஅரசி
மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** : மாஸ்மீடியா சேவிஸ்
இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| திருமதி சுமித்ரா ராகவன் | கிளிநொச்சி |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| வே. முல்லைத்தீபன் | ஒட்டுசுட்டான் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| இ.அன்ரன் இருதயகுமாரன் | நெல்லியடி |

**ஆலோசகர்கள்**

திருமதி. கோகிலா மகேந்திரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர், பிரபல எழுத்தாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. எஸ். செல்வராஜா (ஓய்வுநிலை மாகாண கல்விப்பணிப்பாளர்)
திரு. எஸ். மகேஸ் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபாவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஸ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியளாலர்)

**சட்டஆலோசகர்** : திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0714273035

**இதழ் வடிவமைப்பு**

எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்



பிரதம ஆசிரியரின்
உள்ளத்திலிருந்து

# சொல்லும் செயலும் சிறக்கட்டும்.

## GREAT BIGING TO A GREAT LIFE.

**புதிய வாழ்க்கைக்கான புதிய ஆரம்பம்**

**அன்பான வாசக நெஞ்சங்கள்
அனைவருக்கும் தைத்திருநாள்
வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.**

**வாழ்க்கை என்பது என்ன?
உயிரோடு இருப்பதா?
மகிழ்ச்சியாக இருப்பதா?
பணம், புகழைத் தேடி ஓடுவதா?
தோல்விகளில் கற்றுக் கொள்வதா?
வெற்றிகளில் பெற்றுக் கொள்வதா?
தன்னலமற்ற அர்ப்பணிப்பா?
தத்துவங்களின் அணிவகுப்பா?
அல்லது இத்தனையும் சேர்ந்ததா?**

ஆம், வாழ்க்கை என்பது இவை அனைத்தும் ஒன்றிணைந்ததே ஆகும். இத்தனையும் சேர்ந்தது என்பதால் அது எவ்வளவு கனமானதாக இருக்கும் என்பது அனைவருக்கும் புரிந்ததே.

சொல் ஆனது செம்மையாக இருக்கும் போது செயலும் செம்மைப்படுகின்றது. கழிந்த ஆண்டில் நாம் எதையெல்லாம் தவறாக நினைத்தோமோ, செய்தோமோ அதையெல்லாம் இவ்வாண்டில் களைந்தெறிந்து நன்மை பயக்கும் எதையெல்லாம் செய்யத்தவறினோமோ அதையெல்லாம் இவ் ஆண்டில் இரட்டிப்பாய் செய்து இன்பங்களை, அன்பு என்ற அழியாத சொத்தை கொள்முதல் செய்வோம். கடந்த ஆண்டின் தோல்விகள் சிலருக்கு வாழ்க்கை மீதான கசப்பை உண்டு பண்ணியிருக்கலாம். அதனால் மனம் வெறுத்துப்போயிருக்கலாம். தோல்விகள் ஒருபோதும் தவறானவை அல்ல. தோல்விகளே சாதனைகளுக்கு வழிகோலுகின்றன. அதனால் தோல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம ஆசிரியரின் உள்ளத்திலிருந்து



களைக் கொண்டாடியே ஆகவேண்டும்.

இனிமையான வார்த்தைகளும் நற்செயல்களுமே என்றும் நிரந்தரமானவை என்ற உண்மையை உணர்ந்துகொண்டால் நாம் செய்ய வேண்டியவையும் புரிந்துவிடும். தோல்விகளை படிக்கற்களாக எண்ணி நடக்கும் போது தான் வெற்றிகள் வசப்படும்.

ஒளிஅரசியின் இலக்கியப் பயணத்தில் ஆரம்பத்தில் கண்ட தோல்விகள் ஏராளம் உண்டு. மெல்ல மெல்ல தனது பயணத்தை நகர்த்தினாலும் நகரவேண்டும் என்ற எண்ணமோ, திடமான சிந்தனைகளோ, வெற்றியடைய வேண்டும் என்ற நோக்கமோ, வெற்றியடைவோம்என்றதன்னம்பிக்கையோகுறையவேயில்லை ஒளிஅரசிக்கு. பெண்களின் ஆளுமைகளை ஆவணப்படுத்தல், ஆடவர் திறன்களை வெளிப்படுத்தல், சாதனையாளர்களைக் கௌரவித்தல், நலிவுற்ற மாணவர்களுக்கு உதவிகள் பெற்றுக்கொடுத்தல் என அதன் வளர்ச்சிப்படிகள் முன்னேற்றம் காணவே செய்கின்றன. எமது நாட்டைக் கடந்து வெளி நாடுகளிலும் இன்று அறிமுகம் கண்டுள்ளாள் ஒளிஅரசி என்பது மகிழ்வைத் தரும் விடயமே. பல இடர்களையும் இன்னல்களையும் கடந்தே பயணிக்கின்றாள் ஒளிஅரசி என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் ஐந்து ஆண்டுகளைக் கடந்த பயணம் என்பது சாதனைக்குரிய ஒன்றாகவே நோக்கப்படுகின்றது.

வாழ்க்கையைப் புரிந்து தோல்விகளில் கற்று சொல்லையும் செயலையும் செம்மைப்படுத்துவோமாக. வார்த்தைகளே வாழ்க்கையாகின்றது, செயல்களே சந்தோசம் தருகின்றது என்ற உண்மையை உணர்ந்து புத்தாண்டில் புதுத்தெம்புடன் பயணிப்போமாக.

வருகின்ற புதுவருடம் அனைவருக்கும் இன்பமும் சுகிப்புமானதாய் அமையட்டும்.

எம்மோடு இணைந்து பயணிக்கும் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

பிரதம ஆசிரியர் ✍

**இம்மாத சிந்தனைக்கு:**

அன்பு என்பது அனைத்திற்கும் ஏற்ற ஒன்றாகும். அன்பினால் வானத்தையும் வசப்படுத்திவிடலாம் என்பது சத்தியமான வார்த்தைகளே ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**பொதுமறையில் இருந்து.** **அதிகாரம் : 8** **குறள் : 3**

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**
**என்போடு இயைந்த தொடர்பு.**

## ஒளிஅரசி சந்தா விபரம்

## அன்பு வாசகர்களே!

ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ள வேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.

| | |
|---|---|
| **கட்டணத்தொகை** | **உள்நாடு – ரூ. 1000.00** |
| **வங்கியின் பெயர்** | **ஹற்றன் நஷனல் வங்கி.** |
| **வைப்பிடவேண்டிய பெயர்** | mass media services |
| **வங்கி கணக்கு இலக்கம்** | **009010383405** |
| **வெளிநாடு 40$** | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனநாயகி



# நாகரீகக் கொள்ளைகள்

நேரம் மாலை ஆறு மணியைத் தொட்டிருந்தது. அந்த தனியார் வைத்தியசாலையின் முகப்பு மிக அலங்காரமாய் காட்சியளித்தது. இயலாமையும் ஆற்றாமையும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு வெளிவந்தது கண்மணிக்கு. வாசல் கதவு திறந்து வெளியே வந்து, எதிரில் வந்த பஸ்ஸில் ஏறி காலியாக இருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

அருகில் அவரது அயல் வீட்டுப்பெண்ணான மனோகரி இருப்பதை அப்போது தான் கண்டவர் இருந்த கண்மணிக்குமான உரையாடல் எம் வாசகர்களுக்காக.

**மனோகரி :** என்ன கண்மணி அக்கா, ஒரு மாதிரி இருக்கிறியள், ஏதாவது பிரச்சினையே?

**கண்மணி :** அதையேன் கேக்கிறாய் மனோகரி, மருந்தெடுப்பம் எண்டு உந்த ஆசுபத்திரிக்கு வந்தன், வந்த பிறகு தான் தெரியுது உவங்கள் காதில கழுத்தில கிடக்கிற எல்லாத்தையும் உருவாமல் விடமாட்டாங்கள் எண்டிறது.

**மனோகரி :** ஏன் அக்கா?

**கண்மணி :** காலில ஒரு சின்னப் புண் எண்டு தான் வந்தன், அதை மாத்திரம் எண்டு இல்லாத ரெஸ்ற் எல்லாம் செய்து காசா கறக்கிறது மட்டுமில்லாமல் ஆக்களை காவல் இருக்கவைச்சே கொல்லுவாங்கள் போல கிடக்கு.

**மனோகரி :** விளக்கமாச்சொல்லுங்கோ அக்கா?

**கண்மணி :** நாலு மணிக்கு வரச்சொல்ல நானும் சொன்ன ரைமுக்கு வந்து காவல் இருந்தா டொக்ரர் ஆடிஅசைஞ்சு ஒண்டரை மணித்தியாலம் கழிச்சு வந்து சேந்தார். அதுக்கிடையில உந்த நிக்கிற பிள்ளையள் ஏதோ பிளட் செக் பண்ணவேணும் எண்டு ரத்தமெடுத்து ஒரு வழி பண்ணிப் போட்டுதுகள்.

**மனோகரி :** என்னக்கா, டொக்ரர் வேற ஏதேனும் வருத்தம் இருக்கோ எண்டு பாத்திருப்பார்.

**கண்மணி :** அப்பிடி பாத்திருந்தா பறவாயில்லைத்தானே, அவசர அவசரமா வந்தவர் இப்ப வருத்தம் சுகம் தானே எண்டதோட, தானே மருந்தையும் கட்டி, சில குளிசைகளையும் எழுதினார், அவ்வளவு தான்.

**மனோகரி :** அப்ப அந்த றிப்போட் பாக்கவேயில்லையே,

**கண்மணி :** அதைத்தானே நானும் யோசிக்கிறன், அவர் பாக்கவேயில்லை, உந்தப் பிள்ளையள் தாங்களா எடுத்துதுகளோ, என்னவோ?

**மனோகரி :** டொக்ரர் வாறதுக்கு நேரம்போகுமெண்டு தெரிஞ்சு நேரத்தை மினக்கெடுத்துறதுக்கு அதுகள் அப்பிடி செய்திருக்குதுகள் போல, அதோட அவங்களுக்கு வருமானமும் தானே அக்கா. உது ஒரு பஷனாப்போச்சு, தனியார் மருத்துவமனைகளில் மருந்தெடுத்தாத்தான் வருத்தம் மாறுமெண்ட எண்ணம் வந்திட்டுது.

**கண்மணி :** அது சரி, வெளிநாட்டுக்காசும் உதுக்கு ஒரு காரணம் தான், அங்க வெளிநாடுகளில் பனியிலயும் வெயிலிலயும் நிண்டு கஸ்ரப்பட்டு உழைச்சு அனுப்புற காசை இஞ்சை உப்பிடியான இடங்களில நல்லா பறிக்கிறாங்கள்.

**மனோகரி :** அவங்களுக்குத் தெரிஞ்சுபோச்சு, வருத்தம் எண்டதும் சனம் எங்களிட்டத்தான் வரும், நாங்கள் எவ்வளவு சொன்னாலும் அப்பிடியே தந்திட்டுப் போகுமெண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்மணி : அது சரி, உந்த டொக்ரர்மார், தாங்கள் படிச்ச படிப்பை இப்பிடி இஞ்சி இஞ்சியா விக்கிறது எவ்வளவு வேதனையான விசயம் தெரியுமே,

மனோகரி : சாதாரணமா மருந்து கட்ட இருநூற்றைம்பது ரூபா, டொக்ரர் கட்டினால் அந்த இருநூற்றைம்பதோட ஐந்நூறு ரூபா இன்னும் கூட, அது மட்டுமே, அவர் பாக்கிறதுக்கு ஆயிரத்தி நூறு ரூபா, அதோட ஏதோ விளங்காத தொகையெல்லாம் போட்டு ஒரு பில்லை தயார் செய்து போடுவாங்கள்.

கண்மணி : அரச வைத்தியசாலைகளை மக்கள் நம்புற வரைக்கும் இந்த கொடுமை நடக்கத்தான் செய்யும்,

மனோகரி : கடைசியா தங்களால ஏலாது எண்டதும் எங்கை அனுப்புறது, அம்புலன் சுக்கும் காசை வேண்டிப்போட்டு அரசாங்க ஆசுபத்திரிக்குத்தானே அனுப்புறவங்கள்.

கண்மணி : ஓமோம், நீ சொல்லுறது சரிதான், எங்கட எண்ணத்தால தான் எங்களுக்கு இந்த நிலை.

மனோகரி : அக்கா இறங்கிற இடம் வந்திட்டுது, வாங்கோ நடந்துகொண்டே கதைப்பம்.

**பிறேக் போட்டு நின்ற பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்தனர் இருவரும்.**

உதவி (14)

# அரசியின் 'உதவும் கரம்'

செய்த உதவியும் இட்டுவைத்த விதையும் வீணாகப்போகாது என்பது முதுமொழி. அதற்கேற்ப உள்ளவர்களிடம் பெற்று இல்லாதோர்க்கு கொடுக்கும் அளப்பரிய பணியினை ஆற்றிவரும் ஒளிஅரசி மாதாந்தம் உதவி தேவையான மாண வர்களை இனங்கண்டு கல்வி ஊக்குவிப்பு உத வியினை வழங்கிவருகின்றாள். ஒளிஅரசியின் **கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்** என்னும் தொனிப்பொருளிலான உதவும் கரங்கள் செயற்றிட்டத்தின் இம்மாத உதவியானது முழங்கா விலைச் சேர்ந்த வ.கஜேந்திரா என்ற மாணவனுக்கு வழங்கப்பட்டது.



உரும்பிராயைச் சேர்ந்தவரும் புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருபவரும் தாய்மண் ணின் மீதான அதீத நேசிப்பின் நிமித்தம் பல்வேறு உதவிகளை வழங்கி வருபவருமான நடேசன் சத்தி யசீலன் என்பவர் இம்மாணவனின் போக்குவரத்து தேவையினை இலகுவாக்கும் பொருட்டு அவரது பெற்றோரின் வேண்டுகோளுக்கிணங்க துவிச்சக்கரவண்டி ஒன்றினை வழங்கியிருந் தார். இவரது சமூக அக்கறையைப் பாராட்டுவதுடன் இவ் உதவியினை ஒழுங்குப டுத்தி உதவிய திலக்கிற்கும் எமது உதவிச்செயற்றிட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து உறவுகளுக்கும் ஒளிஅரசியின் சார்பில் நன்றிகளைச் சமர்ப்பிக்கின் றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கியமும் அதன் படைப்பாளர்களும் கால ஓட்டங்களால் மறக்கப் படக்கூடாத ஒரு உன்னத சக்தி. அந்த வகையிலேயே இலக்கியமுத்து என்னும் இப்பகுதி பிரசுரமாகின்றது.

கலையைப் படைக்கும் கவிஞன், அந்தக் கலைக்காகவே மட்டுமே படைக்கின்றானா? கலையுள்ளம், கற்பனைத்திறன், உந்துணர்வு இவை மட்டும் தான் கலையை உருவாக்கக் காரணங்களா? இல்லை, படைப்பதைப் பிறருக்குக் கொண்டு போக வேண்டும் என்று தான் எல்லோரும் விரும்புகின்றனர். தன்னு டைய எழுத்து, சிந்தனை, பிறருடைய மன தில் ஏதாவதொரு சலனத்தை, அசைவை






# படைப்புகள் சமூகத்திற்கான திறவுகோல்

கோபிகை

ஏற்படுத்த வேண்டும் என்று தான் விரும்புகின் றனர். அவ்வாறான இலக்கியங்கள் காலங்கள் கடந்தும் உயிர்ப்படைந்து கொண்டிருக்கின் றன. காலங்கள் கடந்தும் உயிரோட்டமாக விளங்கும் வகையில் தனது இலக்கியங் களைப் படைத்தவரும் ஈழத்தின் குறிப்பிடத் தக்க முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரு மான தெணியான் என்ற புனைபெயரால் அறியப்படும் கந்தையா நடேசன் (பிறப்பு: ஜனவரி 6, 1942யாழ்ப்பாணம், வல்வெட்டித் துறை பொலிகண்டி) என்பவரே எமது இம் மாத இலக்கியமுத்தாக மிளிர்கின்றார்.

மஞ்சள் வெயில் கவிந்த ஒரு அழகான பொன்மாலைப்பொழுதில் அவரைச் சந்திப் பதற்கான நேரத்தினைப் பெற்றிருந்தோம். முகம் மலர்ந்து அகம் குளிர்ந்து வரவேற்ற அவரது உபசரிப்பு உள்ளத்தை ஈர்த்தது. உடல் தளர்ந்த போதிலும் மனம் தளராத ஒரு இலக்கியவாதியா கவே அவரைப் பார்க்கமுடிந்தது. தன்னோடு கூடப்படித்த மாணவருக்கு கற்பிப்பதென்பது அனைவருக்கும் அமையாத ஒன்று, அந்த வரம் இவருக்கு கிடைத்திருந்தது. யா/ தேவரை யாளி இந்துக்கல்லூரி, யா/ விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியவை இவரைப் புடம்போட்ட பாடசாலைகள்.

ஆசிரியராக, உபஅதிபராக, தொலைக் கல்வி போதனாசிரியராக மட்டுமன்றி இடது சாரி கொள்கை சார் எழுத்துக்களை எழுதிக் குவித்த ஒரு ஆளுமையாளனாகவும் இவரது பயணம் தொடர்ந்தது. விவேகியில் 'பிணைப்பு' என்ற சிறுகதையுடன் ஆரம்பித்து ஏறக்குறைய 120 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி யிருக்கிறார். மேலும் புதினம், குறும் புதினம், கவிதை, வானொலி நாடகங்களும் எழுதி யுள்ளார். நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி என்ற 19 அத்தியா யங்கள் கொண்ட தொடரையும் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறு வயது முதல் வாசிப்பதில் அதீத நாட்டம் கொண்டவராக விளங்கிய இவர், கொக்கட்டிச்சோலை ஆசிரியர் கலாசாலையில் கற்கும் காலத்திலேயே தனது எழுத்துப்பயணம் ஆரம்பமானதாக கூறுகின்றார். அப்போதைய காலத்தில் சமூகத்தைப் பார்க்கும் போது தனது மனதில் ஏற்பட்ட கோபம், ஆதங்கம், துக்கம் போன்ற உணர்வுகளை வெளிக்காட்ட, தான் தேடிய வழியே எழுத்து என்கின்றார்.

மல்லிகை சஞ்சிகையே தனது எழுத்துக்களை அதிகம் சுமந்து வந்ததெனவும் அதன் ஆசிரியர் என்றும் தன்மீதும் தனது எழுத்துக்கள் மீதும் அதிக அன்பு கொண்டிருந்தார் எனவும் தனது எழுத்துலக வாழ்வு தனக்கு என்றுமே மனநிம்மதியையும் சந்தோசத்தையும் தரும் ஒன்றாகவே விளங்கியதாகவும் தான் பிறந்த வீட்டுப்பகுதி தெணியர் என அழைக்கப்பட்டதனால் தனது புனைப்பெயரை தெணியான் எனக் கொண்டதாகவும் கூறியவர், தனது குடும்பம் அதாவது மனைவியான மரகதம், பிள்ளைகளான உமாஞானசீலன், ஜானகி அகிலன், ந.ஆதவன், ந.துஷ்யந்தன் என முழுக்குடும்பமும் தனக்கான எழுத்துலகப் பணிகளுக்கு எதுவித இடைஞ்சலும் தராது இருந்தமையும் தனது வாழ்வில் வாய்ப்பாக அமைந்தது எனவும் ஒரு எழுத்தாளனுக்கு உந்து சக்தியாக இல்லாவிட்டாலும் இடைஞ்சல் இல்லாததாக குடும்பம் அமையவேண்டும், தான் அந்த வகையில் அதிஷ்டசாலி எனவும் வீட்டு நிர்வாகம், பிள்ளைகளின் கல்வி என அனைத்துமே மனைவியின் திறனால் ஆனது, இன்று நான்கு பிள்ளைகளுமே அரச உத்தியோகத்தர்களாக சிறந்த நிலையில் இருப்பதற்கு என் மனைவியின் அர்ப்பணிப்பே காரணம் எனவும் புன்னகையுடன் கூறிக்கொள்கின்றார். உங்களை கவர்ந்த எழுத்தாளர்கள் பற்றி கூறுங்கள் என வினவிய போது காண்டேயர், மாக்ஸிம் கார்க்கி, ஜெயகாந்தன், மலையக எழுத்தாளர் முகமது பஷீர், சிவசங்கரன்பிள்ளை ஆகியோரது படைப்புக்களை விரும்பி வாசித்தேன் எனக்கூறினார்.

இன்றைய இளம் படைப்பாளர்களின் எழுத்துக்கள் பற்றிய உங்கள் பார்வை? என்ற போது, இன்றைய படைப்பாளர்கள் பற்றி கூற விரும்புவது ஒன்றே ஒன்று தான், அதாவது அவர்கள் நிற்கின்ற தளம் என்பது வித்தியாசமானது. எங்களுடைய காலத்தில் எழுத்துக்கள் கொள்கை சார் அடிப்படையில் இருந்தன. தற்போது போர்க்காலம், களமுனை பற்றியதாகவே அதிகம் அமைகின்றது. தொடர்ந்து அவலத்தையே சொல்வதை விட்டு சமூக முன்னேற்றம் கொண்ட கருக்களை மையமாக கொண்டும் எழுத வேண்டும். அது தவிர அன்று சகல படைப்புகளும் அனுபவமிக்க ஆசிரியர் ஒருவரால் பார்வைக்கு எடுக்கப்பட்டே பிரசுரத்திற்குச் செல்லும். அதனால் அந்த படைப்பு செம்மைப்படுத்தப்படும். தற்போது அத்தகைய பணி நடைபெறுவதில்லை.

அதற்காக இளம் படைப்பாளர்கள் திறமையற்றவர்கள் அல்ல. அதிகம் வாசிப்பதாலும் தம்மைத்தாமே செம்மைப்படுத்துவதாலும் அதீத திறன்கொண்டவர்களாக மாறமுடியும்.

பல்வேறு விருதுகளைப்பெற்ற தெணியான் அவர்கள் கம்பன் கழகம் வழங்கிய இலக்கியத்திற்கான கௌரவ விருது (மரக்கொக்கு, கானலின்மான், குடிமைகள்), வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் விருது (காத்திருப்பு, மரக்கொக்கு), ஹொடகே விருது (குடிமைகள், ஒடுக்கப்பட்டவர்கள்) தமிழ் நாடு சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது (ஒடுக்கப்பட்டவர்கள்), இலங்கை இலக்கியப்பேரவை நாவேந்தன் விருது (நாவல்), சாகித்யரத்னாவிருது, இலங்கைதமிழ்மொழி தின விழாவின் போது வழங்கப்பட்ட இலக்கியத்திற்கான வாழ்நாள் விருது போன்ற விருதுகளின் சொந்தக்காரர். விசேடமாக, ஒரு எழுத்தாளனின் மனைவிக்கான கௌரவம் என்பது எழுத்தாளனின் மனைவி என்பது தான், அதிலும் சாகித்ய விருது விழாவின் போது தன்னளவிற்கு தனது மனைவிக்கும் கௌரவம் அளிக்கப்பட்டமை தன்னாலும் மனைவியாலும் என்றும் மறக்கமுடியா தருணங்கள் எனக்கூறி அன்றைய பொழுதின் சலாக்கியத்தை எம்மோடும் பகிர்ந்துகொண்டதோடு, சிந்தாமணி ஆசிரியர் ராஜ அரியரட்ணம், வீரகேசரி வார இதழ் ஆசிரியர் ராஜகோபால், மதிப்பிற்குரிய பேராசிரியர் சிவத்தம்பி இவர்களுடன் தனக்கு பவழ விழா நடாத்தி நூல் வெளியிட்டு சிறப்பித்த ஜீவநதி ஆசிரியர் பரணிதரன் ஆகியோருக்கு என்றும் நன்றியுடையவன் எனவும் குறிப்பிட்டார்.

சமூகம் பற்றிய தெளிவு, பார்வையில் விசாலம், கருத்திற்கேற்ப நகர்த்திச்செல்லும் திறன் ஆகியவற்றைக்கொண்ட இலக்கிய ஆளுமை ஒருவரோடு உரையாடக்கிடைத்த தருணத்திற்கு ஒளிஅரசியின் சார்பில் நன்றிகூறி விடைபெற்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சந்தியா சந்தோஷ்

# சந்தோசத் திருநாள்

கல்யாணம் என்பது
பூர்வபந்தம்.
உடலோடுயிர் குடியேறிட
வாழும் சொந்தம்.

சம்சாரம் என்பது
ஆதிஅந்தம்.
ஒன்றாகிடும் உறவாகிடும்
அன்பால் என்றும்.

ஈரேழு ஜென்மமே
மணமாலை பந்தமே
ஆயிரம் காலமே
வாழுமே.

வெளிச்சமாகும் வீடு
பெண் விளக்கேற்றினால்,
வெற்றியாகும் வாழ்வு
பெண் வழி காட்டினால்,
விலகிப்போகும் போது
பெண் விரல் தீண்டினால்!
தெய்வம் கூட இளகும்
பெண் வரம் வேண்டினால்.

இங்கு ஆணின் பின்பலம்
என்றும் ஆகும் பெண்பலம்.
நீ ஏது? நானேது இங்கே?
நம்மையெல்லாம் சுமந்தவள்
தாயடா

தலைவன் கூடும் போது
பெண் விருந்தாகிறாள்.
தலைவன் வாழும் போது
பெண் மருந்தாகிறாள்.
தலைவன் கொஞ்சும் போது
பெண் சேயாகிறாள்.
தலைவன் துஞ்சும் போது
பெண் தாயாகிறாள்.

பெண்ணின் பெருமை சொல்லவா?
கடல் போன்றதல்லவா?
நீர் வாழ நீர் வார்க்கும் மேகம்
அதற்கொரு உவமை தான் பெண்மையே!

ஒரு கல்யாணம் மலர்ந்து மணம்பரப்ப வேண்டுமானால் கணவன் நல்ல நண்பனாக இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். இன்றைய காலத்தில் கணவன் நண்பனாக இருப்ப தென்பது மிக அரிதாகிச் செல்கின்றது. அதுவே குடும்ப வாழ்வில் சிக்கல்களை உண்டுபண்ணி சின்னச்சின்ன பிரச்சினைகள் எல்லாம் பூதாகரமானதாக மாற காரணமாகின்றது. கணவனும் மனைவியும் புரிந்துணர்வுள்ளவர்களாக வாழ்ந்தால் குடும்பம் என்ற அழகான சக்கரம் தங்குதடையின்றி சுற்றிக்கொண்டே இருக்கும்.

இல்லற வாழ்வில் பெண்ணானவள் இரண்டு விதமான வழிகளில் அடங்கிவிடுகின்றாள். ஒன்று அன்பினால் அடக்கப் படு கின்றாள், அல்லது அதிகாரத்தால் அடக்கப்படுகின்றாள். அன்பினால் அடக்கப்படும் மனைவியின் உள்ளத்தில் கணவன் கடவுளாகவும் அதிகாரத்தினால் அடக்கப்படும் மனைவியின் உள்ளத்தில் துச்சாதனனாகவும் பதிந்துவிடுகின்றான்.

ஒரு மனைவியின் அதீத எதிர்பார்ப்பென்பது தனது தேவை களை கணவன் பார்த்துப்பார்த்து நிறைவேற்றவேண்டும் என்ப



தில் தான் உள்ளது. மனைவி தனது தேவைகளை தானே பார்த்துக்கொள்வாள் என கணவன்மார் எண்ணுவதில் தான் இடைவெளிகள் ஆரம்பமாகின்றன.

இப்படித்தான் ஆதவனும் நினைத்தான். ஒரு நிறுவனத்தின் மேலதிகாரியாக பணிபுரியும் தனது மனைவி கிருத்திகாவைப்பற்றிய அவனது கணிப்பும் அவ்வாறு தான் இருந்தது. ஆனால் கிருத்திகாவின் உள்ளமோ, தன்னை நேசிக்கும் கணவன் கிடைக்கவில் லையே என எப்போதும் ஏங்கியது. நண்பி மாலதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புரிந்துணர்வு + விட்டுக்கொடுப்பு = இனிய இல்லறம்

# நந்தவனப் பூக்கள்

நெற்றியில் வைக்கும் பொட்டு முதல் காலில் அணியும் செருப்பு வரை அனைத்தும் கணவன் தனக்கு வாங்கித்தந்தவையே எனக்கூறும்போது மனதில் அடி ஆழம் வரை ஒருவித வலி ஊடுருவுவதை உணரவே செய்தாள். ஆதவன் அவள் மீது அன்பில்லாதவன் எனச்சொல்லமுடியாது. ஆனால் அவளுக்கு தேவையானவற்றை வாங்கிக்கொடுப்பதையோ, அவளோடு அமர்ந்து சகஜமாக பேசுவதையோ விரும்புவதில்லை. எப்போதும் ஒருவித இடைவெளி இருப்பது போலவே உணர்ந்தாள்.

அன்று சனிக்கிழமை என்பதால் மதியத்துடன் வேலை முடிந்துவிட்டதால் ஆதவன் தனக்காக சில பொருட்களை வாங்குவதற்காக கடைக்குச்சென்றான். அங்கே, கிருத்திகாவின் தோழி மாலதியின் கணவனைக் கண்டதும் இயல்பாக பேசிக்கொண்டே தனக்கான பொருட்களை வாங்கியபடி வெளியே வந்தான். கூடவே வந்த மாலதியின் கணவன், ''சரி, நாள் லேடிஸ் சைற்ல சில பொருட்கள் வாங்க வேண்டியிருக்கு, இதோ வர்றேன்'' என்றபடி நடந்ததை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திரும்பி வந்த மாலதியின் கணவனின் கையில் இருந்த பொருட்களைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்த ஆதவன், ''இதென்ன, இதெல்லாம் உங்க மனைவி வாங்கிக்க மாட்டாங்களா?'' என்றான்.

''அவவாங்குவா, ஆனாநான்வாங்கிகுடுத்தா தான் சந்தோசமா அலங்காரம் பண்ணுவா, உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா, எந்த பெண்ணுக்குமே, எவ்வளவு படிச்சிருந்தாலும் எப்படிப்பட்ட பதவியில இருந்தாலும் அவளுக்காக புருசன் பாத்துப்பாத்து வாங்கிக்குடுக்கிறதை அனுபவிக்கிறது தான் சந்தோசம், ஏன், உங்க மனைவியையே எடுத்துக்கொள்ளுங்களேன், நீங்க வாங்கிக்கொண்டுபோய் குடுக்கிறதை வாங்கும் போது அவங்க முகத்தில ஒரு சந்தோசம் வருமே, அதைப்பாத்தாவது நீங்க புரியிறது இல்லையா?''

'நான் எப்போது வாங்கி குடுத்திருக்கின்றேன், அவள் சந்தோசப்படுவதற்கு?' என தனக்குள் நினைத்த ஆதவன் ஏதோ எண்ணியவனாக மாலதியின் கணவனிடம் இதுவரை தான் அப்படி எதுவும் செய்ததில்லை என்பதைக்கூறி அவனிடம் இருந்து குற்றம் சாட்டும் பார்வை ஒன்றையும் பெற்றுவிட்டு மாலதியின் கணவனை அழைத்துச்சென்றே மனைவிக்காக பல பொருட்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு விரைந்தான்.

அவனிடம் இருந்து ஒவ்வொன்றாக வாங்கிய மனைவியின் முகத்தில் பூத்த நாணப் புன்னகை இதுவரை அவன் காணாதது. அவளையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான் ஆதவன். மெல்ல நிமிர்ந்து கணவனைப் பார்த்த கிருத்திகா, ''என்ன, ஏன் அப்பிடி பாக்கிறீங்க,'' என்றாள்.


''இல்ல, இவ்வளவு நாளையும் வீணாக் கிட்டனே என்றுதான்,'' என்றதும் முகம் குங்கும நிறம்கொள்ள எழுந்து உள்ளே சென்ற மனைவியிடம்,

''பாத்து... பாத்து'' என எனக்கூறிய கணவனை பொய்யாய் முறைத்தபடி கதவின் பின்னால் மறைந்து கொண்டாள்.

**அங்கே புதிதாய் ஓர் இல்லறம் உதயமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இராகலை தயானியின் அக்கினியாய் வெளியே வா



-அ.லெட்சுமணன்-




சமகாலத்தில் இராகலை மண்ணை அடையாளப்படுத்தி வெளிவந்துள்ள கவிஞர்களில் இராகலை தயானி கவனத்திற் குரியவராகிறார். மலையக பெண் கவிஞர் களின் கவிதை பற்றிய பார்வைக்கு வளம் சேர்க்கும் வகையில் தயானியின் கவிதைகள் குறிப்பிடத்தக்கதாகிறது. ஆங்காங்கே தோன்றும் மலையக பெண் கவிஞர்களின் கவிதைகள் நூலுருவம் பெறுவது அபூர்வ மாக கொள்ளப்படுகின்ற நிலையில் இரா கலை தயானியின் அக்கினியாய் வெளியே வா தொகுப்பின் வரவு இத்துறை ஆர்வலர் களுக்கு திருப்தியை ஏற்படுத்தக்கூடிய தாகும்.

இராகலை தயானியின் கவிதை கள் பற்றி அருணா சுந்தரராசன் தனது அணிந்துரையில் குறிப்பிடும்போது 'துய ரங்களை மட்டுமே வாழ்க்கையாகக் கண்ட மலையகச் சமூகத்திலிருந்து தனது கவிதைப் பயணத்தை தொடங்கியிருக்கிறார் இரா கலை தயானி. மகாகவி பாரதியின் ரௌத் திரத்தைத் தன் எழுதுகோலில் நிரப்பியுள்ள வீரியம் இவரது வரிகளில் தெறித்து விழு கின்றன. தேயிலைத் தோட்டங்களில் பரந்து கிடக்கும் இயற்கை அழகைப் பாடுவதைக் காட்டிலும் அங்கு அல்லலுறும், வஞ்சிக் கப்படும் மானிட உணர்வுகளை கவிதை யாக்க முனைந்திருப்பது தயானியின் மனித உரிமைச் சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்திருக்கிறது' எனக் குறிப்பிடுகிறார். இராகலை தயானியின் இத்தொகுப்பிலுள்ள 57 கவிதைகள் பேசுகின்ற விடயங்கள் எத் தனை முக்கியத்துவம் வாய்ந்தவை என்ப தற்கு மேற்சொன்ன அணிந்துரை வரிகள் குறிப்பிடத்தக்கதாகும்.

கவிதைகளில் அழகியல் வெளிப்ப டுத்தும் பாங்கைவிட தான் சார்ந்த சமூகம் பற்றிய உந்துதலை பற்றிய கவிதைகளே உயிரோட்டம் கொண்டனவாக அமையும். மனிதநேய வெளிப்பாட்டுடன் ஏற்ற இறக் கங்களை சாடியும் அமையப்பெறும் கவிதை களே உற்றுநோக்க ஏதுவாக அமையும்.

அவ்வாறான ஆழப் பார்வையுடன் கவி தைகளை யாத்திருப்பதை இக் கவிதை களில் காணலாம். இப்புனைவுகளில் சமூ கம் மீதானதும், மனிதம் மீதானதுமான அக் கறை வியாபித்திருப்பதும் கவனிப்பிற்குரிய தாகும்.

மலையக மக்களின் வரலாறு, வாழ்வி யல், துன்பியல் தரும் வேதனைகளை தான் உணர்ந்த வலியின் பிரவாகத்தோடு அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் தரிசிப்பிற்குரியவையாக அமைந் துள்ளன. சமகால அவலத்தை பற்றி ஆதங்கப் படும் அதற்காக தொடக்கம் எதுவென அறிய மனம் தூண்டும்.

வரலாறு போதிக்கும் துன்பியலை பேச விளையாது தீர்வுகளை நோக்கி நகரும் எத்த னிப்புகளே இவரின் கவிதைகளில் முனைப்பு பெறுகின்றன. வரலாற்றை உணர்ந்த நிலை யில் தன் எழுத்துக்கள் அடுத்த கட்ட நகர்வை நோக்க வேண்டும் என தன்னை நிர்ப்பந்தித்தி ருப்பதை அறிய முடிகிறது. இருந்தபோதிலும் தன்னை மீறிய வகையில் வரலாற்றை வலி யுறுத்தும் வாதங்கள் சபிக்கப்பட்ட சனங்கள் நாங்கள் எனும் தலைப்பில் அமைந்த கவி தையில் வெளிப்படுகின்றது. உரிமைகள் எவ் வாறு மலையகத்தில் அனுபவிக்கப்படுகின் றன என்பது பற்றிய பதிவு இக்கவிதையில் இடம் பெறுகிறது.

**தராசுக்குள் போட்டால்**
**உழைப்பு தாழ்ந்திருக்கும்**
**உரிமை உயர்ந்திருக்கும்**

**என உரிமைக்கான முழக்கத்தை தொடங்குவதும்...**

**தாழ்த்தப்பட வேண்டிய சிலவற்றில்**
**நாங்கள் உயர்ந்துள்ளோம்**
**சிசு மரணம், வறுமை, இறப்பு வீதம்**
**என்பவற்றில் மட்டும்**
**நாங்கள் இமயம் தான்**

எனக் குறைப்பட்டுக் கொள்வதோடு ஊதிய உயர்வு, வீட்டுரிமை, நிலவுரிமை பற்றியெல்லாம் வினா தொடுக்கிறார்.

பெண்ணியப் பார்வையின் ஊசாடலும் எல்லாக் கதைகளிலும் உட்பொதிந்த வண் ணம் உள்ளது. 'பிஞ்சிலே பழுத்த பழம்' 'படுக்கை வெறியர்கள்' 'நகல்' ஆகிய கவி தைகளில் பெண்ணிலை வாதம் முனைப்பு பெறுகிறது. 'பேனையால் உமிழ்ந்தாள்' சிறை உடைத்து சிறப்பு நிலைக்கான தெளிவை தோற்றுவிக்கிறது.

விடியல் மின்சார ஒழுக்கு, முதல் மருந்து கல்லறை, நவ காலனித்துவம் திடம், மனித ஏடு, பாவம்.. ஆகிய கவிதைகளில் சில வரி களில் அமைந்திருந்தாலும் விரிந்த கருத்துக்களை தன்னுள் பொதித்து வைத்திருப்பதைக் காணலாம்.




இராகலை தயானியின் கவிதைகளில் அவலங்கள், அவஸ்தைகள் நிறையவே பேசுபொருளாகி அதற்கடுத்த கட்டமாக நம்பிக்கைக் கீற்றுகளையும் அதனூடு தரிசிக்க முடிகிறது. பெண்ணியம், மாக்சி யம், வர்க்க அடக்கு முறை என்ற நிலைப் பாட்டில் தன் சார்ந்த சமூக இருப்பு மேன்மை பற்றிய ஆழ நோக்கம் கொண்டமைந்தன வாக காணப்படுகிறது. வர்ணனைகளை குறைத்து யதார்த்தமான முன்வைப்பு இவரது கவிதைகளில் மேலோங்கியுள்ளமை குறிப்பி டத்தக்கது. அடக்கு முறைகளுக்கு எதிரான ஆவேசம் மேலோங்கியிருப்பதும் மனிதம் போதிக்கும் அணுகுமுறையும் லாவகமும் சிறப்பிற்குரியதாகும்.

'அக்கினியாய் வெளியே வா' அவ லங்களுக்குரிய பதிவாக நிறையவே காணப்பட்டாலும் தத்துவங்களை உட்சு மத்தும் நிலையில் கவிதைகளின் உயிர்ப் பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றமை பலவீனமாகக் காணப்படுவதும் குறிப் பிட வேண்டியதாகும். இச் செயற்கைத் தன்மை பிரச்சினையை முறையாகவும் சரியாகவும் இனங்காணுவதில் சிக்கல் நிலையை தோற்றுவிக்கிறது. அடுத்த கட்ட தீர்வு நிலையில் இருந்து சிந்திக்கும் போது இலக்கு நோக்கி நகர வேண்டிய நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும். நம் பிக்கை வீச்சுக்கள் இன்னமும் கூர்மைப் படுத்தப்பட்டிருக்கலாம். தீர்வுக்கான வழிகள், தீர்வுகள் முன்வைக்க வேண்டியதும் சமூக உணர்வுமிக்க படைப்பாளியின் கடமை யாகக் கொண்டும் படைப்புக்கள் வெளிவர வேண்டிய தேவையும் உணரப்படல் வேண் டும். அதற்கான ஆளுமை இராகலை தயானி யிடம் இருக்கிறது. அக்கினியாய் வெளியே வா மலையக இருப்பு குறித்த சிந்தனை யோட்டத்தை நிறையவே வலியுறுத்துகிறது. மலையக கவிதை இலக்கியம் தொடர்பான பார்வையில் அதுவும் பெண்களின் குரல் தொடர்பில் திருப்தியை உணரமுடிகிறது.

இராகலை தயானியின் எழுத்துப்பயணம் வீச்சுடன் தொடர ஒளிஅரசியின் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காப்பியக்கோ (75)

ஆல மரத்திற்கு
இந்த
அருகம்புல்லின் அன்புத்தூறல்!

சமுத்திரத்திற்கு
இந்த
சிற்றோடையின் சோபனங்கள்!

பெரும்புலவனுக்கு
இந்த
சிறுகவியின் சினேகங்கள்!

காப்பியக்கோ

பழகுதற்கு எளியவர்
பா திறத்தில் புலி இவர்
எல்லோருக்கும் இனியவர்
எதிர்த்தவருக்கு முனி இவர்

ஒரு ஓவியத்தின் நேர்த்தியை
இவர் காவியத்தில் காணலாம்
காவியத்தின் உள்ளே
தமிழ் வாழ்ந்திடுமே நாள் எல்லாம்

சூரியனும் விரும்புகின்ற
வெளிச்சம் நீங்கள்!
சுயமோடு வாழ்ந்துவரும்
அனிச்சம் நீங்கள்!

எங்களுக்கு
காப்பாய் இருந்துவரும்
வாப்பா

பவள விழா கண்ட
பெருமகனே
உங்கள்
சதய விழாவும்
சிறப்புடன் நடக்கட்டும்.



தஞ்சாவூரான். துபை

# வருடம் பிறக்கிறது

கடந்து செல்லும் ஆண்டும்
கனவுகளோடு தான் பிறந்தது
கனவுகள் தரித்து நிற்க
காலமகள் விரைவாய் சென்றுவிட்டாள்

கடக்கும் ஆண்டில்
கடந்து வந்த நினைவுகள்
கனதியாய் கனக்கிறது

மகவைக் கண்டு மகிழ்ந்தவரும்
தொழில்துறை தேடி அலைந்தவரும்
பட்டம் பெற்றும் பதைத்தவரும்
சொந்த நிலத்தில் கால் பதித்தவரும்

போராடிக் களைத்தவரும்
பெறுபேறால் நனைந்தவரும் கரைந்தவரும்
ஏமாற்றியே பிழைத்தவரும்
ஏமாந்து திகைத்தவரும்
வென்றவரும்
தோற்றவரும்
கணக்கிட்டாள் வார்த்தை போதாது

நட்சத்திரம் மாறுவதும்
திதிகள் புதிதாய் பரிணமிப்பதும்
மாதம் மலர்வதும்
வாரம் சுழர்வதும்
கரணம் பெருகுவதும்
காலம் காலமாய் காண்பவை தான்

ஆண்டு முழுக்க
ஆனந்தம் என்றால்
ஆண்டவனைத் தேட
ஆவல் இராது

மலரும் வருடம்
மகிழ்வாய் அமைய
இடர்கள் எல்லாம்
கழிந்து போக
கனிவாய் வாழ்வு
இனிமை காண
இறைவனை வேண்டுவோம்



நி.கவியழகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பச்சை ஓணானும் சில எறும்புகளும்.


காலம் கரைபுரண்டு ஓட
பச்சை ஓணானும் ஓடுது.

பச்சை ஓணானைக் கண்டால்
குத்தி ரத்தம் எடு எடு என
ஆச்சி சொல்லுவா
அதுசரி தான்
இது பச்சை ஓணான்களின் காலம்
குருதி எடுக்கவும்
கொடுக்கவும் பழகுதல்
ஒண்டும் அபத்தம் இல்லை
நாம் எறும்புகளாக இருப்பதால்,
எம்மை கவர்வதும்
எம் தியாகங்களைக் களவாடுவதும்

கால இடைவெளிகளை விடுவதில்லை.
இடைவெளிகள் எம்மை விடுவதில்லை.
விடுவிப்பின் நாட்கள் நீளலாம்.
இடைவெளிகளை நிரப்புவது
எறும்புகளின் இறுதி யுத்தம்.
பச்சை ஓணான்களுக்கு
ரத்த தாகம் தீர்க்கும் நாட்கள்
ஒருபோதும் ஓயப்போவதில்லை.



த. செல்வா
கிளிநொச்சி.



# நவீன இராமன்கள்

கல்விக் காலத்தோடு
கலைந்து போன
தோழிகளாயிருக்குமோ
என்றெண்ணினாலும்
அச்சப்பட்டே
அணைத்துவிடுகின்றேன்
புது எண்களிலிருந்து வரும்
தொலைபேசி அழைப்புகளை!

நட்போடு கடந்து செல்லும்
புன்னகை முகங்களையும்
தவிர்த்துவிட்டேன்
சிடுமூஞ்சி என்ற என்
இயல்புக்குப் பொருந்தாத
பட்டத்தோடு!

முகநூலில் முகம் காட்டாமல்
என் திறமையைக் காட்டினாலும்
வருகின்ற வாழ்த்துக்களுக்கு
இயல்பாய் பதிலளிக்க முடிந்ததில்லை
உன் கேள்விகளுக்கு
பதிலளிக்கும் தெம்பில்லாததால்!

பேருந்துக்கு நேரமாகையில்
வராத பேருந்தை விடவும்
உன் கேள்விகளுக்குப்
பதில் சொல்ல வேண்டுமென்பதால்
வருகின்ற எரிச்சலின் மேல்தான்
அதிக கோபம் வருகின்றது!

நவீன கண்ணகியாய்ப்
பெண்கள் வாழ்ந்தாலும்
தீக்குளிக்காத சீதையாக
வலம் வந்தாலும்
இராமன்களின் இயல்பை
இக்காலத்திலும்
மாற்றிவிட முடியவில்லை!



பொலிகையூர் ரேகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாரிசவாதமும் பெண்களும்


இளம் பெண்களின் பாரிசவாதம் ஏற்படும் சாத்தியங்கள் குறைவாகும். ஆனால், வயது செல்லச்செல்ல அதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. சாதாரணமான ஆபத்துக்காரணிகளை விட சில மேலதிகமான ஆபத்துக் காரணிகள் பெண்களில் காணப்படு கின்றன.

அவையாவன: கர்ப்பத் தடை மாத்திரை களின் பாவனை, ஓமோன் சார்ந்த சிகிச்சை முறைகள், கர்ப்பகாலம், ஓமோன்மாற்றுச் சிகிச்சைமுறை, ஒற்றைத்தலைவலிஎன்பன வாகும். ஏனைய ஆபத்துக் காரணிகளான அதிகரித்த உடல்நிறை, உயர்குருதியமுக்கம், அதிகளவு கொலஸ்ரோல் போன்றவை ஆபத்தை மேலும் அதிகரிக்கின்றன. குடும்பத் தில் ஒருவரோ ஒன்றுக்கு மேற்பட்டவர்களோ பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் அப் பெண்களில் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிக அதிகமாகும்.

பெண்களில் ஈஸ்திரஜன் (Oestrogen) என்ற ஓமோன் சாதாரண அளவில் காணப் படுவது உடலுக்கு பாதுகாப்பானது. ஆனால், கர்ப்பத்தடை மாத்திரைகள் பாவிப்பதனாலோ



கர்ப்பம் தரித்த வேளையில் இவ் ஓமோனின் அளவு அதிகரிப்பதாலோ பாரிசவாதம் ஏற் படும் வாய்ப்பு அதிகமாகும். மாதவிடாய் ஒழுங்கீனம், கர்ப்பத்தை தாமதிப்பதற்காக நாம் உபயோகிக்கும் கர்ப்பத்தடை மாத்திரை களில் ஈஸ்திரஜன் (Oestrogen), புரஜெஸ் ரோன் (Progesterone) போன்ற ஓமோன்கள் சாதாரணமாக உடலில் உள்ள அளவைவிட பலமடங்கு அதிகமாகவே காணப்படுகின்றன. வேறு வேறு வகையான கர்ப்பத்தடை மாத்திரைகள் இவ் ஓமோன்களின் வேறுபட்ட செறிவில் வேறுபட்ட சேர்க்கையில் காணப்படுகின் றன. கர்ப்பத்தடை முறையில் உள்ள Patch எனப்படும் ஒட்டிகளும் மாத்திரைகளைப் போலவே தொழிற்பாட்டைக் கொண்டு ள்ளன. இரண்டுமே பாரிசவாதம் ஏற்படும் சாத்தியத்தை அதிகரிக்கின்றன.



கர்ப்பத்தடை மாத்திரைகளை உபயோ கிப்பவர்களில் குருதி கட்டிபடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். எனவே அவர்க ளில் பாரிசவாதத்துடன் மாரடைப்பு, காலில் உள்ள நாளங்களில் குருதி கட்டிபடுதல் போன்றனவும் அதிகமாக ஏற்படுகின்றன.

இவ்வாறு பாரிசவாதம் ஏற்படும் சாத்தி யக்கூறு, குறைந்தளவு ஈஸ்திரஜன் மற்றும் புரஜெஸ்ரோன் ஓமோன்களைக் கொண்ட கர்ப்பத்தடை மாத்திரைகளை பயன்படுத் தும்போது குறைவடைகிறது. கீழ்வரும் மேலதிகமான ஆபத்துக்காரணிகள் காணப் படுமாயின் பெண்களின் பாரிசவாதம் ஏற் படும் சாத்தியக்கூறு மேலும் அதிகரிக்கிறது.

★ புகைப்பிடித்தல்
★ உயர்குருதியமுக்கம்
★ 35வயதுக்கு மேற்பட்டோர்
★ குடும்பத்தில் யாராவது 45 வயதுக்கு குறைவான வயதில் குருதிகட்டிபடுதல் நோய்க்கு ஆளாகியிருத்தல்.
★ அதிகரித்த உடல்நிறை
★ சலரோகம்
★ ஒற்றைத் தலைவலி
★ பாரியசத்திரசிகிச்சைக்குஆளாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யமை

★ பாரிய எலும்புகளின் உடைவு காரணமாக நீண்ட காலம் நடமாடமுடியாமை.

கர்ப்பம் தரிப்பதால் உண்டாகும் ஆபத்துக்களையும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்தே கர்ப்பத்தடை மாத்திரைகள் பாவிக்கமுடியுமா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும். மேற்கூறிய ஆபத்துக்காரணிகளைக் கொண்டிருக்காத பெண்களுக்கு கர்ப்பத்தடை மாத்திரைகள் பாவித்தாலும் பாரிசவாதம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவாகும்.

வேறு கர்ப்பத்தடை முறைகள் அவையாவன:-


1. கருப்பை உட்செலுத்தி சாதனங்கள் (Intra Uterine Devices) இவற்றில் சில ஓமோன் அற்றவை, சில புரஜெஸ்ரோன் ஓமோனை சாதாரணமாக உடம்பில் உள்ள வாறே கொண்டுள்ளன.

2. கர்ப்பத்தடை செருகிகள் (Implants) இவை மேல் கையின் தோலின் கீழ் வைக்கப்படும். பரஜெஸ்ரோன் ஓமோனை சிறிது சிறிதாக விடுவிக்கும். இவை பாரிசவாதம் ஏற்படும் சாத்தியத்தை அதிகரிப்பதில்லை. இருப்பினும் ஏற்கனவே பாரிசவாதம் ஏற்பட்டவர்கள், மாரடைப்பு ஏற்பட்டவர்கள் இம்முறைகளை பாவித்தல் ஆபத்தானதாகும்.

ஓமோன் மாற்று சிகிச்சைகள் (Hormone Replacement Therapy/HRT) தற்போது நடைமுறையில் உள்ளன. சூலகங்கள் ஈஸ்திரஜன் மற்றும் புரஜெஸ்ரோன் ஓமோன்களை சுரக்கின்றன. வயது செல்லச்செல்ல இவ் ஓம் மோன்களை சுரக்கும் தன்மை குறைவடைகின்றது. சிலருக்கு சத்திரசிகிச்சைசகளால் மற்றும் சில காரணங்களால் அகற்றப்பட்டிருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் ஓமோனின் அளவு உடலில் குறைவடைகின்றது. இதனால் பெண்களில் உடல், உள மாற்றங்கள் ஏற்படுகிறது. இந்நிலையே மாதவிடாய் நிறுத்தாததால் (Menopause) இனால் உண்டாகும் மாற்றங்களுக்கு, செயற்கையாக ஓமோன் மாத்திரைகளாக வழங்கப்படும் சிகிச்சையே ஏகீகூ எனப்படுகின்றது. இதனால் பாரிசவாதம் ஏற்படும் ஆபத்து சிறிதளவே உள்ளது. இவற்றை குறுகிய காலம் பயன்படுத்தும்போது (5வருடங்களைவிட குறைவாக) பாரிசவாதம் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் குறைவாகும். எனினும் 5 வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கும்போது பாரிசவாதம் ஏற்படும் சாத்தியம் அதிகமாகும். எனவே வைத்தியரின் ஆலோசனைப்படியே இச்சிகிச்சையை தொடங்கவேண்டும்.

சில இளம் பெண்களில் கர்ப்பமாயுள்ளபோது ஏற்படும் உயர்குருதியமுக்க நிலையால் குருதிக்குழாய்களில் ஏற்படும் மாற்றங்களாலும் பாரிசவாதம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமாகும் எனினும் இது அரிதாகவே ஏற்படுகிறது.

கர்ப்பகாலத்தில் உயர் குருதியமுக்கம் காணப்பட்ட பெண்கள் குழந்தை பிறந்த பின்னரும் தொடர்ச்சியாக குருதி அமுக்கத்தை பரிசோதித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் இவர்களில் உயர் குருதியமுக்கம் ஏற்பட்டு பாரிசவாதம் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகும்.





சிலருக்கு கர்ப்ப காலத்தில் நீரிழிவு (சலரோகம்) ஏற்படுகின்றது. இது தற்காலிகமான நோயாகும். குழந்தை பிறந்த பின் சாதாரண அளவுக்கு குருதிக் குளுக்கோஸ் மட்டம் பேணப்படும,; இருப்பினும் அவர்கள் கர்ப்பகாலத்தில் தொடர்ச்சியாக குருதிக் குளுக்கோஸ் அளவை பரிசோதித்தல் வேண்டும். ஏனெனில் இவ்வாறான நிலையும் பாரிசவாதத்துக்கு ஆபத்தான காரணமாகும்.

ஒற்றைத் தலைவலியுடன் (Migraine) வேறு உடல் சார்ந்த அறிகுறிகளான வாந்தி, குமட்டல், சத்தங்களை தாங்க முடியாமை, பார்வையில் அசாதாரணமான மாற்றங்கள் என்பனகொண்ட பெண்களிலும் பாரிசவாதம் ஏற்படும் சாத்தியங்கள் அதிகமாகும். எனவே இவ்வாறான ஒற்றைத் தலைவலி உடையவர்கள் வைத்திய ஆலோசனையை நாடவேண்டும். இவர்கள் புகைப்பிடிப்பவர்களாயின் அவ் ஆபத்து மிகவும் அதிகம். எனவே இவர்கள் கண்டிப்பாக புகைத்தலை நிறுத்தவேண்டும்.

Dr. அஜினி அரசலிங்கம்
நரம்பியல் நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கட்டுரையாக்கம்
(இரா. நிஷாந்தன் ஆசிரியர்
கிளி/இராமநாதபுரம் ம. வி)



# புகழேந்திப் புலவரின் கவியாற்றல்

தமிழ் இலக்கியங்களில் பாடல்களை அழகுற புனையும் வல்லமை படைத்தவர்கள் புலவர்கள். அத்தகைய புலவர்கள் சில சமயங்களில் தமக்குள் போட்டியுடன் நடந்து கொண்டுள்ள தன்மைகளும் ஏராளம் உள்ளன. அவ்வாறான காட்சி ஒன்றை இங்கு காணுவோம்.

ஒருமுறை ஔவையார் சோழ நாட்டிற்குச் சென்றிருந்தார். அங்கே ஒரு வீதியில் திண்ணை ஒன்றில் அமர்ந்திருந்தார். அப்போது சோழ மன்னன் வீதியுலா வந்து கொண்டிருந்தான். அவருடன் அரசனது அவைக்களப் புலவர்களாக விளங்கும் புகழேந்தி, மற்றும் ஒட்டக்கூத்தர் ஆகியோரும் உடன் வந்தனர். ஒட்டக்கூத்தர் சற்றுக் கர்வம் கொண்டவர். மற்றைய புலவர்கள் பாடும் கவிகள் மீது பிழை காண்பவர். இதனால் ஒட்டக்கூத்தரின் கர்வத்தை அடக்குவதற்கு விருப்பம் கொண்ட ஔவையார், அங்கு வந்த அரசனுக்கு தன் ஒரு காலை மடக்கி மரியாதை செய்தார். அடுத்து புகழேந்திப் புலவருக்கு தன் மற்றைய காலை மடக்கி மரியாதை செய்தார். ஆனால் ஒட்டக்கூத்தரைக் கண்டதும் தன் இரு காலையும் நீட்டி அவமரியாதை செய்தார். இதனைக் கண்டு ஒட்டக்கூத்தரின் மனம் கோபத்தால் துடித்தது.

அப்போது ஔவையார், ஒட்டக்கூத்தரிடம், மன்னனை விழித்து ஓர் பாடல் பாடுமாறு கூறினார். ஆனால் பாடும் பாடலில், பெண் ஒருத்தி சந்திரனைக் கண்டு வருந்துவதாக அமைய வேண்டும், மேலும், சந்திரனைக் குறிக்கும் மூன்று பெயர்கள் அமைய வேண்டும், அம் மூன்றும் வேறு வேறு பொருள் தரவேண்டும். ஔவையார் இவ்வாறு கூறியதும், ஔவையாரை இகழ வேண்டும் எனும் அவசரத்தில்,

**''பிள்ளை மதி கொண்ட பேதை**
**பெரிய மதியும் இழந்தாளே...''**

எனப் பாடினார். ஆனால் சந்திரனின் பெயரை இரண்டு முறையே பாடலில் வைத்தார். இதனைக் கண்ட ஔவையார் ''ஒட்டா, நீ ஒரு மதி கெட்டாய்...'' எனக் கூறினார். உடன் புகழேந்திப் புலவரை ஔவையார் பார்த்தார். தான் கூறிய பொருளில் பாடல் பாடுமாறு கூறினார். அப்போது புகழேந்திப்புலவர் பாடல் ஒன்றை வடித்தார்.

**''பங்கப் பழனத்து உழும் உழவர்**
**பலவின் கனியைப் பறித்தது என்று**
**சங்கு இட்டு எறிய குரங்கு இளநீர்**
**தனைக் கொண்டு எறியும் தமிழ்நாடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொங்கார்க்கு அமராபதி அளித்த**
**கோவே இராச குலதிலகா**
**வெங்கட் பிறைக்கும்**
**கரும்பு இறைக்கும்**
**மெலிந்து அம்பு**
**இறைக்கும் விழிவேலே."**

அப் பாடலில், ஒளவையார் கூறியபடி அத்தனை விடயங்களையும் உள்ளடக்கி இலக்கிய இரசனை கொண்டதாக பாடலைப் பாடினார் புகழேந்தி.

பாடலில், சோழ மன்னனின் வீரத்தை, கொங்க நாட்டவர்களுக்கு யுத்தகளத்தில் மரணத்தை கொடுத்து அவர்களை வீர சுவர்க்கத்தை அனுப்பி வைப்பவன் எனவும், நீர்வளம் பொருந்திய தமிழ் மொழி நிறைந்த நாடாகிய சோழ நாட்டின் அரசன் எனவும் போற்றிப் பாடினார்.

அடுத்து, வெங்கட் பிறைக்கும் கரும்பு இறைக்கும்

மெலிந்து அம்பு இறைக்கும் விழிவேலே

எனும் வரிகளில் ஒளவையார் கூறிய மற்றையவற்றை வைத்துப் பாடினார். இவ் வரிகளில் வெளிப்படும் நயத்தை காணுறல் சிறப்புடையதாகும்.

இங்கு வெண்கட் பிறை என்பது வெண்மையான சந்திரனையும், கரும்பிறை என்பது கரும்பினை வில்லாக கொண்ட மன்மதனையும், அம்பிறை என்பது கண்ணீர் சொரிதலையும் குறிக்கின்றன. மேலும், பெண் ஒருத்தியின் வேலாகிய கண்கள் சந்திரனுக்கும், மன்மதனுக்கும் மெலிவடைந்து கண்ணீரை சொரிந்தன எனவும் பாடினார்.

ஆக ஒளவையார் கூறியபடி தன் ஒரு பாடலிலேயே, சோழ மன்னின் சிறப்பையும், சந்திரனைக் குறிக்கும் பிறை எனும் ஒரு சொல்லை மூன்று இடங்களில் காட்டி அவற்றை வெவ்வேறு பொருளில் அமையச் செய்தும், சந்திரனைக் கண்டு வருந்தும் பெண்ணின் தன்மையையும் காட்டியுள்ள புகழேந்திப் புலவரின் கவித் திறன் பாராட்டத்தக்கதாகும். இவ்வாறு புகழேந்திப் புலவர் வாயிலாக ஒட்டக்கூத்தரின் கர்வத்தை அடக்கி, புகழேந்திப் புலவரின் கவியாற்றலை உலகறியச் செய்தார் ஒளவையார்.

## உதவி (13)

**அரசியின் உதவிக்கரம் :- கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்**

ஒளிஅரசியின் உதவும் கரங்கள் என்னும் செயற்றிட்டத்தின் மூலம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் திறன் மிக்க மாணவர்களை இனங்கண்டு மாதாந்தம் கல்வி உதவியியை வழங்கி வருகின்றோம். அந்த வகையில் இம்மாத உதவியானது நெடுந்தீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த **ஸ்ரனிஸ்லஸ் வினோஜா** என்ற மாணவிக்கு வழங்கப்பட்டது.

திறமையான இம்மாணவி நகர்ப் புறப்பாடசாலை ஒன்றில் கல்வி கற்க உள்ளதால் அவருக்கான அத்தியாவசிய பொருட் தேவையை நிவர்த்திசெய்யும் பொருட்டு ஒளிஅரசி நிர்வாகத்தின் நிதிப்பங்களிப்பின் மூலம் **ரூ. 17000** பெறுமதியான பொருட்கள் நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் தலைவர் **அ.கி. அருள் ஜீவன்** என்பவரால் ஒளிஅரசி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெண் ஆளுமைகளை அடையாளமிட்டு ஆவணப்படுத்தும் ஒளிஅரசியின் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக மிளிர்பவர் கவிதாயினி அனார்.

1990களின் நடுப்பகுதியிலிருந்து 'அனார்' என்ற புனைப்பெயரில் புகுந்து இலக்கியம் படைக்கும் இந்த இளம் படைப்பாளியின் இயற்பெயர், இஸ்ஸத் ரிஹானா முஹம்மட் அஸீம் என்பதாகும்.

இலங்கையின் ஆளுமைமிக்க பெண் கவிதாயினிகளுள் குறிப்பிடத்தக்க ஒருவராக திகழ்கிறார். இவர் தனது கவிதைகளினூடாக ஒரு தனித்துவ முத்திரையை பதித்துக் கொண்டவர்.

விஜய் தொலைக்காட்சியின் சிகரம் தொட்ட பெண்கள் விருது பெற்ற இலங்கையின் பெண் கவிதாயினி, இலக்கிய உலகிற்கு ஐந்து நூல்களை பரிசாகத் தந்தவர். இன்று எமது 'ஒளி அரசி' யின் நட்சத்திர இல்லத்தரசி' யாக ஜொலிக்கிறார். அவர் தரும் கருத்துக்களைச் சுவைப்போமா.



# கவிதைக்குள் கண்டெடுத்தேன் விடுதலையை






**உங்களுக்கும் கவிதைகளுக்குமான கைகுலுக்கல் எப்போது ஆரம்பமானது?**

நான் கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த சாய்ந்தமருது என்னும் ஊரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருப்பவள். நான் மிகவும் நேசிக்கும் எனது தந்தை ஓய்வு பெற்ற மௌலவி ஆசிரியர். என்னுடைய தாய் தொழில் செய்யாவிடிலும் நிர்வாகத் திறன்மிக்கவர்.. நான்கு பெண். நான்கு ஆண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் நான் மூன்றாவது பெண்.

எமது குடும்பம் இஸ்லாமியப் பாரம்பரியங்கள் வலுவாக அமைந்த குடும்பம். இலக்கியம் சார்ந்த அறிமுகங்களுடன் எவரும் இருக்கவில்லை. ஆயினும் எனது வீட்டில் இசை வளம் இருந்தது. அது அரபு மொழியுடன் இணைந்ததாக மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்பட்டது. எனது பிரதேசத்தில் 1990 காலகட்டமானது ஆழமான மனக்காயங்களை உண்டுபண்ணிய காலங்களாகும். கலவரங்களாலும் வன்முறைகளாலும் நிரம்பிய பீதி நிறைந்த நெருக்கடியான காலம். இக் காலகட்டத்தில் நான் பல துயரச் சம்பவங்களை கண்டிருக்கின்றேன். அதன் கணிசமான அனுபவங்களோடு தான் எனது இலக்கியப் பயணமும் பயணித்தது

நாட்டில் நிலவிய கொந்தளிப்பான சூழ்நிலையில் நான் 1991ஆம் ஆண்டு எனது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. தனிமை என்னை ஆட்கொண்டது. பின்னர் எல்லாமே நெருக்குதல்களாகவே தோன்றத் தொடங்கிவிட்டன. வெளியில் செல்லக் கிடைத்த ஒரே வாய்ப்பு பாடசாலை மாத்திரமே. அது பறிபோன துக்கம் இப்போதும் நெஞ்சுக்குள் பெரும் வடுவாக உள்ளது. இந்த நிலையில்தான் நான் எனக்குள்ளேயே பேசத் துவங்கினேன்.

வாழ்வின் காதலை இருப்பின் வேட்கையை அனைத்தையும் எனக்கு சாத்தியமாக்கியது கவிதை. நான் என் விடுதலையை கவிதைக்குள் கண்டெடுத்தேன். அதன் மூலம் எனக்கான சுதந்திரத்தை அனுபவித்தேன்.

**பொதுவான ஒரே விடயத்தையே திரும்பத் திரும்பப் பேசும் கவிதைகளிடையே உங்கள் கவிதைகள் மாறுப்பட்டுள்ளதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

நமது நாட்டில் 1980 காலகட்டத்தில் பெண் மொழியின் தனித்துவமான புதிய பாய்ச்சலாக சிவரமணி, செல்வி ஊர்வசி, சங்கரி கவிதைகள் இருந்தன. பிறகு நீண்ட தேக்க நிலைதான் காணப்பட்டது. கவிதைகள் எழுதும் பெண்கள் இருந்த போதிலும் தனித்துவமான பெண் மொழியின் வெளிப்பாடோ பெண் அரசியல் வெளிப்படும் வகையான எழுத்துக்களோ அரிதாகவே இருந்திருக்கின்றன.

ஔவை, ஆகர்ஷயா, ஆழியாள் என சிலர் மிக ஆளுமையுடன் வெளிப்பட்டார்கள். ஆழியாளின் கவிதைகளில் பெண்மொழியின் தீவிரம் மிகுந்திருந்தது. இப்போதென்றால் பல பெண்கள் தனித் திறமைகளோடு இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதில் குறிப்பிடத்தக்கவர் பெண்ணியா. வேறுசில புலம் பெயர்ந்த பெண் கவிஞர்களையும் கூற முடியும்.

கவிதை, நுண்ணுர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. அனுபவங்களுக்கூடாகவும் வாசிப்பு மற்றும் தேடல் புதிய சிந்தனைக்கு தூண்டப்படுதல் போன்றவற்றினாலும் நிகழ்வது. என்னுடைய கவிதைகள் தமக்கு அதிக பட்ச உரிமைகளை எடுத்துக்கொள்ள நான் எப்போதும் அனுமதிக்கிறேன்.

**நீங்கள் இது வரை வெளியிட்ட நூல்கள் பற்றி குறிப்பிடுங்களேன்?**


'எனது முதலாவது நூல் கவிதைத் தொகுதி' ஓவியம் வரையாத தூரிகை' 2004 இல் மூன்றாவது மனிதன் வெளியிட்டிருந்தது. காலச்சுவடு வெளியீடாக 'எனக்குக் கவிதை முகம்' 2007 இலும் 'உடல் பச்சை வானம்' 2009இலும் வெளிவந்தது. 2013 இல் 'பொடுபொடுத்த மழைத்தூத்தல்' (கிழக்கிலங்கை நாட்டார் காதல் பாடல்கள்) தொகுப்பை க்ரியா பதிப்பகமும் 2013 இல் 'பெருங்கடல் போடுகிறேன்' தொகுதியினை காலச்சுவடு பதிப்பகமும் வெளியிட்டிருக்கிறது. அத்தோடு 2016இல் அனார் அம்பையின் சிறுகதைகளைத் தொகுத்து 'அம்மா ஒரு கொலை செய்தாள்' என்ற தொகுதியையும் காலச்சுவடு வெளியிட்டிருக்கிறது. மேலும் 2017 இல் காலச்சுவடு பதிப்பகம் ' ஜின்னின் இரு தோகை ' தொகுதியினையும் வெளியிட்டிருக்கிறது.

**உங்களின் இந்த இலக்கிய பங்களிப்புக்காக இலங்கையில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் பரிசில்கள் கிடைத்ததல்லவா, அதுபற்றி கூறுங்களேன்?**

1999 - தேசிய இளைஞர் சேவை விருது கொழும்பு, 1999 - விபவி சிருஷ்டி இலக்கிய விருது - கொழும்பு, 2002 - இளம் படைப்பாளி விருது (உலக இஸ்லாமிய இலக்கிய மாநாடு) கொழும்பு, 2005 - அரசசாகித்திய மண்டலவிருது - கொழும்பு, 2005 வடகிழக்கு மாகாண இலக்கிய விருது - திருகோணமலை, 2007 கம்பன் கழகத்தின் மகரந்தச் சிறகு விருது - கொழும்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011 - கனடா தமிழ் இலக்கியத் தோட்ட கவிதை இயல் விருது - ரொறண்டோ கனடா, - சென்னை 2013 Award for Excellence in the Filed of Literature (விஜய் தொலைக்காட்சியின் சிகரம் தொட்ட பெண்கள் விருது)

2015 - SPARROW LITERARY AWARD – MUMBAI, இலக்கியத்துறைக்கான சாதனைப் பெண் விருது, ஸ்பாரோ இலக்கிய விருது, ஆத்மா நாம விருது என்பன அவற்றில் சில...

**நீங்கள் சர்ச்சைக்குரிய விடயங்களை எழுதி சங்கடப்படுகின்றீர்களாமே ?**

நான் சங்கடப்படுவதாக யார் சொன்னார்கள்....? சங்கடப்படுகின்ற பெண்ணாக இருந்தால் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருப்பேனா..? நீங்களே சொல்லுங்கள். சர்ச்சைக்குரிய விடயங்களை நான் எழுதுகின்றேனா... அல்லது அவை நம் சமூகத்தில் நிகழ்ந்தவாறு இருக்கின்றதா ?

**அன்றைய இன்றைய இலக்கியவாதிகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?**

எப்போதுமே இலக்கியவாதிகள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியான அடையாளங்களும் இலக்குகளும் இருக்கின்றன. பிற துறைகளைப் போன்றே இலக்கியத் துறையிலும் உண்மையானவர்களும் போலியானவர்களும் தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்றார்கள். வாழும்காலத்தில் கண்டுகொள்ளப்படாத வாசிக்கப்படாத எழுத்தாளர்களின் எழுத்துகள் அவர்களின் மரணத்தின் பிறகு கொண்டாடப்படுவதைக் காண்கிறோம். இன்னொருபுறம் தாம் வாழும் காலத்திலேயே தம்முடைய அற்ப ஆயுளைக்கொண்ட இலக்கியத்தைக் காப்பாற்ற பல்வகைப் பிரயத்தனங்களையெடுத்து போராடும் கோமாளி இலக்கியவாதிகளையும் காண்கிறோம். என்னைப் பொறுத்தவரை அர்ப்பணிப்பும் நேர்மையும் தனித்துவமும் கொண்ட எழுத்துகளை முன்வைக்கின்ற படைப்பாளர்களின் மீது உயர்வான கவனத்தை வைத்திருக்கிறேன்.

**சமூக வலைத்தளங்களையும் முகநூலையும் பயன்படுத்தும் இன்றைய இளம் இலக்கியவாதிகளுக்கு கூற விரும்புவதென்ன ?**

இளம் இலக்கியவாதிகளுக்கு இன்றைய காலகட்டத்தில் வாய்ப்புகளும் வசதிகளும் அதிகம். உடனுக்குடனான பாராட்டும் விமர்சனமும் கிடைக்கின்ற வகையில் ஊடக சாதனங்கள் அவர்களுடைய கைகளுக்குள்ளேயே இருக்கின்றன. இன்று முகநூலைப் பெருமளவு பயன்படுத்துகின்றார்கள். அது நல்ல விடயமாகினும் ஒருவருடைய படைப்பிற்கு மிக இலகுவான மேலோட்டமான பாராட்டுதல்கள் மாத்திரமே அதிகபட்சம் கிடைக்கின்றது. படைப்பு சார்ந்த ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மிகமிகக்குறைவு. முகநூலில் சொல்லப்படும் கருத்துகளுக்கும் நமது வாழ்க்கையின் யதார்த்ததிற்கும் மனங்களின் தீவிரத் தன்மைகளுக்கும் மிகுந்த இடைவெளி காணப்படுவதை புரிந்து கொள்ள முயல வேண்டும். சுயமான சிந்தனை வளம், மொழியாற்றல் மிகுந்த அவசியம் எனக் கருதுகிறேன்.

**இலங்கையின் இன்றைய பெண் எழுத்தாளர்களின் போக்கு பற்றி ..?**

பெண் எழுத்தாளர்களின் வளர்ச்சிப்போக்கை தொடர்ந்து அவதானித்து வருகிறேன். புதிய பெண்கள் நன்றாக எழுதுவதையும் இலக்கிய வெளியில் பரந்து சிறப்பாக செயற்படுவதையும் அவதானிக்கின்றேன். ஆணோபெண்ணோ தமக்கான பொறுப்பு எது என்பதில் தெளிவாக இருத்தல் வேண்டும். அப்போதுதான் அர்த்தபூர்வமான இலக்கியச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

**உங்கள் இலக்கிய பயணத்தின் பின்னால் இருப்பவர் பற்றி ?**

எனது இலக்கியப் பயணத்தின் வெற்றிகளுக்குப் பின்னால் நிச்சயமாக எனது கணவர் அஸீமைத்தான் முதலில் கூறமுடியும். அவர்தான் எனது முதல் தொகுப்பை தன் கரங்களாலேயே தொகுத்து அச்சிட்டு எனக்கு பரிசளித்தார். எனக்கு அச்சங்களில்லாத ஒரு எழுத்துலகம் சாத்தியமாகியது. அஸீமின் உன்னதமான மானுடப் பண்புதான் எனது அனைத்துப் பெருமிதங்களுக்கும் காரணமாகின்றது. எனக்காக தன்னைப் பூரணமாக அர்ப்பணித்த ஒரு தோழமைமிக்க துணை அவர்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(ஆமாம் ! ஈழத்துத் தமிழின் நவீன கவிதைக்குப் புதிய முகங்களைத் தருபவராக இருக்கிறார் அனார்' என்று இந்தியாவைச்சேர்ந்த கவிஞர் சேரன், அனாரின் கவிதைகளுக்கு புகழாரம் சூட்டுகிறார். இந்திய தொலைக் காட்சியின் சிகரம் தொட்ட பெண்கள் விருதினை பெற்றதுடன் இம்மாத ஒளி அரசியின் நட்சத்திர இல்லத்தரசியாகவும் மகுடம் சூடிக்கொண்ட கவி தாயினி அனார் இலக்கிய உலகில் இன்னுமின்னும் ஜொலிக்க வேண்டும் மேலும் பல காத்திரமான படைப்புகளைத் தரவேண்டும் என நாமும் வாழ்த்தி விடை பெற்றோம். )



நேர் காணல்:-
கலாபூசணம் நூருல் அயின்
நஜ்முல் ஹுசைன்

---

**இம்மாதம் பிறந்தநாளைக் கொண்டாடும் இந்த மழலைச் செல்வங்களுக்கும் ஒளிஅரசியின் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்**



அ.டிவானியா
புனித நீக்கிளர்
முன்பள்ளி
மிருசுவில் - 22.01



ச.அக்ஷயா
குமரகுருபரன்
முன்பள்ளி - 11.01



செ. தனோஜ்
அபிராமி முன்பள்ளி
01.01.2017



பி.ஜெனிப்பிரியா
அபிராமி முன்பள்ளி
12-01-2017



சி.பதுசன்
நாவலர் கழக
முன்பள்ளி - 03.01



றஜீவ் விகிர்தன்
அபிராமி முன்பள்ளி
23.01.2017



உஷாந் ஸாமிகா
கச்சாய் கலைமகள்
முன்பள்ளி - 15.01



சு.விபுலன்
கச்சாய் கலைமகள்
முன்பள்ளி - 30.01



புஸ்பதாஸ் சுஜிதா
சர்வோதயா முன்பள்ளி
22.01.2013



துஸ்யந்தன் செரின்
மட்டுவில் அம்பாள்
முன்பள்ளி - 04.01



புஸ்பாகரன் பரிஸ்கா
அன்னை திரேசா
முன்பள்ளி-01.01



செ.கஜீபன்
டேனிஜா மழலைகள்
கல்விப்பூங்கா-24.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணமான பெண்கள் தங்கள் கணவர் உடல் நலத்துடன் ஆயுள் அதிகரித்து வாழ்ந்திட வேண்டி சாவித்திரி நோன்பைக் கடைப்பிடிக்கின்றனர். சுமங்கலி நோன்பு, காமாட்சி நோன்பு,

# கணவனைக் காக்கும் சாவித்திரி நோன்பு

கௌரி நோன்பு, காரடையான் நோன்பு என்று வேறு சில பெயர்களிலும் இந்த நோன்பு அழைக்கப்படுகிறது. இந்த நோன்பு எப்படித் தொடங்கியது என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?

**கணவனை மீட்ட சாவித்திரி**

சாளுவதேசத்து அரசன் ஒரு போரில் நாட்டை இழந்து தனது மனைவி மற்றும் மகன் சத்தியவான் ஆகியோருடன் காட்டில் வசித்து வந்தான். பார்வையற்ற நிலையிலிருந்த அரசன் மற்றும் அரசி ஆகியோரை இளவரசன் சத்தியவான், அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பராமரிப்புகளையும் செய்து, எந்தக் குறைகளுமில்லாமல் அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

மந்திரதேசத்து மன்னன் அசுவபதியின் மகள் சாவித்திரி ஒரு நாள் அந்தக் காட்டுக்குள் வேட்டைக்குச் சென்றாள். அங்கு பார்வையற்ற பெற்றோர்களுக்குத் தேவையான அனைத்துப் பணிகளையும் செய்து வந்த சத்தியவானைப் பார்த்தாள். சத்தியவான் பார்வையற்ற பெற்றோர்க்குச் செய்த சேவைகள் அவளை மிகவும் கவர்ந்தன. காட்டிலிருந்து நாட்டிற்குத் திரும்பிய சாவித்திரி சத்தியவானையே திருமணம் செய்து கொள்வதென முடிவு செய்தாள். அவள் தந்தையிடம், காட்டிற்குள் தான் பார்த்த சத்தியவானையே திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தாள்.

இந்நிலையில், சாவித்திரியின் தந்தையைச் சந்தித்த நாரதர், சாவித்திரியின் விருப்பத்திற்காகச் சத்தியவானுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டாம் என்றும், அவன் இன்னும் ஓராண்டு காலத்தில் இறந்து விடுவான் என்றும் எச்சரித்தார். ஆனால், சாவித்திரி தன்னுடைய விருப்பத்திலிருந்து மாறாமல், சத்தியவானையே



திருமணம் செய்து கொள்வது என்று உறுதியாக இருந்தாள். அவளுடைய மன உறுதிக்காக அவளது தந்தையும் வேறு வழியின்றி, அவளைச் சத்தியவானுக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமணத்திற்குப் பிறகு, சாவித்திரி தன் கணவனுடன் காட்டிற்குள் சென்று வசிக்கத் தொடங்கினாள். அரண்மனையில் பல வசதிகளுடன் வாழ்ந்த அவளுக்கு காட்டில் பல்வேறு வசதிக் குறைபாடுகள் ஏற்பட்டன. இருப்பினும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், அங்கு கணவன் மற்றும் அவனது பார்வையற்ற பெற்றோர்களையும் அன்புடன் கவனித்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தாள்.

நாரதர் சொன்னபடி ஒரு வருட காலத்தில் சத்தியவானின் ஆயுட் காலம் முடியும் நாள் வந்தது. அன்று அவள் கணவனைப் பிரியாமல் அவனுடனேயே இருந்தாள். அவர்கள் இருவரும் சேர்ந்து காட்டில் ஒரு இடத்தில் பழம் பறித்துக் கொண்டிருந்தனர். அப்போது சத்தியவான் திடீரென மயங்கி விழுந்து இறந்தான். அவனது உயிரை எமதர்மன் எடுத்துக் கொண்டு சென்றார். சாவித்திரியும் தன் கணவனின் உயிரைத் திரும்பப் பெற்றிடும் நோக்கத்துடன் எமனைப் பின் தொடர்ந்து சென்றாள். கற்புக்கரசி என்பதாலும், கணவன் இறப்பான் என்று தெரிந்தும், மன உறுதியுடன் அவனையே திருமணம் செய்து கொண்டதுடன், பார்வையற்ற முதியவர்களுக்குத் தொடர்ந்து அவள் சேவை செய்திருந்ததாலும், அவள் பார்வைக்குக் காட்சியளித்த எமதர்மன் அவளைத் தன் பின்னால் தொடர்ந்து வராமல், திரும்பிப் செல்லும்படி அறிவுறுத்தினார்.

ஆனால், சாவித்திரி அதை ஏற்கவில்லை. அவள் எமதர்மனிடம், தான் கணவருடன் சேர்ந்து வாழவே விரும்புவதாகவும், தான் கற்புக்கரசி என்பது உண்மையெனில், தன் கணவரது உயிரைத் திருப்பித் தர வேண்டும் என்றும் கேட்டாள். அவள் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவித்த எமதர்மன், இறப்புக்குப் பிறகு இந்தப் பூமியில் யாருக்கும் வாழ்வு கிடையாது என்றும், அதற்குப் பதிலாக எந்த வரம் கேட்டாலும் தருவதாகவும் கூறினார்.

சாவித்திரி சூழ்நிலையை உணர்ந்து, என் கணவரின் பெற்றோர்க்கு மீண்டும் பார்வை கிடைக்க வேண்டும். ஆண் வாரிசு இல்லாத என் தந்தைக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும். எனக்கும் நூறு குழந்தைகள் பிறக்க வேண்டும். அதற்கான வரத்தை அருள வேண்டும் என்று கேட்டாள். அவள் கேட்ட வரத்தின் உள் நோக்கம் குறித்துச்சிறிதும் சிந்திக்காத எமதர்மன் அந்த வரங்களை அவளுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்.

உடனே சாவித்திரி, நீங்கள் எனக்குக் கொடுத்தபடி நூறு குழந்தைகள் பிறக்க வேண்டுமென்றால், என் கணவன் உயிருடன் என்னுடன் இருந்தாக வேண்டும்...! எனவே எனக்கு அவரது உயிரை மீண்டும் திரும்பக் கொடுங்கள் என வேண்டினாள். எமதர்மனும் அவளது அறிவுத் திறனை வியந்து பாராட்டியதுடன் சத்தியவானின் உயிரை அங்கேயே அவளிடம் விட்டுச் சென்றார்.

**சாவித்திரி நோன்பு**

சாவித்திரி தன் கணவனை உயிருடன் மீட்டதுடன், தன் கணவனுக்கு நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொண்டதைப் போல், திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் ஆயுள் காலமும் அதிகரித்திட வேண்டி சாவித்திரி நோன்பு கடைப்பிடிக்கின்றனர். மாசி மாதம் முடிந்து பங்குனி மாதம் தொடங்கும் வேளையில் இந்த நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது.

**காரடையான் நோன்பு**

தமிழர்கள் ஆண்டை சித்திரை மாதத்திலிருந்து இரு மாதங்களாகக் கொண்டு இளவேனில் காலம், முதுவேனில் காலம், கார் காலம், குளிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம் என்று ஆறு பொழுதுகளாகப் பிரித்திருக்கின்றனர். கார் காலமான ஆவணி, புரட்டாசியில் விளையும் நெல்லிலிருந்து எடுக்கப்பட்ட பச்சரிசி மாவுடன், காராமணிப் பயறும், அதனுடன் இனிப்பும் சேர்த்துத் தயாரிக்கும் காரடை எனும் உணவுப் பொருளை சாவித்திரி நோன்பு வழிபாட்டிற்குப் பயன்படுத்துகின்றனர். இதனால் இந்த நோன்பு காரடையான் நோன்பு என்கிற பெயரிலேயே அதிகமாக அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருமதி. தேவா மாதவன்
கொழும்பு.

# அன்னை சாரதாதேவி

அன்னை சாரதாதேவி தீர்த்த யாத்திரைக்காக இராமேஸ்வரத்திற்கு வந்திருந்தார். அவருடன் அவருடைய தம்பியின் மகளான ராதை என்ற சிறுமியும் வந்திருந்தாள். அன்னை, இராமேஸ்வரரைத் தரிசித்து பூஜை செய்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் இராமநாதபுரம் ராஜா செய்துகொடுத்திருந்தார். மூன்று நாட்கள் கர்ப்பக்கிரகத்திற்கே சென்று அர்ச்சனை செய்து ராமநாதரை வணங்கி மகிழ்ந்தார் அன்னை. பூஜைகள் முடிந்து அவர் புறப்படும் வேளையும் வந்தது.



இராமேஸ்வரத்தில் இருக்கும் ராஜாவின் அரண்மனையை வந்து பார்க்குமாறு அரண்மனை அதிகாரிகள் அவரிடம் வேண்டிக்கொண்டனர். அவர்கள் மனம் கோணக்கூடாதென்று அன்னை சாரதா தேவியும் சிறுமியுடன் அரண்மனைக்குச் சென்றார்.

அரண்மனையைச் சுற்றிக் காட்டிவிட்டு மாளிகையின் பொக்கிஷ அறைக்கு கூட்டிச் சென்றார்கள். அந்த அதிகாரிகள் அன்னைக்கு விலையுயர்ந்த இரத்தினங்களையும் வைரங்களையும் தங்க ஆபரணங்களையும் காட்டினார்கள். அது மட்டுமல்ல, அவற்றில் பிடித்தவற்றை அன்னை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ராஜா கேட்டுக்கொண்டிருப்பதாகவும் பணிவுடன் கூறினார்கள். இவ்வேண்டுகோள் அன்னை சாரதாதேவியை தர்மசங்கடப் படுத்தியது. ஆபரணங்கள் மீது பற்றற்ற அவர் எப்படி ஆபரணங்களை எடுத்துக் கொள்ளமுடியும்? எதுவும் வேண்டாமென மறுத்தால் ராஜாவின் மனதை புண்படுத்துவதாகும். அதனால் அன்னை ஒரு யுக்தியைக் கடைப்பிடித்தார்.

'உலக மக்களைப் போல் நகைகளை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்?' அதனால் இதில் ஏதாவது ஒன்றை என்னுடன் வந்திருக்கும் ராதை எடுத்துக்கொள்ளட்டும் என்றார்.

அரச ஆணைப்படி ஆபரணங்களை எடுத்துக்கொள்ளச்சொன்ன அதிகாரிகளுக்கும் இக்கூற்று சரியானதாகத் தோன்றவே அவர்களும் சம்மதித்தனர். ஏற்கனவே நகைகளைப் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டிருந்த ராதை வைரம், ரத்தினங்களிலான ஆபரணங்களை உற்றுப்பார்க்கத் தொடங்கினாள். அன்னை சாரதாதேவி கண்களை மூடி இறைவா, நீர் எளிமையை விரும்புபவர், அதை இந்தக் குழந்தை மூலம் உலகிற்கு அறிவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என தன் குருதேவரான இராமகிருஷ்ணரை பிரார்த்தனை செய்துவிட்டு கண்களைத் திறந்தார். நகைகளைப் பார்த்துக்கொண்டிருந்த ராதா, மன்னரின் அதிகாரி ஒருவரின் பக்கம் திரும்பி, இவற்றில் ஒன்றும் எனக்கு வேண்டாம், என் பென்சில் தொலைந்துவிட்டது, எனக்கு ஒரு புதிய பென்சில் வாங்கிக்கொடுங்கள் எனக்கூறினாள்.

அன்னை சாரதாதேவி புன்முறுவல் ஒன்றை வெளிப்படுத்தினார். அரசு அதிகாரிகளோ, ஆச்சரியமும் பிரமிப்புமாக கடைக்கு ஆள் அனுப்பி ஒரு புதிய பென்சிலை வாங்கிவரச்செய்து அதனை ராதையிடம் கொடுத்தனர். இதனை ஏற்ற சிறுமி தனது மகிழ்வை வெளிப்படுத்தினாள்.

இறைவன் எளிமையை விரும்புபவன் என்ற நம்பிக்கையை மக்கள் மனதில் பதிய வைக்க அன்னை சாரதாதேவி நிகழ்த்திய அற்புதம் இது.

நட்சத்திர ஜோக்

# எங்க வீட்டுல ஆடு இல்லியே...!



வேலு! உனக்கு நான் ரெண்டு மாடும், இன்னொரு ரெண்டு மாடும், அதன் பிறகு இன்னும் ரெண்டு மாடும் தர்றேன். இப்ப உன் வீட்டில் மொத்தம் எத்தனை மாடு இருக்கும்?

எட்டு, டீச்சர்!

கணக்கை மறுபடியும் சொல்றேன். முதல்ல ரெண்டு மாடு தர்றேன். அப்புறம் ரெண்டு மாடு தர்றேன். மறுபடியும் ரெண்டு மாடு தர்றேன். ஆக மொத்தம் எத்தனை மாடுங்க?

எட்டு, டீச்சர்

போடா முட்டாள்! சரி, இப்ப கொஞ்சம் மாத்தி சொல்றேன். இப்பவாவது கண்டுபிடி பார்க்கலாம். முதல்ல ரெண்டு ஆடு தர்றேன். அப்புறம் ரெண்டு ஆடு தர்றேன். மறுபடியும் ரெண்டு ஆடு தர்றேன். இப்ப உன் வீட்டில் மொத்தம் எத்தனை ஆடுங்க இருக்கும்?


ஆறு டீச்சர்!

அட, இப்ப மட்டும் எப்படிடா சரியா சொன்னே?

எங்க வீட்ல ஏற்கெனவே ரெண்டு மாடு இருக்கு டீச்சர்! ஆனா, ஆடு இல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆயுள் காப்புறுதி என்றால் சேமிப்பா? தாழிப்பு வார்த்தை காப்பாற்றுமா ?




இறந்த காலம் என்பது இறந்துவிட்டது. எதிர்காலம் என்பது நம் கையில் இல்லாதது. நிகழ்காலம் ஒன்றே நம் கையில் இருக்கும் மாங்கனி போன்றது. அதை ரசிக்கலாம், ருசிக்காலம், பசியாறலாம். இது தெரியாத பலரைப்போல நானும் இருந்துவிட்டு இப்போது வெட்கப்படுகிறேன், வேதனைப் படுகிறேன். என் முட்டாள் தனத்தை இல்லை, இல்லை, நான் ஏமாற்றப்பட்டதை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் கொஞ்சம் அவமானமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் ஒரு விழிப்புணர்வைத் தருவதில் எனக்கு ஒரு சின்ன திருப்தி.




நூறு ரூபாய் கிடைத்தாலும் அதை வைத்துக்கொண்டு அன்றைய பொழுதை எப்படிச் சமாளிக்கவேண்டும், அதில் எப்படி மகிழ வேண்டும், முடிந்தால் அதில் ஒரு ரூபாயை யாவது சேமிக்க வேண்டும் என்று வாழப் பழக வேண்டுமே தவிர இல்லாத ஒரு எதிர் காலத்துக்காக சேமிப்பு என்ற பெயரில் பொய் யான காப்புறுதியில் (இன்சூரன்ஸ்) பல இலட்சங்களை இழந்த லட்சக்கணக்கானவர் களில் நானும் ஒருவன். மடிப்புக் குலையாத லீவைஸ் சேட், அடிடாஸ் சூ, கையில் கச் சிதமான கறுப்புப்பெட்டி, நுனி நாக்கு இங் கிலீஸ் முப்பத்திரண்டு பல்லும் வெளியே தெரியும் போலிப் புன்னகை, இனிக்கும் பசப்பு வார்த்தை. இவைகளுக்கெல்லாம் மயங்கும், நமிதாவின் அழகில் கிறங்கும் மச்சான்வர்க்கம் அல்ல நான்.

இன்சூரன்ஸ் ஏஜன்ட்மார்களைக் கண்டாலே துரத்தியடிக்கும் நான் என் நண்பன் ஒருவனின் வற்புறுத்தலினால், பலவந்தமாகக் கட்டாயப்படுத்தியதினால் என்ன நடக்கும் என்று தெரிந்தே அந்த வலையில் சிக்கினேன். வெள்ளையும் சொள்ளையுமா கோட்டு சூட்டுப் போட்ட அந்த நாசமாப் போன இன்சூரன்ஸ்காரனிடம் நான் கேட்டது ஒன்றே ஒன்று தான். 4663 ரூபா வீதம் 15 வருடங்களுக்கு (180 மாதங்கள்) பணம் போடச் சொல்லுகிறாயே. 15 வருடங்கள் முடிந்த பின்னர் வட்டியோ, குட்டியோ இல்லாமல் நான் கட்டிய மொத்தப் பண மான 839340 ரூபாய் எனக்குத் திரும்பக் கிடைக்குமா? என்பது தான்.

என்ன சார் இப்படிக் கேட்டிட்டீங்க, அது மட்டுமா? இன்னும் உங்களுக்கு என்னவெல்லாம் தரப் போறம், அத எப்படித் தரப் போறம் எண்டு பொறுத்திருந்து பாருங்க சார் என்றான். பானை எதுக்கு சார், நாங்க யானையே தருவமில்லை என்று மேலும் மேலும் சொல்லிக் கொண்டுபோனவன் 15 பேப்பர்களை நீட்டி 35 இடத்தில் கையொப்பம் வாங்கினான். நானும் கொஞ்சம் வைரமான பார்ட்டி தானே. அவன் அப்படிச் சொன்னால் விட்டுவிடுவேனா?

இன்சூரன்ஸ் கம்பனி ஆளிடம் தம்பி எனக்கு இந்தப் பேப்பர்கள்ல என்ன போட்டிருக்கு எண்டு தெரியாது. எனக்கு ஒரேயொரு பேப்பர் மட்டும்தான் வேணும். உங்க கம்பனி பெயர் பொறித்த ஒரு ஒற்றைத் தாளில் என்னிடம் மாதா மாதம் வாங்கும் 4663 ரூபாய் பணத்தை 15 வருட முடிவில் மொத்தமாக 839340 ரூபாயாக திருப்பித் தருவோம் எண்டு எழுதி உங்க கம்பனி முதலாளி ஒப்பமிட்டுத் தந்தா அதுபோதும் என்றேன். என்ன சார் நீங்க புரியாத ஆளாயிருக்கிங்க. பிளைட்டில ஏறினத்துக்கு பிறகும் பயணம் பண்ணின பஸ்ஸ நினைக்கிறது மாதிரி சின்னப்புள்ளத்தனமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேட்கிறீங்களே. நீங்க கேட்ட ஒத்த பேப்பர விட 1000மடங்கு பெறுமதியான ஒப்பு சார் இது. இஞ்ச மட்டுமல்ல சார் உலகத்தில எந்த மூலைக்குப் போனாலும் அந்த சட்டங்களுக்கெல்லாம் உட்பட்டு எப்பவும் உங்களைக் காக்கும், நீங்க கும்பிடுறசாமி இந்த ஒப்பு, என்று அழகான பைல் ஒண்டில போட்டு என் கையில் தந்தான்.

என் நண்பனின் பேச்சைத் தட்டமுடியாமல் நானும் பணத்தைக் கட்டத்தொடங்கினேன். 8,10வருடம் முடிந்தபோது போனஸ் என்று சொல்லி 156250 ரூபாய்க்கு காசோலை எனக்கு கிடைத்தது. பரவாயில்லையே. நல்ல பசங்கதான். நாம கேக்காமலே ஒன்றரை இலட்சம் தருகிறார்களே. இனிப் பயப்படத் தேவையில்லை. பணத்துக்கு பாதகம் வராது என்று நினைத்துவிட்டு பணத்தை நான் தவறாது கட்டிவந்தேன் ஒருவாறு 15 வருடங்களும் முடிவடைந்தது. கடைசி பேமண்டைக் கட்டின மறுநாளே போன் பண்ணி எக்ரிமெண்ட் காலம் முடிந்துவிட்டது. பணத்தை அனுப்பி வையுங்கள் என்றேன். 20 நாள் கழித்து ரெஜிஸ்டர் தபாலில் செக் வந்தது. பல்லை இளித்துக் கொண்டு நாங்கெல்லாம் யாரு. ஹிட்லர் பரம்பரையாச்சே. நம்பளை யாரும் ஏமாத்த முடியுமா? என்று சட்டைக் கொலரை தூக்கிவிட்டுக் கொண்டு கவரைப் பிரித்து செக்கை எடுத்தேன்.

அதில் எழுதப்பட்டிருந்த எமவுண்டைப் பார்த்ததும் தலை சுற்றத்தொடங்கியது. கூடவே மயக்கமும் உண்டானது. நல்லவேளை படலையில் இருந்த முருக்கங் கம்பைப் பிடித்துக் கொண்டு கீழே விழாமல் அப்படியே நிலத்தில் உட்கார்ந்து கொண்டேன். 15 வருடமாக குருவி சேமிச்ச மாதிரி கொஞ்சம் கொஞ்சமாய் சேமித்தது. கடைசியில் கிடைத்தது 299218ரூபாய் மாத்திரமே. மீதி 540122 க்கு நெத்தியில பெரிதாக ஒரு நாமம் போட்டார்கள். இதுக்கு பேர்தான் அல்வா குடுக்கிறது. என்னசெய்வது என்று தெரியாமல் மீண்டும் விசாரித்தேன். நீ செத்துபோ, புல் செட்டில்மெண்ட் உன்னோட பொண்டாட்டிக்கு குடுக்கிறம், இல்ல, ஒரு கால கழட்டிட்டு நடக்கமுடியாதென்று டொக்ரர் சேர்டிபிக்கட் கொண்டு வா மொத்தப் பணமும் தருகிறோம், கையும் காலுமாக நல்லாத்தானே இருக்கு, எதுக்கு பணம்? என்றார்கள்.

ஒரு சேமிப்புக்காகத் தானே இதப் பண்ணினேன். இபபிடிப் பண்ணிட்டீங்களேம்மா? என்றேன். அட கூறுகெட்டமனுஷா. சேமிப்புக்கு இருக்கு வங்கி. இது வங்கியில்ல வாங்கி. பணத்தை வாங்கி நீ எங்காய்ச்சும் தொங்கிக்கிடந்தா அப்பமட்டும் வந்து தாங்குவம் போபோ என்று விரட்டியடித்தார்கள் என்னை. கோபம் தலைக்கேற ஒரு கத்தியை இடுப்பில் செருகிக் கொண்டு என்னைக் கோர்த்துவிட்ட அந்த இன்சூரன்ஸ் ஏஜன்டைத் தேடிப்புறப்பட்டேன். அவனும் ஒரு தமிழன். வடக்கில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். அதன் பலனை கொழும்பி'லும் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சூழலில் சிக்கி அவனும் உயிரிழந்த செய்தி அப்போதுதான் எனக்கு எட்டியது. நல்லவேளை நான் தப்பித்துக் கொண்டேன். இல்லையேல் ஒரு கொலையைச் செய்த குற்றத்துக்காக இப்போது நான் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருப்பேன்.

இறுதி முயற்சியாக என்னுடைய நிலையைச் சொல்லி கொழும்பு புதுக்கடை நீதிமன்றின் முன்னால் உள்ள பல வழக்கறிஞர்களை நாடி உதவி கேட்டேன். அந்த காப்புறுதி நிறுவனத்துக்கு எதிராக வழக்கு போட்டு வெற்றி பெற்றுத் தாருங்கள். அந்தச் செயலுக்கு பரிசாக நீங்கள் மீட்டுத் தரும் பணம் அத்தனையும் உங்களுக்கே. உங்கள் பீஸாக அதை உங்களுக்கே தந்து விடுகிறேன். எனக்கு வெற்றி மட்டும்போதும். அதன் மூலமாக மக்களுக்கு ஒரு செய்தியை சொல்லி விடுகிறேன் என்றேன். அத்தனை வக்கீல்களும் என்னைப் பார்த்து நகைத்தார்கள். காளை மாட்டில் பால் கறக்கச் சொல்லுகிறாயே முடியுமா? உனக்கு சேரவேண்டிய பணத்தை கரெக்டாக தந்திருக்கிறார்கள். 35 இடத்தில கையொப்பம் போடுவதற்கு முன் நீ இங்கு வந்திருந்தா நாங்க உனக்கு அட்வைஸ் பண்ணியிருப்பம். எல்லாம் முடிஞ்சு செத்த பிணத்துக்கு உயிர் கொடு என்றால் எப்படி? பணத்தை சேமிக்க வேண்டுமானால் அதற்கு ஒரே இடம் வங்கி. இன்சூரன்ஸ் என்ற வாங்கியல்ல. பாவம் நீ ஒருவன் மட்டுமல்ல கொஞ்சம் திரும்பிப் பார். அந்த வரிசையில் உனக்கு முன்னே பல ஆயிரக்கணக்கானவர்கள் நிற்கிறார்கள்.

தலையைத் தொங்கப் போட்டபடி வெட்கத்தோடு வெளியேறினேன். என் கதையைக் கேட்ட யாராவது இது தொடர்பில் எனக்கு உதவ முடிந்தால் தாராளமாக தொடர்புகொள்ளலாம். காப்புறுதி நிறுவனம், எனது இலக்கம் ஆகியவற்றைத் தரத்தயாராய் இருக்கிறேன். மீட்டுத் தரும் பணம் அத்தனையும் உங்களுக்கு. வெற்றியும் தீர்ப்பும் எனக்கு போதும்.




நன்றி


கவிஞர் பிரேம்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெரிந்த தேர்தலும் தெரியாத தெரிவுமுறையும்




நன்றி இணையம்

**கலப்பு முறை என்றால் என்ன?**

**அது எப்படி கணக்கு பார்க்கப்படுகின்றது?**

**பெண்களும் கட்டாயம் போகணுமாமே! அதனுடைய விளக்கம் என்ன?**

இதெல்லாம் நமக்கு கட்டாயம் தெரிஞ்சிருக்கணும் நண்பர்களே.. இல்லாட்டி இவர்கள் நம்மட தலையில தேங்கா உடைச்சிட்டுப் போய்டுவாங்க...

இதுல ஒரு சீன வித்தையும் இல்ல, யப்பானிய தந்திரமும் இல்ல. சிம்பிளா விளங்கிக் கொள்ளலாம்!

இப்ப உதாரணத்துக்கு ஒரு ஊரை எடுப்பம். அதுல ஒரு 12 வட்டாரம் பிரிச்சிருக்கு என்று எடுத்துகொள்ளுங்க. இப்ப இந்த கலப்பு முறையில எப்படி வரும் என்றால்.

முதல்ல வட்டாரம் எல்லாம் கூட்டி 60 சதவீதமாக கணக்கெடுப்பாங்க பிறகு அதோட சேர்த்து விகிதாசர முறையிலும் 40 சதவீதம் தெரிவு செய்வாங்க.

அதாவது நம்மட பாசையில சொல்ல போனால், 12 வட்டாரத்துக்கும் 12 பேர், அதோட சேர்த்து போனஸா 8 பேர்! அப்ப மொத்தம் 20 பேர் சபைக்கு போவாங்க!!

சரியோ அவ்ளோதான் கணக்கு!

இப்ப தேர்தல் நடக்குது.

ஒவ்வொரு வட்டாரத்துலையும் ஒவ்வொரு கட்சியும் வேட்பாளர்களை போடும். நம்ம விரும்புற கட்சிக்கு வோட்டு போடுவம். இப்ப அதுல எந்த கட்சி அதிகமாக வோட்டு எடுக்குதோ அந்த கட்சி அந்த வட்டாரத்துல வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

அப்ப அந்த 12 பேரையும் தெரிவுசெய்தாச்சு.

**சரி இப்ப மற்ற 8 ஆசனங்களும் எப்படித் தெரிவு செய்வாங்க?**

அதுக்கு என்ன செய்வாங்க என்றால் நண்பர்களே,

எல்லா வட்டாரத்துலையும் எல்லா கட்சிகளும் எடுத்த மொத்த வோட்டுகளை கூட்டுவாங்க. அதாவது ஊர்ல அளிக்கப்பட்ட மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாக்குகளைக் கூட்டுவாங்க.

உதாரணத்துக்கு அப்படி கூட்டி ஒரு 15,000 வோட்டுகள் வருது என்று எடுத்துக்கோங்க!

இப்ப அந்த 15,000 வோட்டையும் மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையான 20 ஆல பிரிப்பாங்க. அப்படி பிரிச்சா 750 வரும்.

**இப்ப அந்த 750 வோட்டுத்தான் ஒரு ஆசனம் கிடைப்பதற்கான ஆகக்குறைஞ்ச வோட்டு! சரியோ?**

இப்ப என்ன செய்வாங்க என்றால்,

ஒவ்வொரு கட்சியும் எல்லா வட்டாரங்களையும் சேத்து மொத்தமா எத்துன எத்துன வோட்டு எடுத்திருக்கு என்று பார்ப்பாங்க.

உதாரணத்துக்கு இங்கு எடுப்பம். அந்த கட்சி எல்லா வட்டாரங்களையும் சேர்த்து ஒரு 6000 வோட்டு எடுத்திருக்கு என்று வச்சிக்கொள்வோம்.

இப்ப இந்த 6000 வோட்டுக்கும் எத்தனை ஆசனம் கிடைக்கும் என்று கணக்கு பார்ப்பாங்க. அப்படி என்றால், இந்த 6000 ஐயும் 750 ஆல பிரிப்பாங்க. அப்படி பிரிச்சா 8 வரும். அதனுடைய அர்த்தம் என்ன என்றால் இங்கு மொத்தம் 8 ஆசனங்கள் போய்ச் சேரணும்.

இப்ப இங்கு எத்தன வட்டாரத்துல வெற்றி பெற்றிருக்கு எண்டு பார்ப்பாங்க. உதாரணத்துக்கு அவங்க 5 வட்டாரத்துல வெற்றி பெற்றிருந்தால், அந்த ஐந்தையும் கழித்துவிட்டு அவங்களுக்கு போய் சேர வேண்டிய மிச்சம் 3 ஆசனங்களும் அந்த போனஸ் லிஸ்டுல இருந்து வழங்கப்படும்.

அதோட கேம் ஒவர்!

இன்னம் ஒரு உதாரணமும் சொல்லணும்.

இப்ப ஒரு சுயேட்சை குழு எலக்சன்ல நிக்கிறது என்று வச்சிகோங்க. இப்ப அவங்க ஒரு வட்டாரத்துலயும் வெற்றி பெறல்ல என்று எடுப்பம்.

ஆனால்,

எல்லா வட்டாரங்களையும் சேத்து அவங்களுக்கு ஒரு 800 வோட்டு கிடைச்சிருக்கு என்று எடுத்தால், அவங்களுக்கும் போனஸ் லிஸ்டுல இருந்து ஒரு ஆசனம் வழங்கப்படும். ஏனென்றால் அவங்க ஒரு ஆசனத்துக்கான ஆகக்குறைஞ்ச வோட்டு எண்ணிக்கையான 750 எடுத்திருக்காங்க!!

ஆகவே இதுல எல்லா கட்சிகளுக்கும் எல்லா வகையிலையும் வெற்றி பெறலாம்.

ஒரு கட்சிக்கு ஒரு வட்டாரத்துல மட்டும் தான் வாக்கு இருந்தாலும் ஆசனம் கிடைக்கும் வாய்ப்பிருக்கு. அப்படி இல்லாம ஊருக்குள்ள பரவலாக வாக்குகள் இருந்தாலும் ஆசனம் கிடைக்கும் வாய்ப்பிருக்கு.

இதுல லிஸ்டு போட்றத்துல இன்னொரு விடயமும் இருக்கு. அது என்ன என்றால்,

**இப்ப ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒவ்வொரு கட்சி சார்பாகவும் ஒவ்வொரு ஆள் நியமக்கப்பட்டு ஒரு லிஸ்டு போடுவாங்க தானே?**

ஆமாம்!

அதுக்கு மேலதிகமாக இன்னுமொரு போனஸ் லிஸ்டும் நிரப்பி கொடுக்கப்படும். அதாவது எங்களுக்கு போனஸ் ஆசனம் கிடைக்கும் பட்சத்தில் நாங்க இதுல இருந்து ஆக்கள் நியமிப்போம் என்று கொடுப்பாங்க.

ஆனா அதுல சுவாரஷ்யம் என்ன என்றால், கட்டாயம் அந்த லிஸ்டுல இருந்து தான் போனஸ் ஆசனத்துக்கு ஆக்கள் போடணும் என்று கட்டாயம் இல்ல. வட்டாரத்துல தோல்வியடைந்த ஆக்களையும் போடலாம்.

சரியோ அவ்வளவுதான் விஷயம்.

**சரி இப்ப, அந்த பெண்கள் ஆசனங்கள் தொடர்பான விளக்கம் என்ன?**

கட்டாயம் 25 சதவீதம் சபைக்கு பெண்கள் நியமிக்கப்படவேணும் என்று சொல்றாங்களே அப்படி பார்த்தால் அந்த 20ஆசனங்களில் 5 ஆசனங்கள் பெண்களா இருக்கணுமா? அப்டின்னு நீங்க யோசிக்கிறது நியாயம்.

ஆனால், இதைப்பத்தி எல்லா கட்சிகளும் பயப்பட தேவையில்ல மக்களே!.

ஏன் என்றால்! 3 ஆசனங்களுக்கு மேலதிகமாகவும் மொத்த வாக்குகளில் 20% ஆன வாக்குகளுக்கு மேலதிகமாகவும் பெறுகின்ற கட்சிகள் மட்டும்தான் அந்த கணக்குக்குள் உள்வாங்கப்படுவார்கள்.

ஆகவே அந்த லிஸ்டுக்குள்ள வார கட்சிகளில் பெண்கள் வெற்றி பெறாத பட்சத்தில், அவர்களின் போனஸ் லிஸ்டிருந்து கட்டாயம் பெண்கள் நியமிக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

சில நேரங்களில் பெண்கள் எண்ணிக்கை 25%ஐ விட குறையவும் வாய்ப்பிருக்கு.

கட்சிகள் எடுக்கன்ற ஆசனங்களின் நிலைப்பாட்டை பொறுத்து தேர்தல் ஆணையம் அதனை அனுமதிக்கும்.

**சரியோ. இதுதான் அந்த விளக்கம். இனி வோட்டு போட ரெடியாகுவோம்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கலோ பொங்கல்

தமிழர்களின் தனித்திரு நாளாம் தைப்பொங்கல் அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். நன்றி செலுத்தும் இந்நாளானது சில இடங்களில் நான்கு நாட்களுக்கான பண்டிகையாக கொண்டாடப்படுகின்றது. அப்பண்டிகைகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்.

### 1. போகி

போகி தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று அதாவது, பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாள் பழையவற்றையும், உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது.

பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிகையை ''போக்கி'' என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி ''போகி'' என்றாகிவிட்டது.

அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள், தேவையற்றபொருட்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும். வீடு மட்டுமல்ல மனதில் இருக்கும் தீய எண்ணங்களும், தவறான எண்ணங்களும் நீக்கப்படவேண்டும் என்பது இதில் உள்ள தத்துவமாகும்.

இதையொட்டியே பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப்படும். இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும்.

தமிழரசி

### 2. தைப்பொங்கல்


தைப்பொங்கல் தை மாதம் தமிழ் முதலாம் திகதி உலக நாடுகள் அனைத்திலும் வாழுகின்ற தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஓர் விழாவாகும். உழைக்கும் மக்கள் இயற்கைக்கும், மற்ற உயிர்களுக்கும் நன்றி சொல்லும் ஒரு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை மாதம் தமிழ் முதல் தினத்தில் இந்த விரதத்தை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, சூரியன், உதவிய மாடு போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் திருநாள் கொண்டாட்டமாக மாறியது.

பொங்கல் விழா, மக்களால் இயல்பாகக் கொண்டாடப்படுகிறது. உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கை சக்திகளுக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழா. உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல் ஆகும்.

### 3. மாட்டுப் பொங்கல்

மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இது பட்டிப் பொங்கல் அல்லது கன்றுப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

அன்று மாடுகள் கட்டும் தொழுவத் தினைச் சுத்தம் செய்து கொள்வார்கள். கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய் வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வர்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டி விடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் ஜல், ஜல் சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட் டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

உழவுக்கருவிகளை சுத்தம் செய்துசந்தனம், குங்குமம் வைப்பார்கள். விவசாயத்தில் பயன் படுத்தப்படும் அனைத்துக் கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டு களில் தோட்டம் காடுகளில் விளைந்த பயிர் பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட் டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

**4. காணும் பொங்கல்**

காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா ஆகும். காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் அல் லது கணுப் பண்டிகை என்றும் அழைப்பர்.

உற்றார், உறவினர், நண்பர்களை காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன அடங்கும். பல்வேறு விளையாட்டுப் போட் டிகள், பட்டி மன்றம், வழுக்கு மரம் ஏறல் என்று வீர சாகசப் போட்டிகளிலிருந்து சகல மும் இடம் பெறும்.

இது பெண்களுக்கு முக்கியமான பண் டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும் போது அதில் புது மஞ்சள்கொத்தினை கட்டி அதனை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று அதனை கல்லில் இழைத்து பாதத்தில் முகத்தில் பூசிக் கொள்வார்கள்.

**நான்கு நாட்களுடன் பண்டிகை இனிதே நிறைவுறும்.**

**இம்மாதம் பிறந்தநாளைக் கொண்டாடும் இந்த மழலைச் செல்வங்களுக்கும் ஒளிஅரசியின் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்**



பி.பவிசனா
கண்ணகை முன்பள்ளி
மட்டுவில்- 04.12



ம. வாகீசன்
கொடிகாமம் தெற்கு
முன்பள்ளி-18.01



பா.சைனுகா
டேனுஜா முன்பள்ளி
18.01.2018



ம.பிருத்திகன்
டேனுஜா முன்பள்ளி
31.01.2018



நி.கெ.பெ. டெனிசன்
நவலர் முனபள்ளி
29.01.2018



அ.யெ.வர்ஷன்
சித்திவிநாயகர்
முன்பள்ளி-13.01



செ.கிருஷிகா
நவலர் முன்பள்ளி
13.01.2018



பி.ஸேஜான்
டேனுஜா மழலைகள்
கல்வி பூங்கா- 06.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





-அபர்ணா-

# திருமதிக்கு ஒரு வெகுமதி

இருளைத் தூவிய இரவின்
சாலையில்
வெளிச்சத்தை உமிழும்
சாலையோர விளக்குகள்
விர் ரெனப்பாயும் வேகவாகனங்கள்
ஜன்னலோரபடுக்கையில் இருந்தபடி
விடுதி மாடியறையில் இவள்.

இத்தனையும் இருந்தும்
பார்வை வட்டத்தில்
இந்த மழைதூறும் பின்னிரவில்
மனதில் ஏதும் புலப்படுவதாயில்லை.

வேலைமுடிந்துவந்து
உடல்சோர, மனந்தேட
யார் யாரோ இருந்தும்
யாரும் அற்றவளாய்
இந்த விடுதி வாழ்வுதனில்,

இப்பொழுதெல்லாம் மனதில் தனிமை
ஒவ்வாமையாகி ஒரு யுகம் கடக்க
பல யுகங்களைக் கடந்துவிட்டேன்

மாமி என அழைத்த
எதிர்வீட்டுமாடியின் பெண்குரல்
என்னையும் அழைத்துச்செல்கிறது
உன்னிடம்,
தனிமையில் தவிக்கும் போது
உன்முகம் தேடுகின்றேன் - நான்.
எனைக்குறித்து சிறுநினைவிருக்கா?
நீ இப்போதும் என்னைத்தேடுகிறாயா?
அல்லது அப்போதே மறந்துவிட்டாயா?..

முதல் முதலாய் இப்படித்தான்
அறிமுகம்.
என்னவன் தன் காதலி எனக்கூறி
அனுப்பிய உன் திருமுகம்
புகைப்படமாய் வந்துசேர்கிறது;
அன்னை உன் நகலெடுத்து என்னவன்
சாயலின் சிலபாதி உன்னவனும்தான்.

எங்கிருந்தோ வந்தான்
என்னை அறியாமல் எனக்குள் ஊடுருவி
என்னவனாய் அகத்தில் உள்நுழைந்து
என் உலகமாய் மாறியிருந்தான்
உன் மகன்,
அவன் குணம்மெச்ச குலம்மெச்ச
குடிகொண்ட மனம்மெச்ச
மனதார வாழ்வேற்க
உருகித்தான் போயிருந்தாள் இவள்.

பரபரக்கும் வேலைகளில்
மனதிற்கு மகிழ்வளித்து இதம் தர
தொலைபேசி தொடும் திரையில்
உன் திருமுகம்; பார்க்கின்றேன்.
ஆழகான அமைதிகொண்ட முகமதில்
மீனாட்சி மூக்கின்மேல் போலந்த மூக்குத்தி
அதை உன்னவன் வாங்கித் தந்தானா
இல்லை
என்னவன் அன்னைக்கு கொடுத்த அன்பின்
பரிசா?
கடற்கரை மண் மீது விளையாடும்
குமரிகளை கைகட்டி
கண்வெட்டாமல் உன்பார்வை
என்னைத்தான் காண்கிறாயா?
தேடித்தான் மனம் களைத்து
கண்கலங்கிக் கொண்டாயா.?
அதன் வெளிப்பாடாயத்தான் நீ
சற்றே முகம் திருப்பிக்கொண்டாயா?

பரபரப்பாய் சமையலிலும்
ஓயாது கால்கடுக்கும் வேலையிலும்
தனிமையில் தவித்திடும் வேளையிலும்
கொஞ்சம்கதைபேச உளத்திற்கு உரம்சேர்க்க
மறுமகள் மனம் கொள்ளும் மருமகள்
இவள் வேண்டுமெனநினைப்பாயா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் அன்னை உன் ஊரின் பெயர் சொல்லி
உன்னை நலம் கேட்டாள்.
என்னவன் வாய்மொழி உரைத்திடவே
அன்பில் சிலிர்த்துப் போனவள் இவள்
அவனும் சளைத்தவன் இல்லைத்தான்,
தன் காதலியின் குரலையும் அறிமுகம்
செய்தான்.
மறுமுனையில் இவள் இதழ் கடைவிரிய
நீ செப்பிடும் விபரமெல்லாம்
மனக்கிடங்கில் சேகரிப்பது புரியாமல்
அன்னை நீ அன்றைய சமையலின்
விபரம் எடுத்துரைக்க
உரையாடல் நீண்டு செல்ல
வேண்டுமென்று உன் மகன் உன்னிடம்
பல வினா தொடுக்கின்றான்,
வெளிப்படையாய் பேசும் உன்குரல்
மறுசாயலாய் என் அன்னை கண்முன்னே.

நாட்கள் கடந்தேக
இளவேனில் காலமொன்றில்
உன் மகனுக்கும் இவளுக்கும்
அன்பினை நங்கூரமிட
உன் வீட்டில் என் வீடு சங்கமம்.
ஆழகான அன்புகளின் அறிமுகம்.
அன்று முதல் உன்னவன்
என் தந்தை நாயகனானான்.
அன்றிலிருந்து உன் வீட்டின் புகழாரம்
என் வீட்டில் இன்றுவரை ஓயவில்லை.

மாங்கல்ய பந்தம் மாலையிட்ட உறவு
மகத்தானதாய் அது மாற
மகிழ்வோடு உன்மகன் துணையாக
திருமணமாம் நமக்கு,
உள்ளத்தில் நாம் சுமந்த
உண்மையான அன்பிற்காய்
சிறந்த வெகுமதியாம்
இது பஞ்சாங்கம் பார்த்த
பல பேரின் வாய்மொழி.

இவள் பாசத்தின் பிணைப்பில்
பங்கேற்க வருகிறாள.
உள்ளத்தில் பல கனவு சுமந்து
உன் இல்லத்தில் நுழைய இவள்
உன் மகனுக்கு மனைவியாய்
பாதம் தூக்கி படியேறி
வரவிரும்பும் இவளுக்கு
அன்னைக்கு நிகராய் நீ
இருக்க
உன்னை நாடி வருகின்றேன்,
மாமி உன் மடிமீது நான்
முகம் புதைக்க

தாலி சுமந்த பின்னே
உன் முந்தானை பின்னே நான் தொடர
வயதாகிவிட்டாலும்
வரைமுறை புரியவில்லை,
அவன் தேவை எதுவென்று உணர்ந்து நீ நட
என் முந்தானை பிடித்து விரல் சூப்பி
நிற்காதே,
என்று நீ அன்பினால் கடிந்துதான்
கொள்வாயோ..?


என் பின்னே உனையிருத்தி
உவகை கொண்டு ஊர்வலம் நான்வர
உவப்பான கண்ணெல்லாம்
விழி விரித்து வாய்பிளக்க
என்மாமன், அப்பொழுது
தன் மனைவி, தனை மறந்து
மருமகள் பின்னே வெகு ஜோராய்
செல்கின்றாள் எனச்சொல்லி
வாய்விட்டுச் சிரிப்பாரோ.
மைத்துனரும் மைத்துனியும்
அம்மாவின் அன்பிலும் ஒரு படி
அண்ணி நீ அதிகம்என்று
வெம்பித்தான் கொள்வாரோ..?

பொற்தாலி புனைந்து கரம்பிடித்து
அழைத்துவந்த நான் மறந்து,
அன்னைநெஞ்சில் இடம்பிடித்து
அவர் மனம் போல நடக்கிறாய் கள்ளி,
என்னையும் கண்பாரு என்று
என்னவன் பெருமிதமாய் கண்சிமிட்டி
நெஞ்சோடு அணைப்பானோ.?

கரையில்லா அவன் அன்பில்
கவலையின்றி நான் வாழ
அன்பை பகிர்ந்தளித்து
மருக ஒரு மகளாக
அறுதிவரை வாழந்திடவே
தொலைவில் உள்ள உன்னிடம்
சிறுகுழந்தையாய் ஆசை
கொள்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணல் இ. ஜனதன்
படப்பிடிப்பு உதவி ஐங்கரன், றெனிபேட், ஜனகன்.

# வாசி வாசிக்கப்படுவாய்

**வா**சி வாசிக்கப்படுவாய் என்ற நவீன சொற்றொடரானது வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என்ற உண்மையை உணர்த்துகின்றது. மற்றவர்கள் எம்மைத் திரும்பிப் பார்க்கவும் ஏனையவர்களிடம் இருந்து நாம் வேறுபட்டுத்தெரியவும் வாசிப்பு காரணமாகின்றது. அதுமட்டுமன்றி ஊடகங்கள் மூலம் எம்மை உலகம் வாசிக்கும் அழகான தருணங்களையும் வாசிப்பதனால் நாம் உணரமுடியும்.

இந்த அடிப்படையில் இம்மாத தைப்பொங்கல் சிறப்பிதழின் முகப்பு அட்டைக்காக எமது நாட்டின் கிராமத்து வாசம் நிறைந்த 'நல்லதொரு குடும்பம்' என்ற இலக்கிற்கேற்ப ஒரு குடும்பத்தினைத் தேடிய போது எம்மைத் திரும்பிப் பார்க்கவைத்த எடுத்துக்காட்டான குடும்பமாக கைதடியைச் சேர்ந்த திரு. திருமதி தபேந்திரன் குடும்பம் விளங்கியது.

கணவன் மனைவி இருவரினதும் வாசிப்பு திறனால் தமது ஆழ்ந்த சிந்தனைகளை தாம் வாசித்த விடயங்களுடன் தொடர்பு படுத்தி புதிய சிந்தனைகளை உருவாக்குவதில் உள்ள ஆர்வத்தினாலும் தாம் வாசித்த விடயங்களை பிறருடன் பகிர்வதன் மூலம் தமது அனுபவங்களை காரண காரியங்களுடன் பிறருக்குத் தெளிவுபடுத்துகின்றனர். தன்னையும் தனது குடும்பத்தையும் தனது சமூகத்தையும் தனது நண்பர்கள் வட்டத்தையும் தனது காத்திரமான படைப்புகள் மூலமும் முகநூல் பதிவுகள் மூலமும் தொலைக்காட்சி நேர்காணல்கள் மூலமும் விழிப்புணர்வு அடையச்செய்யும் ஒரு உன்னத படைப்பாளியாக திரு. வேதநாயகன் தபேந்திரன் விளங்குகின்றார்.

வாசிப்பு பழக்கம் அருகி அழிந்துவரும் இக்காலகட்டத்தில் இவ்வாறான ஒரு குடும்பத்தை நோக்கி அவர்களின் இல்லத்திற்குச்சென்றோம். எமது தைப்பொங்கல் சிறப்பிதழிற்கான (கடந்த மாதம் 23ம் திகதி சனிக்கிழமை காலை) மாதிரிப்பொங்கல்செய்து ஒரு அழகான உணர்வுபூர்வமான முகப்பு அட்டையைத் தயார்செய்ய எமக்கு ஒத்துழைப்பு தந்து எமது பணியாளர்களை மகிழ்வித்த அந்த காலைப்பொழுதை என்றும் மறக்கமுடியாது. படப்பிடிப்பின் பின்னர் வாசகர்களுக்காக சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு திரு. தபேந்திரனை அணுகிய போது எம்மோடு பகிர்ந்துகொண்டவை எமது வாசகர்களுக்காக **வணக்கம் தபேந்திரன், உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பம் பற்றியும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சற்று கூறுங்களேன்** என்றதும், வணக்கம் என இருகரம்கூப்பி உரையாட ஆரம்பித்தார்.

நான் எனது ஆரம்பக்கல்வியை யாழ்/ புனிதர் சாள்ஸ் வித்தியாலயத்திலும் இடைநிலை உயர்கல்வியை யாழ்/ இந்துக்கல்லூரியிலும் பட்டப்படிப்பை யாழ் பல்கலைக்கழகத்திலும் (B.Com, PG-D.PDS , M.A in Development Studies,) கற்றேன். 1997 முதல் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றேன். இதுவரை 11 பொதுஅறிவு நூல்களையும் பூத்திடும் பனந்தோப்பு, யாழ்ப்பாண நினைவுகள் 1, 11, 111 ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளேன். எனது மனைவி ஆசிரியையாக பணிபுரிகின்றார். இவரும் யாழ் பல்கலைக்கழக கலைமாணி பட்டத்தையும் , மதுரை காமராஜர் பல்கலைக்கழக எம். ஏ பட்டத்தினையும் நிறைவு செய்துள்ளார். எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இருவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இடைநிலைக் கல்வியினை சிறப்பாக கற்றுவருகின்றனர். மகன் இலக்கியன் தரம் 11 இலும் மகன் இந்துஜன் தரம் 07 இலும் கற்கின்றனர்.

**புலமைப்பரிசில் அனுபவ பகிர்வும் வழிப்படுத்தல் ஆலோசனைகளும்.**

**ஆம்! நல்லதொரு அழகான கல்விக் குடும்பத்தை உருவாக்கி நிர்வகிக்கும் நீங்கள் எமது வாசகர்களுக்கு கூறவிரும்பும் விடயங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்?**

யதில்லை. ஆனால் இன்று கூட இப் பரீட்சை பெற்றோர்களின் கௌரவத்தை உரசும் பரீட்சையாகவே உள்ளது. பரீட்சைத் திணைக்களம் 70 புள்ளிகளுக்கு மேலாக எடுத்தவர்கள் யாவரும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவே அறிவித்து சான்றிதழை வழங்கி வருகிறது. ஆனால் இது பேச்சளவில் உள்ளதாகவே தெரிகிறது.. அந்தச் சான்றிதழை மாணவர் பரீட்சையில் சித்தி பெற்றவர் என ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் இன்னும் உருவாக்கப்படவில்லை.

இப்பரீட்சைக்கான பந்தயத்தில் வெற்றி பெற வேண்டும் எனத் துடிக்கும் பெற்றோர்களால் இத்துறை பணம் உழைக்கும் புலமைசார் தொழிலாக மாறிவிட்டது. இந்த மாணவர்களுக்கு கற்பித்து புத்தகங்கள், பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் அடித்து பெரும் பணக்காரர்களான முன்னணி ஆசிரியர்களும் உள்ளனர்.

**பரீட்சை என்பது கற்றலின் அளவு கோல் அல்ல. வெளிப்படுத்தும் ஆற்றலின் அளவுகோல்.** இது தான் பரீட்சை தொடர்பான சரியான கூற்று எனலாம். அதை உணர்ந்து மாணவர்களை வழிநடத்த வேண்டும். வெற்றி உங்களதே. பரீட்சை என்பதை சுமையாக கருதாமல் பிள்ளைகளுக்கு சுகமான ஒன்றாகக் கற்றுக் கொடுங்கள்.

வெற்றி பெற்ற பெற்றோர்களில் ஒருவராகிய நாம் எமது அனுபவப் பகிர்வைத் தருகிறோம்.

# புலமைப்பரிசில் மாணவர்களின் பெற்றோருக்கான அறிவுரைகள்

தை பிறந்து விட்டது. புதிய வருடத்தில் பாடசாலைகளும் தொடங்கி விட்டன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தான் கல்வி உலகிற்கு பேரழுத்தம் கொடுக்கும் பரீட்சையாக உள்ளது. சின்னஞ்சிறு பிஞ்சுகளுக்கு 10 வயதில் பாறாங்கல்லைத் தூக்கி தலையில் வைப்பது போல இப்பரீட்சை விமர்சிக்கப்படுகின்றது. வெற்றி பெற்றவர்களுக்கு மகுடம் சூட்டும் பெரு விழாக்களும் தோல்வியடைந்த மாணவர்கள் தேம்பி அழுதலுமாக தொடர்கின்றது.

இப் பரீட்சை தடைசெய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை காலத்துக்குக் காலம் கல்வி உலகத்தால் விடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் மாற்றுவழி கண்டுபிடிக்கப்படவில்லை. தரம் 01 முதல் உயர்தரம் வரை வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில் மாணவர் ஒருவர் புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை பெற வேண்டி நீங்களும் வழிகாட்டுங்கள்.

முன்பள்ளிக் காலம், தரம் 1,2,3,4 ஆகிய வகுப்புக்களிலேயே உங்கள் பிள்ளைகளது கல்வி தொடர்பான உயர் அக்கறையை எடுங்கள். கல்வியின் ஆரம்ப கட்டம் முதலே கவனம் செலுத்தி வந்தால் தான் தரம் 5 இல் நல்ல கல்வித் தரத்தை அடைய முடியும். ஆகவே கல்விப் படிமுறையின் தொடர்ச்சி தான் இப்பரீட்சையும்.

முதலாவது விடயம் என்னவெனில் வீட்டில் அன்பான சூழலை ஏற்படுத்துவதுடன் கற்றலுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுங்கள். இயன்ற வரை கற்பதற்கு தனியான அறை ஒன்றை கொடுக்கப் பாருங்கள்.

அயலில் உள்ள பிள்ளைகள், உறவுக்காரப் பிள்ளைகளுடன் உங்கள் பிள்ளையை ஒப்பிட்டு குறைவாக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதைக்காதீர்கள். பிள்ளை தன்னை தாழ்வாகநினைக்கும்நிலைவரவே கூடாது. தாழ்வுமனப்பாங்கு உண்டானால் வாழ்க்கையின் சகல கட்டங்களிலும் பிள்ளை பாதிக்கப்படும்.

எல்லாப் பிள்ளைகளும் அதி திறமை கூடிய பிள்ளைகளாக இருக்க மாட்டார்கள். ஆகவே பாடசாலைக் கல்விக்கு மேலதிகமான மிகை நிரப்புக் கல்வி தனியார் கல்வி நிலையங்கள் ஊடாகவே கிடைக்கிறது. ஆனாலும் தான்தோன்றியாகப் படித்து பரீட்சையில் உயர் புள்ளிகளை எடுக்கும் அசாதாரண ஆற்றல் உள்ள பிள்ளைகளும் இருக்கிறார்கள்.

உடல் வியர்த்துப் போனால் உடல் உள உற்சாகம் கிடைக்காது.



ஆகவே வீட்டிற்குக் கூட்டிவந்து பிள்ளை கை, கால் முகம் கழுவி சாப்பிட்டபின்னர் மாற்று ஆடை அணிந்து ரியூசனுக்குக் கூட்டிப்போங்கள். வெட்டுப் புள்ளியைத் தாண்டும் இப் போட்டிப் பரீட்சைக்கு உள உற்சாகம் தரக்கூடிய உளநிலை என்றும் அவசியமானது.

வாராந்த பரீட்சைகளில், மாதாந்தப் பரீட்சைகளில் 170 புள்ளிகளுக்கு மேலாக எடுத்தால் அவர்கள் விரும்பும் சிறு அன்பளிப்பு பொருள்களைத் தருவதாக வாக்களியுங்கள். புள்ளிகளை எடுத்தால் வாக்களித்தபடி அன்பளிப்புக்களைக் கொடுங்கள். உங்கள் பொருளாதார இயலளவு தெரிந்து வாக்குறுதி கொடுங்கள், ஏமாற்றாமல் சொன்னபடி வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்.

வாரத்தில் ஒரு நாள் முழுமையான ஓய்வு கொடுங்கள். ஓய்வு என்பது மீண்டும் இயங்குவதற்கான புத்துணர்வைத் தரும். அது போல ரியூசன் இல்லாத மாலை நேரங்களில் தாராளமாக விளையாட விடுங்கள். விளையாட்டு என்பது உடல் உள உற்சாகத்திற்கு மிகவும் அவசியமானது.

வயதுக்கு ஏற்ற உடல் நிறை சமநிலை பேணப்பட்டு எதிர்காலத்தில் நோயற்ற சமூகம் ஒன்று உருவாக விளையாட்டு அவசியமானது. வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் தன்மையும் விளையாட்டின் மூலமாகப் பெற்றுக் கொள்ளுவார்கள்.

மாதாந்த வாராந்தப் பரீட்சைகளில் புள்ளிகள் குறைவாயின் அன்பாக தடவிக்கொடுத்து முன்னேற்றுங்கள். பிள்ளையை தண்டித்து முன்னேற்ற முடியாது. இந்த உளவியல் உத்தி தெரியாத நிலையால் தான் ஏராளம் பிள்ளைகளை வழி நடத்த முடியாத நிலை ஏற்படுகிறது. சாதாரண நிலையில் உள்ள பிள்ளையையும் சாதனையாளராக மாற்ற முடியாத நிலை உள்ளது. உங்கள் பிள்ளைகளை உங்கள் வீட்டுப் புறச் சூழலில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் மட்டும் படிக்க விடுங்கள். தூரமான இடங்களுக்கு ஏற்றி இறக்கினால் பிள்ளைகளைத்துப் போய் விடும். தனக்கு அந்நியப்பட்ட சூழலில் கூச்ச சுபாவத்துடன் இருக்கும். கற்றலில் ஆர்வம் செலுத்தாது. தனது நட்பு வட்டாரத்தில் தான் உற்சாகமாகக் கற்றலை தொடரும். பிள்ளை கற்றவற்றை மீட்டிப் பார்க்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அப்படிச் சந்தர்ப்பம் வழங்கப்படாமல் வழங்கும் கல்வியில் எந்த பயனும் இல்லை.

பிள்ளையும் கற்றல் சுமையிலிருந்து விலக அவ்வப்போது வீட்டில் தொலைக் காட்சி பார்க்க மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபட நேரம் ஒதுக்குங்கள். உள மகிழ்வு இல்லாத செயல் ஒரு நாளும் வெற்றி தராது. எந்த நேரமும் படி ,படியென நச்சரிக்காதீர்கள். பொழுது போக்கிற்கும் நேரம் ஒதுக்குங்கள். 24 மணித்தியாலம் உள்ள ஒரு நாளையும், 7 நாள்கள் உள்ள ஒரு வாரத்தையும் அட்டவணைப்படுத்தி நேர முகாமைத்துவத்தை கடைப்பிடியுங்கள்.

மிகவும் முக்கியமானது பிள்ளை வீட்டில் படிக்கும் நேரத்தில் நீங்கள் கதைக்கக் கூடாது. கதைத்தால் பிள்ளையின் சிந்தனை உங்கள் கதைகளை விடுப்புக் கேட்பதாக மாறி விடும். தொலைக்காட்சி பார்ப்பதையும் நிறுத்துங்கள். மெல்லிய சத்தத்தில் கூடத்தொலைக் காட்சி பார்க்க வேண்டாம். உங்கள் ஆசாபாசங்களை தியாகம் செய்யுங்கள். பரீட்சை தொடர்பான கடந்த கால வினாத்தாள்களை கொடுத்து நேர வரையறைக்குள் விடையளிக்கப்பழக்குங்கள். கடந்தகால வினாக்கள் மூலமாக பரீட்சையின் போக்கைக் கண்டறியலாம். இதுவும் மிக முக்கியமானது.

மாதிரி வினாத்தாள்களை கொடுத்து விடையளிக்கப் பழக்குங்கள். எந்தெந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்களில் கஸ்ட நிலையை எதிர்கொள்கின்றார்கள் எனப்பாருங்கள். அதைக் கவனமெடுத்துக் கொள்ளுங்கள்.

கற்பிக்கும் ஆசிரியர்களைச் சந்திப்பதும் முக்கியமானது. இரு வாரத்திற்கு ஒரு முறை பாடசாலை, தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களிடம் சென்று பிள்ளையின் கல்வி முன்னேற்றம் குறித்து கதையுங்கள். எந்தெந்த இடத்தில் இடைவெளி உள்ளது என்பதை மதிப்பிடுங்கள்.

உங்கள் வசதிக்கேற்ப மாதத்திற்கொரு முறை பூங்கா, சினிமாத் தியேட்டர் ஆகியவற்றுக்கு அழைத்துச் சென்று மகிழ்வான பொழுதைக் கொடுங்கள். விளையாடும் வயது உள்ள பிள்ளையை முழுமையாகக் கல்விச் சிறையில் வைத்திருக்கக் கூடாது. பிள்ளைக்கு விருப்பமான பொழுது போக்கை அனுபவிக்க வசதி செய்து கொடுங்கள்.

பரீட்சை நெருங்கும் நாள்களில் பிள்ளையை வகுப்பில் சராசரியாக எடுத்து வந்த புள்ளிகளைக் கூறி அது போல இறுதிப் பரீட்சைக்கும் எடுப்பீர்களா என அடிக்கடி கேட்டு உள நெருக்கீட்டைக் கொடுக்கக் கூடாது.

கிரகித்தலுக்கு மன ஒருமைப்பாடு மிக முக்கியமானது. இதற்கு இறைவழிபாடு தேவையானது. வாரத்தில் ஒரு நாளாவது வெள்ளிக்கிழமை அல்லது ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைவழிபாடு நிகழ்த்த விடுங்கள். நாளாந்தம் வீட்டிலும் காலை, மாலை உடலை தூய்மையாக வைத்திருந்து இறைவழிபாடு செய்ய விடுங்கள். இறைவழிபாடு மூலமாக நற்பண்புகளைப் பிள்ளைகள் கற்றுக் கொள்ளுவார்கள். நற்பிரசைகளாக உருவாக இது மிகவும் முக்கியமானது. பிள்ளைக்கு நாளாந்தம் செய்திப் பத்திரிகை பார்க்கப் பழக்குங்கள்.

குறைந்தது பத்திரிகையின் முன்பக்கச் செய்திகளில் நாலைந்து செய்திகளுக்கு முன்பாக பேனாவால் கோடிட்டு அவற்றை வாசிக்கச் சொல்லி சொல்லுங்கள். அதன்கருத்தைக் கேளுங்கள். பின்னர் செய்தியின் பின்னணியை உங்களுக்கு விளங்கிய வகையில் கூறுங்கள். இதனூடாக வேறுபட்ட தகவல்களை வேறுபட்ட வழிகளில் கிரகிக்கும் நிலை வரும்.

இது பிள்ளைக்கு சிந்தனைத் திறனைக் கூட்டும். புலமைப் பரிசில் பரீட்சையில் இத்தகைய சிந்தனைத் திறனே கூடிய புள்ளிகளைப் பெற வழி தரும். இலகுவான வினாத்தாளை மாறுபட்ட சிந்தனைக் களத்தில் தயாரித்திருப்பார்கள். வினாத்தாளின் முதலாம் பகுதியில் 40 வினாக்களில் 35 இற்கு சரி எடுக்கும் வகையில் வழிப்படுத்தி வாருங்கள். நிறைந்த பயிற்சிகள் ஊடாகத் தான், இந்த வேகம் விவேகம் கிடைக்கும்.

அப்படி எடுத்தால் தான் வெட்டுப் புள்ளிகளை அடையலாம். 35 சரி எடுப்பதற்கு பயிற்சி அவசியம். வினாத்தாளின் இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கையில் கையெழுத்து தெளிவாக இருப்பது அவசியம். ஏனெனில் வாசிக்கத் தெளிவு இல்லாத விடைகளுக்குப் புள்ளிகள் கிடைக்காது.



அது போல நிகழ்காலம் எது, எதிர்காலம் எது எனத் தெரிந்து விடையளிக்கப் பழக்க வேண்டும். சிங்களம், ஆங்கிலம் ஆகியவை இரு புள்ளிகளுக்கு ஆயினும் அவை வெட்டுப்புள்ளியை அடைவதற்கு கட்டாயம் தேவையானவை. தாய்மொழி தவிர்ந்த பிறமொழித் தேர்ச்சியை மாணவப் பருவத்தில் பெற்றுக் கொள்வது எதிர்கால வாழ்க்கைக்கு சிறந்த அடித் தளத்தை ஏற்படுத்த உதவும்.

160 இற்கு மேற்பட்டசராசரி மதிப்பெண்களை வாராந்த மாதாந்த பரீட்சைகளில் பெற்று வந்தால் பரீட்சை முடிய உடனேயே உங்கள் வசதிக்கேற்ற சுற்றுலா ஒன்றுக்கு அழைத்துச் செல்வதாக வாக்களியுங்கள். அது பிள்ளை தனக்கு விருப்பமான சந்தோசமான விடயம் ஒன்று கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் உற்சாகமாக தானாகவே கற்றலை தொடரும்.

அழுத்தங்கள் எதுவும் இன்றி சுயமான உற்சாகமான கற்றல் நடைபெறும். நீங்கள் வாக்களித்தபடியே பிள்ளைக்கு சிறந்த அடைவு மட்டத்தைப் பார்த்து சுற்றுலாவை வழங்குங்கள். பிள்ளையை நித்திரையின்றி படிக்க வைத்தல், சாப்பிட விடாமல் படிக்க வைத்தல். எந்த நேரமும் ஓய்வு ஒழிச்சலின்றி படிப்புக்காகக் கூட்டித் திரிதல் வேண்டவே வேண்டாம். பரீட்சை நாளில் தூய்மையான ஆடை அணிந்து காலையில் இறைவழிபாட்டிற்கு அருகிலுள்ள மத தலம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லுங்கள். விருப்பத்துடன் கற்பதற்கு மேற்சொன்ன விடயங்களைக் கருத்தில் கொள்ளுங்கள் உடல் நலம் பேணக்கூடிய இலகுவான உணவை அருந்தச் செய்து நேரத்துடன் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கு பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர்களிடம் ஆசி பெறுவது நல்லது. பரீட்சைக்கு அண்மித்த வாரங்களில் உடல் நலத்தைப் பேணக் கூடிய சூழ்நிலையை வைத்திருத்தல் வேண்டும்.


இவை மாதிரிக்குக் கூறப்பட்ட அனுபவங்களே. வெற்றி பெற்றவர்களிடம் இன்னுமின்னும் அனுபவங்கள் இருக்க கூடும். அவற்றை கேளுங்கள். பின்பற்றுங்கள். வெற்றி பெறுங்கள்.

**எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களின் உயிர்நாடியாக விளங்கவேண்டிய கல்விப்பணி தொடர்பாகச் சொல்லுங்கள்?**


வாசித்தல், கிரகித்தல், சிந்தித்தல், மீட்டல் ஆகிய நான்கும் உங்கள் பிள்ளைகளிடம் உருவாக வழிகாட்டுங்கள். மற்றயவை எல்லாமே தானாக நடக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீ.என்.சந்திரகாந்தி

இயற்கை எமக்கு சில வரப்பிரசாதங்களை வழங்கியுள்ளது. நாம் சம்பாதிக்கும் பணம், பொருள், பொன் ஆகியவற்றை எம்மால் சேமித்து வைக்கவும் அவசியமான நேரத்தில் மட்டும் செலவிடவும் முடியும். ஆனால் காலத்தை மட்டும் எம்மால் சேமிக்கவோ அதை வேண்டிய வேண்டிய நேரத்தில் இடங்களில் வைப்பதில்லையே!. அதனால் கால விரயத்துடன் சேர்ந்து ஆத்திரம் கோபம் பிறரை பழிவாங்கும் உணர்வு எல்லாம் உண்டாகின்றது.

எந்த பொருளை எங்கு வைக்க வேண்டும். என்பது தெரியாமல் இருப்பது போல எந்த நேரத்தில் எந்த வேலையை செய்யவேண்டும் என்கிற திட்டமும் எம்மிடம் இல்லாதிருக்கின்றது. **காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா** என்று பாரதி அன்றே காலத்தை




செலவிடவோ முடியாது. எமது காலம் பற்றிய அசட்டை ஒரு பேரூந்தை தவறவிடுவதிலிருந்து வாழ்கையின் அதி முக்கிய வாய்ப்புக்களை இழப்பது வரை எமக்கு பல நஷ்டங்களை உண்டுபண்ண வல்லது.

காலம் எம்மை ஏமாற்றுவதில்லை. எமது அசட்டைதான் பொன்னான காலத்தை வீணடிக்கின்றது. அதிகாலையில் விழிக்க வேண்டும் என்றால் இந்நாட்களில் யார் கேட்கின்றார்கள். ஒரு மணி நேரம் காலதாமதமாக எழும்பினால் நேரத்திற்கு பாடசாலை போவது தடைப்படும். காரியாலயத்திற்கு குறுகிய லீவு போடவேண்டி வரும். இனி தயாராவதற்கு தேவையான பொருட்களை தேடினால் கிடைக்காது. அதில் பெருமளவான நேரம் போய்விடுகின்றது. நாம் தான் வீடுகளில் அந்தந்த பொருட்களை அதற்காக குறிப்பிட்ட ஒவ்வொரு செயலுக்கும் நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளான். வீட்டுப்பாடமோ கந்தோர் வேலையோ அதை இரவு சாப்பாட்டுக்கு முன்னர் பூர்த்தி செய்தால் விட்டது கவலை!

எமக்கான இருப்பத்திநான்கு மணித்தியாலத்தில் எட்டு மணித்தியாலம் தூக்கத்தில் போய்விடுகின்றது. எட்டு மணித்தியாலம் காரியாலயம் அல்லது பாடசாலை என்று கழிகின்றது. மிகுதி எட்டு மணித்தியாலமே நாம் சுதந்திரமாக எமது வாழ்கையின் கருமங்களை நிறைவேற்ற எஞ்சியுள்ளது. அந்த பொன்னான நேரத்தை நாம் பயனுள்ள வழியில் கழிக்க வேண்டும். எமது காரியாலயத்திற்கு போய் வர நான்கு மணிநேரம் தொடரூந்திற்கு செலவாகின்றது என்றால் எமக்கான பல கருமங்கள் அதனால் தடைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த விடயத்தில் வெளிநாடுகளில் சிலர் விழிப்பாக இருக்கின்றார்கள். தொடரூந்தில் பிரயாணிக்கும் போதே சேவ் செய்தல் ஸ்நானம் செய்தல் போன்ற கருமங்களை நிறைவேற்றிக்கொள்கின் றார்கள். இன்னும் படிக்கவேண்டிய குறிப்பெடுக்கவேண்டிய நூல்களை வாசிக்க அது பொன்னான நேரம். பெண் கள் கைவேலை செய்யலாம். மாணவர்கள் மனப்பாடம் செய்யலாம். எம்மில் பலர் செய்ய வேண்டிய கருமங்களை ஒத்திப் போட்டுக்கொண்டே இருப்பார்கள். பில் கொடுப்பனவா? அதை உடனே செலுத்த வேண்டும்.

அந்த நேரத்தை பயன்படுத்தி கிரடிற் காட்டுக்கு செலுத்தவேண்டிய பணத் தையும் கட்டிவிடலாம். எமக்கு வரும் கடிதங்களுக்கு உடனேயே பதில் தரலாம். கடித உறை தபால் தலை, பசை என் பன எம்முடன் இருந்தால் சரி. நண்பரை வருத்தம் பார்க்க வேண்டுமா? மதிய உணவு இடைவேளையை பயன்படுத்திக் கொள்ளலாம்.

எமக்கு பல பொறுப்புக்கள் இருக்கும். அவற்றை நிறைவேற்றுவதில் நாம் விரைந்து செயற்பட்டால் காலம் மிச்ச மாகும். அதற்கு வேண்டியது நாம் முடிவெ டுப்பதில் காட்டும் அதீத வேகம் ஆகும். ஒரு விஷயத்தை வைத்து மண்டையை குடைந்துகொண்டிருந்தால். இன்னும் பல பொறுப்புக்கள் வந்து எமது நேரத்தை விழுங்கிவிடும்.

எமது நேரத்தை விரயம் செய்வ தில் அதிக பங்களிப்பு வழங்குபவர்கள் அரட்டை அடிப்பவர்கள் தான். அவர்கள் பற்றி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அவர்கள் கூறுவார்கள் உங்களை விட் டால் இந்த விடயத்தையிட்டு கருத்து கூறுவதற்கு யாருமில்லை! என்று நீங்கள் அதை நம்பிவிட்டால் போதும். உங்கள் நேரத்தை நீங்கள் அறியாமலே வீணடித்து விடுவார்கள்.

அவர்கள் விடயத்தில் முகத்தை முறிக் கலாமா என்றெல்லாம் நீங்கள் தயங்க கூடாது. சிலர் தங்களது கருமங்களுக்கு உதவியாக உங்களை அழைப்பார்கள். அத னால் உங்களுக்கு பயன் ஏதும் இருக்காது. ஆனால் உங்கள் வேலைகள் பல தடைப்படுவதோடு நேர மும் விரயமாகும். அதேபோன்று அநாவசிய தொலைபேசி அழைப் புகளுக்கு நீங்கள் காது கொடுத்தால் அந்நேரத்தில் நீங்கள் நிறைவேற்ற வேண் டிய பல கருமங்கள் தடைப்படும்.

ஒரு நூலின் அட்டைப்படத்தில் மயங்கி அதனை வாசிக்க முடிவெடுத்தீர்களா? முதலில் அறிமுக உரை, நூல் நயவுரை, இரண்டையும் வாசியுங்கள் அந்த நூல் உங் களுக்கு எவ்வளவு பயன்படும் என்பதை தெரிந்து கொண்ட பின்னர் அவசியம் என் றால் வாசிக்கலாம்.

இல்லாவிட்டால் அந்த நூலை வாசிப் பதை தவிர்த்து நேரத்தை மிச்சப்படுத்த முடியும். உங்களுக்கு தொலைக்காட்சி பார்ப்பதில் ஆர்வம் இருக்கலாம். நீங்கள் உற்சாகமாக பெரும் பொறுப்பொன்றை நிறைவேற்றக் கூடிய நிலையில் இருக்கும் போது செட்டியில் உட்கார்ந்து ரீ.வி பார்ப் பது போன்ற முட்டாள்தனம் எதுவும் இல்லை. உடல் தளர்ந்த நிலையில் எத னைச்செய்வதற்கும் இலாயக்கில்லாத நேரத்தில் ரீ.வி பார்க்கலாமல்லவா? சில ரது அடுத்த தவறு சில புரோகிராம் பிடித்து விட்டது என்பதற்காக திரும்ப திரும்ப பார்ப்பது.

வாழ்கையிலும் கூட எம்மில் பலர் ஒரு வேலையை ஒரு தடவையில் செய்து முடிக்க மாட்டார்கள். ஒரு கட்டுரையோ சிறுகதையோ எழுத வேண்டியிருக்கும்.

எழுத தொடங்குவதற்கு முன்னரே அது பற்றி சரியாக சிந்தித்து அது எந்த கோணத் தில் அமைய வேண்டும். எத்தனை சொற் களுக்குள் அடங்க வேண்டும் என்றெல் லாம் தீர்மானித்து விட வேண்டும.


பின்னர் நல்ல கடதாசியில் உறுப் பெழுத்தில் எந்த வெட்டுக் கொத்தும் இல்லாமல் எழுத வேண்டும். வேண்டு மென்றால் நிழற்பட பிரதி எடுக்கலாம். மூலப்பிரதியை தாமதம் இன்றி பிரசுரத் திற்கு அனுப்ப அது வசதியாக இருக்கும். திரும்ப எழுதுவதில் உள்ள நேர விரயம் தவிர்க்கப்படுகிறது. நாம் ஆற்றும் எந்த விடயத்திலும் அவதானமாக இருப் பதன் மூலம் நேர விரயத்தை தடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்.

பலர் விடும் இன்னுமொரு தவறு வாழ்க்கையை நல்ல முறையில திட்டமிடாமை. எவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை நாம் முற்கூட்டியே தீர்மானித்து விட்டிருந்தால் சம்பந்தப்படாத விடயங்களை ஒதுக்கி விடலாம். எமக்கு பல நிறுவனங்களிடம் இருந்தும் அமைப்புக்களிடமிருந்தும் அழைப்புக்கள் வரலாம். அதையெல்லாம் ஏற்க வேண்டிய அவசியம் எமக்கு உண்டா இல்லையா



என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும். மற்றவர்களின் உயர்ச்சிக்காக நமது நேரத்தை விரயம் செய்ய முற்படக் கூடாது.

சரியான திட்டம் எமக்கு இருந்தால் ஒரே நேரத்தில் நிறைவேற்றக் கூடிய கருமங்களை இனங்கண்டு பூர்த்திசெய்து விட வசதியாக இருக்கும்.

குடும்பத்தில் ஒரு அங்கத்தவருக்கு அன்றைய தினம் மெடிக்கல் கிளினிக் ஆக இருக்கும். மற்றொருவருக்கு பெருவிரல் காயம் காரணமாக உபாதை. இரண்டையும் சேர்த்தே செய்துவிடலாம்.

மாதத்திற்கு தேவையான மளிகைச் சாமான்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதால் பணம் சேமிக்கப்படுவதுடன் நேரமும் மிச்சம். குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட தேவைகள் இருக்கும். அவற்றை கேட்டறிந்து லிஸ்டில் சேர்த்துவிட்டால் அவர்களது நேர விரயத்தை தவிர்க்கலாம். ஒரு குடும்ப அங்கத்தவர் ஒரு நாளில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பல இருந்தால் அவற்றை ஒரே தடவையில் காலையிலேயே கூறிவிடவேண்டும். அவர் தனது சொந்த கருமங்கள் மத்தியில் அவற்றை இலகுவாகப் பூர்த்திசெய்ய அது உதவும். அதே நடைமுறையை அலுவலகங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். அலுவலர்கள் தேவையற்ற ரென்ஷனுக்கு உட்படாமல் சுமூகமாக தமது நாளாந்த கடமையை நிறைவேற்ற அது உதவும்.

காலம் எவ்வளவு பெறுமதியானதென்பதை உணர்வதில்தான் எமது வெற்றி தங்கி உள்ளது..


ஒரு எழுத்தாளருக்கு நேரம் மிக முக்கியம். சிறுகதை, கட்டுரை, தொடர் நவீனம், கவிதை என்று எழுதிக்கொண்டே இருக்க வேண்டும். யோசித்துக் கொண்டிருந்தால் நேரம் தான் விரயமாகும். எழுதுவதற்காக அமர்ந்து விட வேண்டும். எழுத்தாளர்களுக்கு பிரபஞ்ச சக்தியுடன் தொடர்பு உண்டு. எழுதத் தொடங்கி விட்டால் புது புது கருத்துகளுக்கு பஞ்சம் இருக்காது. எழுத்து வேகம் அதிகரிப்பதால் நேரமும் மீதியாகும்!

எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல, விஞ்ஞானிகள், சிற்பகலைஞர்கள், ஓவியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் போன்ற பிரிவுகளில் அடங்கும் நம் எல்லோருக்குமே ஒரு உந்து சக்தி உண்டு. நாம் நேர விரயமின்றி முயற்சித்தால் தானாகவே எல்லாமும் கைகூடும்!

★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதை மூலம் ஆங்கிலம் கற்போம்

# THE WISE JUDGE

Two women were brought before King Solomon. Both these women had a quarrel over a single baby. Each women was saying that she was the baby's mother.

One lady said, "oh king! I am the baby' s mother".

The other lady said, " oh king Believe her not. She is not the mother. I am the mother of the child".

King Solomon was confused. After a deep thought he said, "Cut the baby into two and give one part to each mother". One women was silent. The other cried "oh king! Let see have the baby. Let the baby live". The king gave the child to the crying mother.

## TRUTH ALWAYS TRIUMPHS


தமிழில் 69 ஆம் பக்கம் பார்க்க...

---

## இம்மாதம் பிறந்தநாளைக் கொண்டாடும் இந்த மழலைச் செல்வங்களுக்கும் ஒளிஅரசியின் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

| பிள்ளையின் பெயர் | பிறந்த திகதி | முன்பள்ளி |
|---|---|---|
| வி.டுவாரகன் | 03.01.2018 | டேனுஜா முன்பள்ளி |
| ஸ்ரீ.லயன்சிகா | 20.01.2018 | அம்பாள் முன்பள்ளி |
| உ.அனோஜா | 11.01.2018 | வெள்ளம் போக்கட்டி முன்பள்ளி |
| நி.லீதிகா | 10.01.2018 | வெள்ளம் போக்கட்டி முன்பள்ளி |
| ஜி.அபிஷாலினி | 21.01.2018 | சித்திவிநாயகர் முன்பள்ளி |
| அ.தேனுகா | 25.01.2018 | பூவேந்தன் முன்பள்ளி |
| ஜி.பானுஜா | 19.01.2018 | பூவேந்தன் முன்பள்ளி |
| பா.பாலமுருகன் | 11.01.2018 | அன்னைதிரேசா முன்பள்ளி |
| மு.றோஜிதன் | 24.01.2018 | கலைமகள் முன்பள்ளி |
| சி.செல்வரதி | 03.01.2018 | கலைமகள் முன்பள்ளி |
| சு.மதுசனா | 20.01.2018 | மறவன்புலோ மேற்கு முன்பள்ளி |
| ம.அஜேஸ் | 05.01.2018 | பரணி முன்பள்ளி |
| த.ஆரணன் | 25.01.2018 | வினோபா முன்பள்ளி |
| வி.அபிசா | 16.01.2018 | பாரதி முன்பள்ளி |
| எஸ்.சந்துரு | 05.01.2018 | பராசக்தி முன்பள்ளி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்களும் எழுதலாம்

# வெற்றிக்கான பாதைகள் கரடுமுரடானவையே.



கண்ணன் கண்ணராசன் ஜேர்மனி

உன்னைப்பார்த்து நான் சிரிக்கவும் என்னைப்பார்த்து நீ சிரிக்கவும் வாழ்க்கை ஒன்றும் போர்க்களம் இல்லை. உன்னை பார்த்து நான் கற்றுக்கொள்ளவும் என்னைப் பார்த்து நீ கற்றுக்கொள்ளவும் வாழ்க்கை ஒரு விளையாட்டு மைதானம். இங்கே தோற்றவன் கோழையும் அல்ல வென்றவன் வீரனும் அல்ல. சந்தர்ப்பம், சூழ்நிலை கூடவே சதி. மற்றவன் வெற்றியோ தோல்வியோ பாராது, கைதட்டி பாராட்டி மதிக்கத் தெரிந்தவனே உண்மையான வீரன். ஆனால் எதிலும் பங்கு கொள்ளாமல் வெளியே நின்று யார் வெல்வார், யார் தோற்பார் என்று வேடிக்கை பார்த்துவிட்டு தோற்றவனை ஏளனமாகவும் வென்றவனை பெருமையாகவும் பேசி கலைந்து போகும் கூட்டமே மாபெரும் கோழைகள்.

இதை ரசிக்கத் தெரியாதவன் சோர்வடைகின்றான். ருசிக்கத்தெரியாதவன் பாழ்படுகின்றான். இதில் நம்பிக்கை மத்தியஸ்தம் வகிக்கின்றது. அன்பெனும் கூட்டணி வடிவமைக்கின்றது. ஆசைகள் அழைத்துச் செல்கின்றது. தேவைகள் களமிறக்குகின்றது. ஆசைக்கு வெற்றியா, தேவைக்கு வெற்றியா, என்பதே தோல்விக்கான வடிகாலாகவும் அமையலாம். இருப்பினும் யார் ஒருவன் கள்ளாட்டம் ஆடுகிறானோ அவன் வெற்றியை எளிதில் ஈட்டிக்கொள்கின்றான். நேர்வழி செல்பவனோ தோல்வியை தழுவுகிறான். அப்படி தோற்றுப்போனவன் எழுந்து மீண்டும் களத்தில் கால் வைக்கும் போது விழுந்த இடத்தைவிட வீழ்த்தியவனையே நினைவில் நிறுத்தி நிலைகொள்கிறான்.

காரணம் அவன் தன்னை நம்பியதை விட தன்னுடன் விளையாடும் மனிதனை வீரன், நாணயமானவன் என்பதிலும் தான் அவன் ஏமாந்தான் என்று பின் தான் புரிந்து கொள்கின்றான். இங்கே நேர்மைக்கும் இடம் இல்லை, உண்மைக்கும் மதிப்பில்லை. யானைக்கு வேண்டுமானால் அதன் துப்பிக்கை பலமாக இருக்கலாம் ஆனால் மனித வாழ்வில் வெறும் நம்பிக்கையை வந்து நாக்குத்தான் வழிக்கலாம் ஆனால் அன்பால் எதையும் சாதிக்கலாம் அதுவே மூல பொருள் என்று முழுமையாக நம்புபவனுக்கு அரைணாக்கயிறு கூட மிஞ்சுவதில்லை ஏனெனில் எதிர்த்து நிற்பவனுக்கும் நேர்மையில்லை சேர்ந்து வருபவனுக்கும் நாணயம் இல்லை.



உண்மையாக இருப்பவன் ஓரங்கட்டப்படுகிறான். ஒத்து ஊதுபவன் ஓங்கி நிற்கின்றான். இதைப்பார்த்து ஒதுங்கிப் போபவன் ஓலமிடுகின்றான் இதையெல்லாம் ஒற்றை வரியில் சொல்லப் போனால் ஒருத்தன் கூட ஒத்துக் கொள்ள மறுக்கின்றான். காரணம் என்ன கண்டுபிடி, காரியம் சிறக்கும் சொன்னபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சிரஞ்சீவி கச்சாய்**

**என்ன வாழ்க்கை இது, சந்தோசத்தையே காணமுடியல்லயே ஞானி?**

கஷ்டம் என்பது மனைவி மாதிரி, எப்பவும் எங்களோடயே இருக்கும். சந்தோசம் என்பது மைத்துனி மாதிரி, அப்பப்ப வந்திட்டுப்போயிடும். சந்தோசத்தை சந்திக்க உமக்குத்தான்...

**அரவிந்தா கல்முனை**

**வணக்கம் ஞானி அவர்களே! சராசரி மனுசனுக்கும் பெரிய மனுச னுக்கும் பொருள் தரமுடியுமா?**

ஆம், தான் செய்யிற தவறை பெண்டாட்டியிடம் மறைப்பவன் சராசரி மனுசன். தனக்கு பெண்டாட்டி இருக்கிறதையே மறைக்கிறவன் பெரிய மனுசன்.



**பார்கவி தெல்லிப்பழை**

**இன்றைய நவீன உலகில் இன்னமும் ஆணாதிக்கம் இருக்கிறதா ஞானி?**

ஒரு பையன் நாலு பெண்களோட ஆடினா ஓப்பனிங் ஷோங். ஒரு பெண் நாலு பையன்களோட ஆடினா, அயிட்டம் சோங், இதுதான் ஆணாதிக்க சமூகம்.

**சுரேந்தர் மட்டக்குளி**

**ஒரு பொண்ணோட வாழ்க்கை பந்து (ball) போன்றது என்கிறார்கள். ஏன் தெரியுமா ஞானி?**

- 16 18 வயசு rugger ball மாதிரி 30 பேர் துரத்துவாங்க.
- 18 22 வயசு foot ball மாதிரி 22 பேர் பின்னாலேயே போவாங்க.
- 22 25 வயசு basket ball மாதிரி 10 பேர் பின்னாலேயே போவாங்க.
- 25 28 வயசு snow ball மாதிரி 5 பேர் பின்னாலேயே போவாங்க.
- 28 31 வயசு golf ball மாதிரி ஒருத்தன் பின்னாலேயே போவான்.
- 31 வயசுக்கு மேல் volley ball மாதிரி ஒருத்தன் இன்னொருத்தனிடம் தள்ளிவிடப் பார்ப்பான்.

# வாசம் வீச மறந்த வாழ்வியல் பூக்கள்

போரும் இங்கு ஓய்ந்தாச்சு
போன்களில் வாழ்வு தோய்ஞ்சாச்சு
ஊர்கள் எல்லாம் மாறியாச்சு
ஒற்றுமை இப்போ குறைந்தாச்சு

கூட்டுக் குடும்பம் கலைந்தாச்சு
கோடி சுகங்கள் குலைந்தாச்சு
மாட்டு வண்டி மறைந்தாச்சு
மண்சட்டி பானை போயாச்சு
உலக்கை பிடிப்பது கழிஞ்சாச்சு
ஓலை பின்னுவது ஒழிந்தாச்சு
கொத்து விறகு புகை குறைந்தாச்சு
பத்தவைக்கும் அடுப்பே நிறைஞ்சாச்சு

ஓலைப்பாய் எறிந்தாச்சு
ஒடியல் பிட்டு மறந்தாச்சு
வாலையிலை பந்தி வலுவிழந்தாச்சு
வரிசையில் தட்டு ஏந்துவதே மலிவாச்சு


கையெழுத்து கைவிட்டாச்சு
கணனியுகமே முடிவாச்சு
கஞ்சாவும் விளைஞ்சாச்சு
கட்டமைப்பும் விலகியாச்சு
ஆட்டுகல்லு அகன்றாச்சு
அம்மி குழவி குறைஞ்சாச்சு
அரிக்கன் சிமிலி மறைஞ்சாச்சு
அடிக்கடி பத்தும் குமிழ்கள் வந்தாச்சு

ஏர் தூக்குவது விட்டாச்சு
ஏறியிருந்து உழும் கருவி தொட்டாச்சு
உடல்கள் ஓய்வு எடுத்தாச்சு
உள்ள நோய்கள் பெருகியாச்சு
இயந்திரம் எல்லாம் வளர்ந்தாச்சு
இயல்பு வாழ்க்கை இழந்தாச்சு
விரும்பியதெல்லாம் அருகில் வந்தாச்சு
விடுதலைதான் எம்மை விட்டுத் தொலைவாச்சு.

பிரேமா (எழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரோசி கஜன்

# மெல்லிசையாய்... என்வசமானாய்!

இதென்னபிள்ள? வந்த சனம் இருக்க இடமில்லாமல் நிக்கிறார்கள் போல! என்ற, பர்வதத்தின் பார்வை மண்டபத்தைச் சுற்றிவந்தது.

ஹையோ! மெல்லக்கதையுங்கோ அம்மம்மா! பெரியவரின் கரத்தில்சிறு அழுத்தத்தோடுபடிந்தது, அருகில்வந்த பேத்தி துர்காவின்கரம். சற்றே முன்னால் சென்றிருந்த துர்காவின் அன்னை இவர்களிற்காகத் தயங்கி நின்றவர், அங்க...அந்தக்கடைசிமேசையில் இரண்டு கதிரைகள் கிடக்குப்பாரம்மா. அம்மம்மாவோடுபோயிரு! நான், சுஜிவரச் சொல்லுறாள் அவளோடு இருக்கிறேன். என்றுவிட்டு, இளையமகளிருந்த இடம் நோக்கி நகர்ந்தார்.

ம்ம்...வா! பேத்தியின் கரத்தைப்பிடித்தபடி நகர்ந்த பர்வதத்தின் முணுமுணுப்பு மட்டும்அடங்கவில்லை. இப்ப ஏன்பயப்படுறாய்? இல்லாததையா சொல்லுறன்? இடத்துக்கு அளவாசனத்தக் கூப்பிட வேணும். இல்லையோ, சனத்துக்கு அளவா பெரிய ஹோலா எடுக்கவேணும். அதைவிட்டுட்டு...

அதெல்லாம் அவையளிண்ட வசதி வாய்ப்பைப் பொறுத்தது அம்மம்மா. நீங்க சத்தம் போடாமல் இருங்கோ! இருக்கையை இழுத்து ஒருமாதிரி அமர்ந்து கொண்டவர்கள், யாரென்றே தெரியாவிட்டாலும் அருகிலிருந்தவர்களோடு முறுவலித்துக்கொண்டனர்.

நம்நாடு, ஊர் என்ற அடையாளம் போதாதா என்ன?

பர்வதத்தின் பார்வை, மீண்டுமொரு முறை அத் திருமண வரவேற்பு நடைபெறும் மண்டபத்தைச் சுற்றி வந்தது. அதுசரி, ஒரு கல்யாணம் காட்சி என்று வைத்தால், வாறமனிசரை சந்தோசமாக உபசரித்து அனுப்ப வேணும் என்ற எண்ணமெல்லாம் போய் எவ்வளவோ காலமாச்சே! அலுப்போடு ஆரம்பித்தார்.

அடுத்தவன் செய்யிறதைவிட ஒரு படிமேலாகச்செய்யவேணும் என்று நினைக்கிறவை, நகைநட்டு, அலங்காரம், போட்டோ, வீடியோவில்காட்டுற அக்கறையில் கொஞ்சத்தைச்சரிவாறசனங்களை உபசரிக்கிறதில காட்டுறதில்லை. ஹ்ம்ம்! நம்ம ஊரில் என்றால். படபடவென்று தொடர்ந்தார் பர்வதம். அவர்மனதிலோ, பலவருடங்களுக்கு முன், முற்றத்தைமறைத்து பெரியபந்தல் போட்டு, தடல்புடலாக நடந்தேறிய தன் மகள்களின் திருமணங்கள், பசுமையாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கதை



அம்மம்மாவை இதற்கு மேலும்விட்டால் ஊர் நினைவில் கதைத்துக்கொண்டேயிருப்பார். மனதில் எச்சரிக்கை மணியடிக்க, அவசரமாக இடையிட்ட துர்கா, ஊரிலும் இப்ப எப்படியோ!? நாமவந்தே ஏழெட்டு வருடங்களாகுதே! கிட்டடியில போய்ப் பார்த்தீங்களா என்ன? பேசாமல் இருங்கோ! தாழ்ந்த குரலில் கடிந்து கொண்டாள்.

நீ என்னதான் சொல்லு, நம்ம ஊர்போல வராது ஆச்சி. உங்களுக்கு வேணுமென்றால் இங்க எல்லாம் கரக்டா இருக்கலாம். ஊர் நினைவில் தழுதழுத்தார் பெரியவர்.

அப்போ பொறுங்கோ! உங்களை ஊருக்கு அனுப்பிவைக்கிறோம். தனியாக அங்க போயிருங்க!

ஹ்ம்ம்... இதுதான் சாட்டென்று என்னைப் பார்ஸல் பண்ணப்பார்க்கிறாய்பிள்ள!? என்றபடி, பேத்தியைச் சீண்டலாகப் பார்த்தார் பெரியவர்.

நீங்களும் அப்படியேபோய்ட்டாலும் பிறகு, அங்க உங்க தொணதொணப்பை யார் கேட்பார்களாம்? வேலிக்கதியாலுக்குத்தான் சொல்லவேணும் என்றுவிட்டு, இப்படி ஏதாவது விஷேசம் வந்தால் தானே நம்ம சனங்களைக் காணமுடியுமென்று வெளிக்கிட்டு வந்த நீங்க, அதை விட்டுட்டு நொட்டை சொல்லிக் கொண்டிராதீங்க! அதட்டியவளின் அழகிய நயனங்களிலும் சீண்டலின் தழுவல்.

பேத்தியை நன்றாகவே முறைத்தார் பர்வதம். அதற்கு அவளும் திருப்பி முறைக்க, மறுகணம், பெரியவர் முகம்மலர்ந்து போயிற்று! அவரின் செல்லப்பேத்தி, சிறுவயதிலிருந்தே குறும்புகளின் உற்ற சிநேகிதியாயிற்றே! அப்படியிருக்கையில், கடந்தசில வருடங்களாக அவளுள் ஒருவகை அமைதி! மற்றவர்கள் அனுமானிக்கும் வகையில் ஏதோ ஒருவகை இறுக்கம்! அதைப்பற்றிஏதாவதுகேட்டுவிட்டால்மாத்திரம்வெகு இலாவகமாகப் பேச்சை மாற்றிவிடுவாள். அப்படியிருப்பவளை, இப்படி மலர்ந்த முகமும் சீண்டலில்சுருங்கும் நயனங்களுமாகக்காண்பது என்பது வெகு அரிதாயிற்றே!

பர்வதமோ, பேத்தியின் துறுதுறுப்பையும் துடுக்குத்தனத்தையும் குறும்புப்பேச்சையும் வெகுவாகவே ரசிப்பவர். அதில்லையென்றானதும், இவளுக்கு என்னாச்சு? என்று கவலையும் கொண்டார்.

மாறாக, துர்காவின் அன்னை தேவகியோ மகிழ்ந்துபோனார். ஹப்பாடா! இப்போதான் மனதுக்கு நிம்மதியாயிருக்கும்மா! இல்லையோ, வார்த்தைக்கு வார்த்தைகதைப்பது, பகிடிசேட்டைகள் என்றுவம்பு செய்வது, இப்படி, எந்நேரம் என்னென்ன ஊர்வம்புகளை விலைக்கு வாங்கீட்டு வருவாளென்று பயந்துகொண்டல்லவா இருக்கவேணும்? இங்கதான் நம்ம இடம் என்று வைத்துக்கொண்டாலும், இனி, இலண்டன் போனபிறகும் இவள் இப்படியே இருந்தால், அந்த அறியாத ஊரில் எவ்வளவு பயப்படவேணும் சொல்லுங்கோ பார்ப்போம்? என்றவர், மகள்வெளிநாடு செல்ல முன்னரே அமைதியாகிவிட்டதில் நிம்மதியாய் உணர்ந்தார்.

பிள்ளை என்ன சின்னவளா? ஏ.எல்க்கு வந்திட்டாள். வீட்டுக்கு மூத்தமகளாக பொறுப்பாக மாறீட்டாள்! பெருமையாகச் சொன்னார், வெளிநாட்டிலிருந்த இவள் தந்தை சண்முகம். அப்படித்தானோ என்றவகையில், துர்காவும்நிறையவே மாறித்தான்போனாள். இப்படியிருக்கையில், யாழ்ப்பாணத்தில் பிரபல பெண்கள் பாடசாலையொன்றில் படித்துக்கொண்டிருந்த மகள்களையும் தாயையும் ஒருவழியாக இலண்டன் அழைத்துக்கொண்டார், இவள்தந்தை.

ஊரில் தனித்திருந்தபர்வதத்தை, ஏற்கனவே குடும்பத்தோடு இலண்டனில் வசித்த இவளின் சித்தி வரவழைத்திருந்தார். என்னதான் பர்வத்தினுள் ஊறிப்போன சொந்த ஊர்ப்பாசம் அகலேன் என்றாலும், ஊரில் தனியாக இருந்து என்னதான் செய்வது? விரும்பியோ விரும்பாமலோ மகள்களின் அருகில் இருந்து விடுவதே சரியென்றுமுடிவெடுத்தவர், ஒருமாதிரி, இலண்டன் வாழ்வுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டார். வருடத்தில் ஆறுமாதங்கள் சின்னமகள் வீடு என்றால், மீதி ஆறுமாதங்கள் பெரிய மகளோடு தங்கிக்கொண்டார்.

சின்னமகளுக்கோ இரண்டு மகன்கள். பெரியவளுக்குத்தான் கண்ணுக்கு நிறைவாக இருபெண்பிள்ளைகள். அதிலும், மூத்த பேத்தி துர்காவில் இவருக்குக் கொள்ளைப் பிரியம்.

இதென்ன பாட்டி என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறீங்க? அங்க மாப்பிள்ளை பெண்ணைப் பாருங்க! தன்னில் நிலைத்திருந்த அவரின் முகத்தைப் பக்கவாட்டில் திருப்பிவிட்டாள் துர்க்கா.

கண் கொட்டாது மணமக்களையே பார்த்துக் கொண்டிருக்கத்தான் எனக்கும் ஆசை! நீதான்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆயிரம் நொட்டைகள் சொல்லி கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறாய் இல்லையே! பேத்தியின் கல்யாணத்தைக்காண வேண்டும் என்கின்ற ஆவல் மின்ன தொடங்கியவர், அவள் முகம் சுருங்குவதைப் பொருட்படுத்தாது, உன்தங்கச்சியைப்பார். விரும்பிக் கேட்டுவந்த மாப்பிள்ளைக்குத் தலையாட்டி, புருஷன், வேலை, வீடு என்று சந்தோசமாக இருக்கிறாள். அது அது நடக்க வேண்டிய நேரத்தில் நடந்தால்தான் அழகும்மா! கிடைத்த சந்தர்ப்பத்தைக்கப்பென்று கைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனார்.

அடுத்தநொடி, துர்காவின் முகத்தில் படர்ந்திருந்த குறுநகை மறைந்தே போயிற்று! ப்ளீஸ் அம்மம்மா! தேவையில்லாத அலட்டல் கதைகள் தொடங்கினா நான் எழும்பிப்போயிருவன்! முதல், இது ஒண்ணும் நம்ம வீடில்லை! அடிக்குரலில் குசுகுசுத்தபடி, இந்த அம்மா எங்க இருக்கிறா? விழிகளைச் சுழற்றியவள் பார்வையில், தாய்க்குப் பதிலாகப்பட்டான் அவன்.

சயந்தன்! மறுகணம், சுற்றம் இயங்க மறுக்க, உறைந்து போயின, இவள் நயனங்கள்! அவற்றோடு, அவசரம் அவசரமாகக் கை கோர்த்தன, அவளுணர்வுகள்! ஏற்கனவே, அவனும் இவளைத்தான் பார்த்திருந்தான் போலும்! இவள் பார்வைபட்டதும் அவன் விழிகளில் பளிச்சிடல்! அப்போதும் அவனால் நம்ப முடியவில்லை போலும்! அளவில்லா வியப்பும் எதிர்பாராதுசந்தித்த மகிழ்வுமாக விரிந்த விழிகளின் ஓரத்தில், மறைக்க முடியாத வகையில் சந்தேகமும் ஒட்டியிருந்ததுதான்.

இவள்... இவள்... அவள்தானே? துர்கா! பார்வையாலே அவளிடம் தான் கேட்டான் போலும்! ஆனால், இவளோ, கண்டபடி தடதடத்த நெஞ்சத்தால் உறைந்துநின்ற உணர்வுகள் உயிர்ப்படைய, மெல்லஅசைந்தவள், அப்படியே, கதிரையின் பின்புறமாகத் தொய்ந்து சாய்ந்துகொண்டாள். அதோடு, தானிருப்பது மக்கள் நிறைந்த ஒரு திருமண வரவேற்பில் என்பதைவெகு பிரயாசைப் பட்டு நினைவு படுத்தவும் முயன்றாள்.

துர்கா! கண்டிப்போடு தன்னைத்தானே விளித்துக்கொண்டவள், நீ உணர்வுகளின் ஆளுகைக்கு ஆடுபவள் இல்லை. உன் ஆளுகைக்குட்பட்டது உன் உணர்வுகள். உன்னைக்கட்டுப்படுத்திக்கொள்! மனதுள் கட்டளையிட்டாலும், அவர்... அவரேதானா? சய...ந்தன்! அவர்...எங்க இங்க? கையில் குழந்தையும் இருக்கே,அவர்குழந்தையோ! முணுமுணுத்தபடி, அவனைவிட்டு விலகி வந்த பார்வையை மீண்டும் செலுத்தமுயன்ற மனதை, வலுக்கட்டாயமாக இழுத்துப் பிடித்தவளின் தொண்டையில், ஏமாற்றமும் கசப்புமாக உணர்வுகளின் பிராண்டல்!

**(தொடரும்)**

## 63 ஆம் பக்க விடைகள்

**பழமொழி**

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

The face is the index of the mind

**வித்தியாசங்கள்**

பாம்பின் நாக்கு, வீட்டின் புகைக்கூடு, வாத்தின் இறக்கை

பலூன்களின் எண்ணிக்கை, வேலி, கால் மேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுதைக்குத்தெரியுமா கற்பூர வாசனை



கழு என்ற கோரைப் புல் கொண்டு பாய் பின்னுவது உண்டு. இந்த வகை புல்லில் பாய் பின்னும் போது அதில் கற்பூர வாசனையை உணர முடியும்.

அதோடு இந்த வகை புல்லில் பாய் தைத்தால் தேள், பூரான் போன்ற விஷப் பூச்சிகளும் நெருங்காது.

கழு கோரைப்புல்லில் செய்த பாயில் உறங்கினால் இயற்கையா கவே கற்பூர வாசத்தை நாசிகள் உணரும் என்பதால்


''கழு தைக்க
தெரியுமாம் கற்பூர வாசனை''

என்ற பழமொழி மருவி ''கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை'' என்று மாறி விட்டது.





# பேசும் படம்



இந்தப் படத்தினைப் பார்க்கும் போது உங்கள் எண்ணத்தில் தோன்றும் கற்பனையை வாக்கியங்களாக்கி எட்டு வரிகள் கொண்ட கவிதையாக மிகச்சிறந்த தலைப்புடன் ஒளி அரசியின் தபால் முகவரிக்கோ அல்லது ஒளிஅரசி என்ற முகநூலின் உள்பெட்டிக்கோ அனுப்பிவையுங்கள்.


சிறந்த கவிதைகளாக தெரிவுசெய்யப்படும் ஐந்து கவிதைகள்
மாதாந்தம் ஒளிஅரசியில் பிரசுரமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் தரும் விளையாட்டு

தமிழ்ச்செல்வி



சில ஆண்டுகளுக்கு முன்னர் குழந்தைகளின் தினசரி விளையாட்டு நேரம் அதிகமாக இருந்தது. கிட்டிப்புள், கிளித்தட்டு, கெந்திக்கோடு, நாயும் இறைச்சியும், கிரிக்கெட், புட்போல், வொலிபோல் என இணைந்து விளையாடுவதும் அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது வீடியோ கேம், கொம்பியூட்டர், மொபைல் என அதிகரித்துவிட்டதால் வெளியே சென்று விளையாடும் நேரம் மிகமிக குறைந்து விட்டது.

**உடல் வளர்ச்சி**

உடல் உழைப்பு இன்மை, தற்போதைய உடனடி உணவுப்பாவனை, என்பன காரணமாக நகர்ப்புற குழந்தைகள் அதிகளவு உடல் பருமனை உடையவர்களாக காணப்படுகின்றனர். குழந்தைகள் சரியான உடல் எடையுடன் இருக்க விளையாட்டு உதவுகின்றது.

**சமூக உறவிற்கு முக்கியத்துவம்**

விளையாட்டானது கூட்டுறவு மற்றும் சமூகத்துடன் இணைந்து செயற்படும் திறனை வளர்க்க உதவுகின்றது. இது குழந்தைகளின் படைப்பாற்றலை அதிகரிக்கவும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறனை, முடிவெடுக்கும் திறனை வளர்க்கவும் உதவுகின்றது. மற்றவர்களுடன் சுமுகமாகப் பேசி இணக்கப்பாடான நிலையினை உருவாக்கும் திறனை வளர்க்கவும் உதவுகின்றது.

**மூளை வளர்ச்சிக்கு உதவுகின்றது**

குழந்தைகள் விளையாடும் போது தான், அவர்களின் மூளை வளர்ச்சி நன்றாக இருக்கின்றது என்கிறது அமெரிக்க ஆய்வு மையம் ஒன்று. விளையாட்டு குழந்தைகளின் கவனிக்கும் திறனை அதிகரித்து குறிப்பிட்ட விடயத்தின் மீது கவனத்தை செலுத்த வைக்கின்றது. பார்க்கும் திறனை அதிகரித்து கண்,கை மற்றும் கால்களின் இயக்கத்திறனை மேம்படுத்தவும் உதவுகின்றது. குழந்தைகளின் மூளைத்திறனை உயர்த்தி சிறப்பான எதிர்காலத்தை வழங்குகின்றது.

**பள்ளியில் விளையாட்டு**

பாடசாலைகளில் விளையாட்டு நேரம் என்பது குறைவாகவே உள்ளது. குழந்தைகளை விளையாட அனுமதிக்கும் போது தான் அவர்களின் கற்கும் திறன் அதிகரிக்கின்றது என்கின்றனர் குழந்தைகள் நலமருத்துவர்கள்.


நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுக்கெழுத்துப் போட்டி



**இடமிருந்து வலம்:**

1. எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் தெரிவது தெனாலிராமன் தான்!
3. செலவெல்லாம் போக எஞ்சியது இது தான்.
6. இலங்கையின் பிரபல நகரம் ஒன்று. இப்பெயரில் இசைக்கருவியும் உண்டு.
9. வில்லின் துணை
10. தொல்காப்பியரால் எழுதப்பட்டது.
11. காலின்றி நடப்பவை.
12. தமிழ்நாட்டின் தலைநகர்
15. ஏழாம் அறிவை எழுப்ப முயல்பவன். (ரஜனி நடித்த திரைப்படம்)
16 .தலையின் வழுவழுப்பு
17. திருக்குறளின் உயிர்ப்பு

**மேலிருந்து கீழ்:**

1. இவரும் ஓட்டுனர் தான்!
2. காதலித்தால் இது வரும் என்கிறார்கள்.
4. இது எங்கள் உயிருக்கு நேர்.
5. மதுரை எரிய காரணமான ஆபரணம்
6. கணியன் பூங்குன்றனார் சொன்ன சொல்
7. இவர்களின் காலத்திலேயே சிற்பக்கலையில் திருப்புமுனை ஏற்பட்டது.
8. அபிராமிப்பட்டர் எழுதியது.
9. பாவகை - ஔவை விநாயகருக்குப் பாடியது
12. பழந்தமிழின் புதிய பெயர்!
13. உறவு என்பதன் மறுசொல்
14. இதை மீறுவது ஆபத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அந்த ஆசிரியரை எல்லா மாணவர்களும் நேசித்தார்கள். காரணம் கஷ்டமான பாடத்தையும் எளிமையான உதாரணங்களைக் கொண்டு புரிய வைப்பதில் அவர் வல்லவராக இருந்தார். அவரிடம் படித்த மாணவர்கள் பெரிய பெரிய பதவிகளை வகித்தார்கள்.

பதவி, பணம், கௌரவம் ஆகியவற்றில் உயர்ந்து விளங்கிய அவருடைய மாணவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை.

அவர்கள் அனுப்பிய கடிதங்களும், ஈ மெயில்களும் அதைக் கோடிட்டுக் காண்பித்தன.

மன உளைச்சல்கள், பிரச்சினைகள் நிறைந்த



# வாழ்க்கைப் பாடம்

பலரும் பல நாடுகளுக்குச் சென்று பிரகாசித்தார்கள். பெரிய தொழிலதிபர்களாகத் திகழ்ந்தார்கள்.

எத்தனையோ ஆசிரியர்கள் இருந்த போதிலும் அவர் மேல் காட்டிய அன்பையும் மரியாதையையும் அவர்கள் மற்றவர்களிடம் காட்டவில்லை.

அந்த ஆசிரியரிடம் மட்டும் பெரும்பாலான மாணவர்கள் இன்னும் கடிதம் மூலமும், ஈ மெயில் மூலமும் தொடர்பு வைத்திருந்தார்கள். அவரும் தன் மாணவர்களை மிகவும் நேசித்தார்.

அவர்களுடைய வெற்றியை தன் சொந்தப் பிள்ளைகளின் வெற்றியென அவர் மகிழ்ந்தார்.

ஆனால் ஒரே ஒரு உண்மை மட்டும் அவர் மனதில் நெருடலாக இருந்தது.

வாழ்க்கை முறையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதாக எண்ணினார். பெரிய பெரிய சாதனைகள் புரிய ஓடிக் கொண்டிருந்த ஓட்டத்தில் மகிழ்ச்சியை அவருடைய மாணவர்கள் தொலைத்திருந்தார்கள்.

அவருடைய மாணவர்கள் எல்லோரும் அவருடைய எழுபதாவது பிறந்த நாளுக்கு ஒன்று சேர்ந்து அவரைக் கௌரவிக்க முடிவு செய்தார்கள்.

அவருக்கு அது போன்ற பிறந்த நாள் விழாக்களில் பெரிய ஈடுபாடு இல்லை என்றாலும் அவர்கள் அன்பை மறுக்க முடியாததால் அதற்குச் சம்மதித்தார்.

பெரியதொரு அரங்கத்தில் அவர்கள் அவருடைய பிறந்த நாளன்று ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அவர் அதற்கு முந்திய நாள் தன் வீட்டில் தேனீர் அருந்த அவர்கள் அனைவரையும் வரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொன்னார். உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பல மாணவர்கள் அவருடைய பிறந்த நாளுக்கு முந்தைய நாளே அவர் வீட்டில் கூடினார்கள்.

அவரைக் கண்டதில் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவரும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று உரையாடினார்.

பின் தன் சமையலறைக்குச் சென்ற பெரிய பாத்திரம் ஒன்றில் தயாரித்து வைத்திருந்த சூடான தேனீரைக் கொண்டு வந்தார். மேசை மீது வைத்திருந்த வித விதமான தம்ளர்களைக் காண்பித்து அவர்களை ஊற்றிக்குடிக்கச் சொன்னார்.

மிக அழகான வேலைப்பாடுடைய பீங்கான் தம்ளர்கள், வெள்ளி தம்ளர்கள், சாதாரண தோற்றமுள்ள எவர்சில்வர் தம்ளர்கள் அழகில்லாத அலுமினியத் தம்ளர்கள், ப்ளாஸ்டிக் தம்ளர்கள் என்று பல வகைப்பட்ட தம்ளர்கள் மேசை மீது இருந்தன.

விலையுயர்ந்த தம்ளரிலிருந்து மிக மலிவான தம்ளர் வரை இருந்ததைக் கவனித்த மாணவர்கள் இயல்பாகவே விலையுயர்ந்த, அழகான தம்ளர்களையே தேர்ந்தெடுத்துக் கொள்வதில் முண்டியடித்துக் கொண்டு போனார்கள்.

தேனீரை ஊற்றிக் குடித்த அவர்கள் தேனீரின் சுவை பற்றி ஆசிரியரிடம் புகழ்ந்தார்கள்.

அந்த ஆசிரியர் ஒரு தேயிலைத் தோட்டத்தில் பிரத்தியேகமாகச் சொல்லித் தருவித்த உயர்தரத் தேயிலை உபயோகித்து அந்தத் தேனீரைத் தயாரித்ததை அவர்களிடம் தெரிவித்தார்.

பின் கேட்டார். எத்தனையோ பாடங்கள் உங்களுக்கு சொல்லித் தந்திருக்கிறேன். இப்போது ஒரு வாழ்க்கைப் பாடத்தையும் உங்களுக்கு சொல்லட்டுமா?

அவர்கள் ஏகோபித்த குரலில் உற்சாகமாகச் சொன்னார்கள். தயவு செய்து சொல்லுங்கள்.

எத்தனையோ தம்ளர்கள் இருந்த போதிலும் நீங்கள் அழகான விலையுயர்ந்த தம்ளர்களை எடுக்கப் போட்டி போட்டுக் கொண்டு போனீர்கள். அது இயற்கை தான்.

ஆனால் எடுத்தது எந்த தம்ளராக இருந்தாலும் உண்மையில் உங்களுக்கு முக்கியமானது நீங்கள் குடித்த தேனீர் தான். அதன் சுவையும் தரமும் மட்டுமே நீங்கள் ருசிக்கப் பயன்படுகிறது.

உங்கள் வேலை, பணம், பதவி, அந்தஸ்து எல்லாம் அந்தத் தம்ளர்களைப் போல, வாழ்க்கை தேநீர் போல. தம்ளர்களின் தரம் தேநீரின் தரத்தை எப்படித் தீர்மானிப்பதில்லையோ அது போல உங்கள் வேலை, பணம், பதவி, அந்தஸ்து ஆகியவை உங்கள் வாழ்க்கையின் தரத்தைத் தீர்மானிப்பதில்லை.

அதை மறந்து இப்போது அழகான விலையுயர்ந்த தம்ளர்களை எடுக்கப் போட்டி போட்டதைப் போல வாழ்க்கையிலும் மிக உயர்ந்த வேலை, மிக அதிகமான பணம், மிக உயர்ந்த பதவி, பலர் மெச்சும் அந்தஸ்து ஆகியவற்றைப் பெற போட்டி போட்டுக் கொண்டு வாழ்வதால் தான் நீங்கள் மன உளைச்சலாலும், பிரச்சினைகளாலும் அவதிப்படுகின்றீர்கள்.

வாழ்க்கை என்ற தேநீரின் தரத்தை இந்தத் தம்ளர்கள் தீர்மானிக்கிறது என்று தப்பர்த்தம் செய்து கொள்வதாலேயே போட்டி, பொறாமை, அவசரம், பேராசை என்ற வலைகளில் சிக்கிக் கொள்கிறீர்கள்.

**தோற்றங்களில் கவனம் செலுத்தும் போது உண்மையான வாழ்க்கையை நாம் கோட்டை விட்டு விடுகிறோம். வாழ்க்கையை இனிமையை ருசிக்கத் தவறி விடுகிறோம்.**

எத்தனை தான் பெற்றாலும் உள் மனம் அந்த உண்மையை உணர்ந்திருப்பதால் அது என்றும் அதிருப்தியாகவே இருக்கிறது. அவர் சொல்லி முடித்த போது அந்த மாணவர்களிடையே பேரமைதி நிலவியது. சிலர் பிரமித்துப் போய் அவரைப் பார்த்தார்கள்.

சிலர் கண்களில் நீர் தேங்கி நின்றது.

இருட்டில் இருந்ததால் தெரியாமல் போன பலதையும் வெளிச்சம் வந்தவுடன் தெளிவாகப் பார்க்க முடிந்தது போல அனைவரும் உணர்ந்தார்கள்.

இத்தனை நாட்கள் அவர் சொல்லித் தந்த பாடங்களை விட இப்போது சொல்லித் தந்த வாழ்க்கைப் பாடத்தை இவ்வளவு எளிமையாக மனதில் பதியும் படி வேறு யாரும் சொல்லித் தர முடியாது என்று நினைத்த அவர்கள் மனதில் அவர் இமயமாக உயர்ந்து போனார்.

ஒருவன் கண்ணீருடன் கை தட்ட ஆரம்பிக்க அவர் வீடு அடுத்த நிமிடத்தில் கை தட்டல்களால் அதிர்ந்தது.


மீசாலையூர் சக்தி.
(சாவகச்சேரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவோம் ஆயிரம்

# எங்கே மகிழ்ச்சி?



உலகமே வியந்து , பொறாமைப்பட்ட, உச்சமான நிலையைத் தொட்ட ஆப்பிள் நிறுவனத்தின் அதிபர் ஸ்டீவ் ஜாப்ஸ் உடல்நலம் குன்றி 56 வயதில் உலகை பிரிவதற்கு முன்பாக சொன்ன செய்தி!

''வர்த்தக உலகில் வெற்றியின் உச்சம் தொட்டேன். மற்றவர் பார்வையில் என் வாழ்க்கை வெற்றிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. நோயுற்று படுக்கையில் இருக்கும் இப்போது என் முழு வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கிறேன். பெற்ற புகழும், செல்வமும் அதனால் அடைந்த பெருமையும் இப்போது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.

உங்கள் காரை ஓட்ட யாரையாவது நியமிக்கலாம். உங்களுக்காக சம்பாதிக்க எத்தனை பேரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். ஆனால் உங்கள் நோயையும் அதனால் சந்திக்கும் வலிகளையும் ஏற்றுக் கொள்ள யாரையும் நியமிக்க முடியாது.

எந்தப் பொருள் தொலைந்தாலும் மீண்டும் தேடிவிட முடியும். ஆனால் வாழ்க்கை தொலைந்துவிட்டால், திரும்ப கிடைக்கவே கிடைக்காது. வாழ்க்கை எனும் நாடக மேடையில் இப்போது நீங்கள் எந்தக் காட்சியில் நடித்துக்கொண்டிருந்தாலும் நாடகம் முழுமையாக முடியும் என்று சொல்ல முடியாது. நடுவிலேயே எப்போது வேண்டுமானாலும் திரை விழலாம்.

நாம் பக்குவமடையும்போதுதான் சில விஷயங்கள் புரியும். 300 ரூபா கடிகாரமும் 3000 ரூபா கடிகாரமும் ஒரே நேரம்தான் காட்டும். செலவழிக்க வாய்ப்பு இல்லாதபோது உங்கள் மணிபர்சில் ரூ. 100 இருந்தாலும் ஒன்றுதான். ஒரு கோடி இருந்தாலும் ஒன்றுதான். நீங்கள் தனிமையான பிறகு 300 சதுர அடி வீட்டில் வசிப்பதும் 30,000 சதுர அடி பங்களாவில் வசிப்பதும் ஒன்றுதான்.

ஆகவே..உங்களைச் சுற்றிலும் இருக்கும் அனைவரிடமும் அன்புடன் பேசிப் பழகுங்கள். அதுதான் உண்மையான மகிழ்ச்சி!

நன்றி இணையம்

**''வர்த்தக உலகில் வெற்றியின் உச்சம் தொட்டேன். மற்றவர் பார்வையில் என் வாழ்க்கை வெற்றிக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது. நோயுற்று படுக்கையில் இருக்கும் இப்போது என் முழு வாழ்க்கையையும் நினைத்துப் பார்க்கிறேன். பெற்ற புகழும், செல்வமும் அதனால் அடைந்த பெருமையும் இப்போது எனக்கு அர்த்தமற்றதாகத் தோன்றுகிறது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நிரந்தரப்பயணம்..!

**மதங்களின் சம்பிரதாயங்கள் மதத்திற்கு மதம் வேறுபட்டவை. அவை அனைவரும் அறிந்துகொள்ளுதல் சிறப்பானது எனும் எண்ணத்தில் இம்மாதம் இஸ்லாம் மதம் சார்ந்த தகவல்களைத் தருகின்றாள் ஒளிஅரசி.**

விசுவாசிகளே..! நீங்கள் பயந்து,
கொள்ளுங்கள்.நாளை மறுமைக்காக,
நாம் எதனை முன்கூட்டியே செய்து,
வைத்துள்ளோம் என்பதைப்பார்த்துக்,
கொள்ளட்டும்.
மண்ணறை,,அதுமறுமை வாழ்விற்கான,
பயணத்தின் முதற்கட்டமாகும்.இறை,
மறுப்பாளர்களுக்கும்,நயவஞ்சகர்களுக்,
கும்,அதுஒருபெரிய நெருப்புக்குழி,
யாகவும்,இறைவிசுவாசிகளுக்கு,பூஞ்,
சோலையாகவும் இருக்கும்.குறித்த,
சில பாவங்களுக்காக கப்ரில் வேதனை,
செய்யப்படும்.என்ற விடயம் ஹதீது,
களில் கூறப்பட்டுள்ளது.
அவற்றில் சில பின்வருமாறு....
சிறுநீர்கழித்தபின்னர் முறையாக சுத்தம்,
செய்யாமல் இருத்தல்,கோள் சொல்லல்,
யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பொருளில்,
மோசடி செய்தல்,பொய்பேசுதல்,தொழா,
மல் தூங்குதல்,அல்குர்ஆன் விடயத்தில்,
பராமுகமாக நடத்தல்,விபச்சாரம் செய்தல்,
ஓரினச்சேர்க்கை,வட்டி,கடனைத்திருப்பிச்,
செலுத்தாமல் இருத்தல்,இன்னும் பல...
பின்வரும் விடயங்கள் கபுறின் வேதனையை,
விட்டும் ஒருவனைப்பாதுகாக்கும்...
தூய எண்ணத்துடன் அல்லாஹ்விற்கு என்றே,
செய்யப்பட்ட நல்லமல்,கபுறின் வேதனையை,
விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடல்,
சூரத்துல் முல்கை,,ஒவ்வொரு இரவிலும்,
ஓதி வருதல் இன்னும்பல....
அதனது வேதனையை விட்டும் பின்வருவோர்,
பாதுகாக்கப்படுவார்கள்...
உயிர்த்தியாகி (ஷஹீத்),
நாட்டுக்காக எல்லையில் காவல்புரியும்,
காவல் வீரன்.
ஜும்ஆத்தினத்தில் மரணித்தவர்.
வயிற்று நோயால்,மரணித்தவர்.
இன்னும் பலராகும்....
எனவே,அல்லாஹ்வின் நல்லடியார்களே.!
நமது பயணத்தின் ஆரம்பம் சிறந்ததாக,
அமைய வேண்டுமானால் மேற்கூறப்பட்ட,
நல் அமல்களைச்செய்து இறுதி வாழ்க்,
கைக்கு நம்மை நாம் தயார்படுத்திக்,
கொள்வோமாக.அதற்குரிய ஹிதாயத்தை,
நம் அனைவருக்கும் இறைவன் வழங்கு,
வானாகவும்.ஆமீன்...!
தொடரும்.....!



மௌலவி எம்.எம்.கலீல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேசும் பெண்மை

# கங்கையாகும் மங்கை



கோபிகை

அடக்கம், தியாகம், பொறுமை, இரக்கம், அன்பு, அழகு, ஆற்றல், தொண்டு, ஒப்புரவு முதலிய இயல்புகள் சேர்ந்த கலவையே பெண்மை எனப்படும். பெண்மையின் இந்த இயல்புகள் இன்பத்தை தரவல்லன என்பது உண்மையே. பெண் என்பவள் வீட்டின் கண்ணாகவும் உலகின் உயிர்ச்சக்தியாகவும் போற்றப்படுகின்றாள். பெண்ணின் இதயம் மிக மிக மென்மையானது. அது ஒரு பெரும் கடல். அதன் உள்ளே அன்பு, பண்பு, அமைதி, அழகு, கருணை, காதல், பாசம் இப்படியாக எண்ணற்ற நன் முத்துக்களைத் தேடித்தேடி எடுக்கலாம். அது எடுப்பவர்களின் திறமையை பொறுத்தே அமைகின்றது. ஒவ்வொரு பெண்களும் அன்பினையும் பாசத்தையும் தமக்குள்கொண்டிருப்பது போலவே அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் ஏங்குபவர்களாகவே காணப்படுகின்றனர். அரசாளும் பெண்ணுக்கும் மனதாளும் அரசன் புருசனாகவே இருப்பர்.

அதற்கேற்றவாறே பெண்கள் தாமும் வாழ வேண்டும். எவ்வளவு தான் படித்திருந்தாலும் பட்டம் பெற்றாலும் நற்குணங்களே பெண்ணுக்கான அணிகலனாகின்றது. அடக்கமும் பணிவும், பொறுமையும்இனிமையும் கொண்ட பெண்ணை மனைவியாகப் பெற்றவர்கள் உண்மையில் வரம் பெற்றவர்கள் என்றே கூறவேண்டும். நாம் ஒரு விடயத்தைக் கவனிக்கவேண்டும். என்னதான் வேலைப்பழுவாக இருந்தாலும் பேச்சிலும் நடத்தைகளிலும் மென்மையைக் கைக்கொள்ளாவிட்டால் அங்கே அமைதி தொலைந்துவிடும். ஆங்காரம் குடிகொண்டுவிடும். அடிமைத்தனம் தவறேயன்றி அன்பு காட்டுதல் தவறல்ல. எந்தச் சந்தர்ப்பத்திலும் பெண்ணானவள் பொறுமையும் அடக்கமும் கொண்டவளாக இருத்தல் வேண்டும். அவசரத்தில் வார்த்தைகளை விட்டுவிட்டு பின்னர் அவதிப்படவேண்டி ஏற்படும். குடும்பம் என்ற கூட்டைக் கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கே ஆனது.

**அன்பு என்ற நீரூற்று தனக்குள்ளேயே இருந்தாலும், எப்போதும் அதை வெளியே யாரிடமாவது தேடி அலைபவள் பெண்**


இளம் வயதில் பெற்றோரிடம், பருவத்தில் காதலனிடம், திருமணத்திற்குப் பிறகு கணவனிடம், தாயான பிறகு குழந்தைகளிடம் என்று எப்போதும் யாரையாவது அண்டியே இருப்பவள் பெண். அவளால் தன் காலில் தானே நிறக முடியாது என்று பிறர் குறை கூறுவது உண்டு. ஆனால், இது குறையல்ல. இதுதான் நிறை. பிறரிடம் எப்போதும் எதிர்பார்த்து, அதை அவர்கள் தந்தாலும், தராவிட்டாலும் பெண் எப்போதும் தந்து கொண்டேதானிருக்கிறாள். எனவே, அண்டி வாழ்வது பெண்ணிற்கு குறையல்ல நிறை. பெற்றோரைச் சார்ந்து வாழும் குழந்தை அவர்களை ஒன்றாகப் பிணைத்து வைக்கிறது. காதல் வெற்றி பெற்றால் அதற்குக் காரணம் பெண்ணின் இந்த சேர்ந்து வாழும் குணம்தான். கணவன் மனைவி இணை பிரியாமல் இருப்பதற்கு காரணமும் இக்குணம் தான். சார்ந்து வாழுதல், இயல்பானது. அது வரமானது. அதனைப் புரிந்துநடந்தால் பெண்மை என்றும் போற்றுதலுக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார் சிந்தனைக்கு

# யார் தெரியுமா?



ஏழ்மையாக இருந்த ஒருவனுக்குப் படிப்பே வரவில்லை, படிப்பை விட்டுவிட்டு வேலை தேடத் தொடங்கினான்.

அவன் எதிர்பார்த்தது போல் அவனுக்கு உடனே வேலை கிடைத்துவிடவில்லை.

அவனுக்குக் கடுமையான பசி, ஒருநாள் ஒரு நாடக அரங்கத்தின் வாசலில் சென்று அமர்ந்து விட்டான்.

அந்த நாடக அரங்கிற்குப் பணக்காரர் ஒருவர் தன் குதிரையில் நாடகம் பார்க்க வந்தார்.

அவர் அந்தப் பையனிடம்,டேய் தம்பி, இங்கே நான் கட்டிவிட்டுச் செல்லும் என் குதிரைகள் காணாமல் போகின்றன. நீ இதைப் பார்த்துக் கொள். வரும் போது உனக்கு ஏதாவது காசு தருகிறேன் என்றார்.

அந்த வேலைக்கு அவர் கொடுக்கும் பணத்தில் ஒரு வேளையாவது சாப்பிட்டு விடலாம் என்று நினைத்த அந்தச் சிறுவனும் ஆர்வத்துடன் தலையாட்டினான்.



அந்தப் பணக்காரர் நாடகம் பார்க்கச் சென்றார்.

அந்த நேரத்தில், அவன் அந்தக் குதிரையைக் குளிப்பாட்டி நிறுத்தி வைத்தான்.

நாடகம் முடிந்து வெளியே வந்து பார்த்த பணக்காரர், தன் குதிரையைச் சுத்தப்படுத்தி, அதன் சேணத்தையும் பளபளப்பாகத் துடைத்து வைத்திருந்த சிறுவனைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

அவர், தான் கொடுக்க நினைத்திருந்த பணத்தை விட அதிகமாகக் கொடுத்தார்.

அந்தச் சிறுவனும், அதைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைந்தான்.

மறுநாள், அந்த நாடக அரங்கிற்கு வந்த மற்றவர்களும் அவனிடம் குதிரையைப் பாதுகாக்கச் சொல்லி விட்டுச் சென்றனர்.

அவன் அந்தக் குதிரைகளையும் பாதுகாத்து, சுத்தப்படுத்திக் கொடுத்தான்.

இப்படியே அவனுடைய வருமானம் பெருகியது. அதனைத் தொடர்ந்து அங்கு, குதிரை லாயம் ஒன்றை அமைத்து, தன் உதவிக்கும் சில வேலையாட்களை வைத்து முதலாளியாகி விட்டான்.

அங்கு நடைபெற்ற நாடகங்களையும் கவனித்து வந்த அவன், அதிலும் மிகப்பெரிய இலக்கிய மேதையாகி விட்டான்.

**அந்தச் சிறுவன் யார் தெரியுமா?**

**அவன் வேறு யாருமில்லை,**
**உலகப்புகழ் பெற்ற இலக்கிய மாமேதை**
**ஷேக்ஸ்பியர்தான் அவர்.**

நன்றி முத்துக்கமலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா அம்மு அழகுக்கலை நிலையத்தினால் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட தாய் தந்தையற்ற 30 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு இன்று காலை 10மணியளவில் அழகுக்கலை நிலையத்தில் பணிப்பாளர் திருமதி அமுதா சுமன்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திரு. ஜெயக்கெனடி, வேப்பங்குளம் மெதடிஸ்த திருச்சபையின் குருமுதல்வர் திரு. மனோரஞ்சன், வேப்பங்குளம் கிராமசேவையாளர் திரு. தவராசா ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைத்தனர்.

சமூகப்பணியில் அம்மு அழகுக்கலை நிலையம் மூன்றாண்டுகளாக தமது பணியை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது

இம்மாத

# பென்சில் ஓவியம்




அன்பிற்கு ஓரிடம்.
உன்னைத்தவிர யாரு
மில்லை. இறைவன் எனக்
களித்த அருட்கொடை நீ.
தனிமையில் தவிக்கும்
எனக்கு நீயே
பெருந்துணை. என்னை
நிமிர்ந்து பார்.
ஒரு முத்தம் தா. என் வாழ்வு
அர்த்தம் பெற மகனாக நீ
வந்தாய், இல்லை, இல்லை
மகராசனாய் நீ வந்தாய்.
எனக்கு கிடைத்த உன்னத
பரிசு உலகில்
நீதான் என்பேன்.

சி.பி. அப்துல் காபிழ்
நோக்ஸ் ரோட்,
தி/மூதூர்- 4.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




மரத்தில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி அதற்குள் ஒளிந்திருக்கும் பழமொழியை தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் கண்டுபிடிக்கவும்.

## கண்டுபிடியுங்கள்...


விடைகள்
52 ஆம் பக்கத்தில்



இரண்டு படத்திற்கும் இடையே
உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காவலூர்
அகிலன்.

# அவசரம்



இரவு முழுவதும் அழுது புலம்பிய ஜீவன் சில நினைவுகளுடன் தூக்கத்தை எடுத்துக்கொண்டான். மறுநாள் காலை அழகான பொழுதாய் விடிய வேண்டுமென எல்லோரும் நினைப்பதுபோல் ஜீவனும் நினைத்துத்தான் உறங்கினானோ என்னவோ உண்மையில் அவ்வாறான இனிமையான காலைப் பொழுதாகவே விடிந்தது எனக் கூற லாம் .

மெல்லிய மழைத்தூறலுடன் கிளைகளை ஊடறுத்து வரும் அந்த சூரிய ஒளி ஜீவனின் காலில் மெதுவான சூட்டைக்கொடுத்திட போர்வையை விலக்கி மீண்டும் கால் தெரி யாதவாறு இழுத்துப் போத்திக்கொண்டான்.

ஜீவன் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க அழகான பையன், படிச்சு முடிச்சு வேலை தேடிக்கொண்டிருக்கிறான். தாய் தந்தையர் யுத்தத்தின் போது கொல்லப்பட்டு விட்டனர். சொந்தமென இருந்த இரு உறவுகளும் இல் லாமல் போனவுடன் அவன் தனிமைப்ப டுத்தப்பட்டான் அதுவே அவனுக்கு நீண்ட காலம் தூக்கத்தைப் பறித்தது.

ஆயினும் இடையில் வந்த சில இனிமை யான நண்பர்களின் பழக்கத்தினால் ஜீவனின் பகல் பொழுது சந்தோசமா னதாகவே கழிந்தது.

நாட்கள் நகர நகர ஜீவனுக்கும் நண்பர்க ளுக்குமான நெருக்கம் வீடு வரை சென்றது. யாருமே இல்லாத ஜீவனுக்கு நண்பர்களின் உறவினர்கள் பேருதவியாகினர்.

அவ்வாறானதொரு நண்பன்தான் வாஸ்,

வாஸிற்கும் ஜீவனிற்குமான நட்பு மற்ற நண்பர்களை விட கொஞ்சம் அதிகம்தான். தன் குடும்பத்தில் ஒருவனாகவே வாஸ் ஜீவனை நினைத்திருந்தான். அதுபோலவே வாஸின் குடும்பத்தினரும் ஜீவனை தங்களில் ஒருவனாகவே பார்த்தனர் வாஸிற்கு அழகான தங்கையொருத்தியிருந்தாள். அவள் உடலால் நலிந்திருந்தாலும், கண்கள் மீனின் கண் களைப்போலும் உதடுகள் செந்தாமரை இதழ் கள் போலும் பளிச்சென மின்னும்.

அவள் முகம் அந்த நிலாவைப் போன்றே காட்சியளிக்கும் அவ்வளவு அழகு அவள் வாஸிற்கு மட்டுமல்ல வீட்டிலும் செல்லமா கவே இருந்தாள்.

ஜீவன் வாஸின் வீட்டிற்கு வந்து போவ தைப் பழக்கமாக்கிக் கொண்டான் இவ்வாறே நாட்கள் பல உருண்டோடின.

ஜீவனிற்கும் வாஸின் தங்கை மித்திரா வுக்கும் இடையில் பழக்கம் அதிகமாகியது

ஜீவன் கண்ணியமாகவும் கட்டுப்பாடா கவும் வளர்ந்தவன். அவன் தனது நண்பனின் தங்கையை நல்ல உறவாகவே எண்ணினான். மித்திராவோ ஜீவனை மனதாரக் காதலித்தாள்.

தன் காதலையும் ஜீவனிடம் சொல்லிட நினைத்தாள், அதற்கான சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் காத்திருந்தாள் மித்திரா.

வழமையாக வந்துபோகும் ஜீவனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் காதலிப்பதை சிறிய தயக்கத்துடன் கூறி முடித்தாள். ஜீவனால் எதுவுமே கூற முடியவில்லை நண்பனா? நண்பனின் தங்கையா? என நினைத்துக்கொண்டே நடந்தான். நண்பனுக்காக அவளை வேண்டாமென்று கூறிவிட்டால் மித்திரா தற்கொலை செய்துவிடுவாளோ என்று கூடப் பயந்தான், மறுபக்கத்தில் நண்பனுக்குத் துரோகம் செய்வதையும் அவன் மனசு ஏற்கவேயில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டு வேகமாக நடந்தான்.

இந்த ஒற்றை மனிதனால்தானே பலருக்கும் பிரச்சினைகள் தோன்றுகிறது என்பதாய் நினைத்துக்கொண்டு தற்கொலைக்கு முயற்சித்தான். அவன் உட்கொண்ட மாத்திரைகள் அவன் உயிரைக் காவிச்செல்லமறுத்தது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜீவன் குணமடைந்து மீண்டும் வீடு திரும்பினான். வாஸ் ஜீவனைப் பார்ப்பதற்காக ஜீவனின் வீடு வந்தான். படுக்கையில் இருந்த ஜீவன் எழுந்தவாறு ''வா வாஸு, வந்து உட்காரு'' என்றபடியே எழுந்திருந்தான்.

வாஸ் தனது மனதிலிருந்த ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தான். அதன் பின் ஆறுதலாய்,

''டே... உனக்கு ஏதாவது பிரச்சனை என்றால் எனக்குச் சொல்லியிருக்கலாம்தானேடா ஏன் இப்படிச்செய்தாய் சொல்லுடா?'' என்றான்.

மறைக்க விரும்பாத ஜீவன் பயந்தபடியே சொன்னான்,

''அதில்லடா உன் தங்கச்சி என்ன லவ் பண்றதா சொல்லிருச்சு, அதனாலதான்டா இப்படி'' என இழுத்தான்.

''அட நல்ல விசயம்தானேடா நீ எனக்கு மச்சானாகிறதுக்கு நான்தான் கொடுத்து வைச்சிருக்கனும்டா, சரி சரி நீ இரு நான் இந்த விசயத்தை அம்மாட்டச்சொல்லி உன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறன்'' என்றவாறு வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

வீட்டை அண்மிக்கும் தூரத்தில் வாஸின் வீடு முழுதும் சனக்கூட்டமாக இருந்தது. வாஸுக்கு என்ன என்பது புரியவேயில்லை, வேகமாக ஓடி வீட்டை அடைந்தான்.

வாஸின் அம்மா அழுது புலம்பியபடி இருந்தாள் வாஸைக்கண்டதும் ''ஐயோ வாஸூ'' என்றபடி ஓடி வந்தாள்.

வாஸ் என்ன ஏதென அறியாமல் பதறியபடி வீட்டை நோக்கி ஓடினான்.

உடைக்கப்பட்ட கதவுகள் ஏதோ ஓர் அசம்பாவிதம் நடந்துள்ளதென்பதை உறுதிப்படுத்தியது

வீட்டின் உள்ளே நுழைந்தான் வாஸ். இரண்டு கால்கள் தொங்கியபடி மித்திரா வீட்டின் வளையில் கயிறிட்டு தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள்.

வாஸூக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை, அருகில் கிடந்த கத்தியை எடுத்து தூக்கில் தொங்கிக்கொண்டிருந்த மித்திராவின் உடலை அறுத்து கீழே இறக்கினான்.

மித்திராவின் மரணத்துக்கான காரணத்தை வாஸால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. மித்திராவின் புத்தகங்கள் அடுக்கப்பட்ட மேசையை நோக்கி விரைந்தான். மேசையில் எழுதப்பட்ட கடதாசி, என் மரணத்தின் பின்னாவது என் காதல் உண்மையானதும் துரோகமற்றதுமென்பதை உணர்ந்துகொள்வீர்கள் என நினைக்கிறேன் என முடித்திருந்தாள்.

''ஐயோ உன் காதலைச் சேர்த்து வைக்கத் தானேடி இவளவு தூரம் ஓடோடி வந்தேன்'' என்றழுதான் வாஸ்.

ஆறுதல் கூறியபடி பலர் வாஸை அணைத்துக்கொண்டு இருத்திட வாஸ் வீடு மக்களால் நிரம்பத்தொடங்கியது

மரண வீட்டில் கூடிய குழுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புரளியைக் கிளப்பி விட்டுக்கொண்டிருந்ததை வாஸின் காதுகள் கேட்டவண்ணமே இருந்தது.

அவர்களிடம் எப்படி உரைப்பது என் தங்கை அவசர முடிவெடுத்துவிட்டாள் என்பதை என நினைத்தபடி எழும்பி ஜீவனின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

## வாழ்த்துகின்றோம்



திக்கம்-அறநெறி பாடசாலையூடாக தரம் 1 தேசிய மட்டத்தில் நடைபெற்ற ( 2017) கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்ற மாணவி ம . ஹர்ஷினியை ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸஹீட். எச். சப்றீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.

# இது காலத்தின் கோலமா?

வழமையான சம்பவங்களெல்லாம் பெண்களினுடைய கதைகளிலேயே ஆரம்பித்தன. ஆனால் இச்சம்பவமோ சற்று மாற்றமாக ஆணுடைய அழுகையுடன் ஆரம்பிக்கிறது. ஒரு பெண்ணுடைய அழுகை என்பது இயல்பானது. காரணம் பெண்கள் இயல்பிலேயே மென்மையான உள்ளம் கொண்டவர்கள். ஆனால் ஆண்களோ எதையும் தாங்கும் சக்தி உள்ளவர்கள் எனப் பெயர்பெற்றவர்கள். எனவே அதையும் தாண்டி ஒரு ஆண் அழுகின்றபோது அதன் ஆழம் மிகக் கடுமையாக இருக்கும் என்பதற்கு இது சான்று. விவாகரத்து வழக்கொன்றிற்காக அடிக்கடி நீதிமன்றம் வந்து போகின்ற நபர் அவர். இன்றும் உளவள ஆலோசனைக்காக அனுப்பப்பட்டிருந்தார்.

கூலித்தொழில் செய்யும் இவருக்கு இரண்டு பிள்ளைகள். மனைவிக்கு வேறு ஒருவருடன் தொடர்பிருப்பதாகக் கூறி அவளிடம் இருந்து விவாகரத்துப் பெற்றுத் தரக்கோரியே வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அத்தோடு இரண்டு பிள்ளைகளையும் தன்னிடமே தருமாறும் விண்ணப்பித்திருந்தார். விவாகரத்துக்கான விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் பிள்ளைகள் விடயத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. 11 வயது நிரம்பிய மூத்த பெண் பிள்ளை தாயிடமும் மற்றய 8 வயது ஆண் பிள்ளை தந்தையிடமும் இருப்பதாக அத்தீர்ப்பு அமைந்திருந்தது.

பிள்ளைகள் இவ்வாறு பிரித்து வழங்கப்பட்டு அப்பிள்ளைகள் விருப்பப்படின் தாயிடம் இருப்பவருக்கு தந்தையைப் பார்க்கவும் தந்தையிடம் இருப்பவருக்கு தாயைப் பார்க்கவும் எப்போதும் அனுமதிக்கவேண்டும் எனவும் கூறப்பட்டது. இவ்வாறு சென்று கொண்டிருக்கையில் ஒரு நாளைய விசாரணையில் கணவன் நீதிமன்றில் அழுதபடி மற்றைய பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையையும் என்னிடம் தாருங்கள் என மன்றாடினார். அதன் பின்னர் அதை விசாரிக்க குடும்ப ஆலோசனைக்காக அனுப் பப்பட்டிருந்தார். அவர் அவ்விசாரணையில் கூறியது மிகவும் ஆச்சர்யமாய் இருந்தது. எனது மனைவி தொடர்பு வைத்திருக்கும்

**ஆண்களோ எதையும் தாங்கும் சக்தி உள்ளவர்கள் எனப் பெயர்பெற றவர்கள். எனவே அதையும் தாண்டி ஒரு ஆண் அழுகின்றபோது அதன் ஆழம் மிகக்கடுமையாக இருக்கும்**

அந்த நபர் மூலமாக தற்போது கர்ப்பமாக உள்ளார். அதுமட்டுமல்லாது எனது பிள்ளை யைக் கூட அந்த நபர் பயன்படுத்திக்கொள் வதாக அப்பிரதேசவாசிகள் கூறுகின்றனர். இது இப்படியே சென்றால் எனது பிள்ளை யும் தவறான வழிக்குச் சென்றுவிடும். தய வுசெய்து அவளிடம் இருந்து எனது மற்றய பிள்ளையையும் காப்பாற்றித் தாருங்கள் எனக்கதறி அழுதார்.

அத்தோடு எனது பெண்பிள்ளை அடிக் கடி அந்தக் குறிப்பிட்ட நபருடன் மோட் டார் வண்டியில் செல்வதையும் நான் கண்டி ருக்கிறேன், எனவும் கூறினார். அவருடைய விடயங்களைக் கேட்டதன் பிற்பாடு பிரதே



சத்திலும் விசாரித்து அவருக்கு நியாயமான தீர்ப்பொன்று வழங்கப்பட்டது.

பெற்றோர்களின் தவறுகளுக் காக பிள்ளைகளின் எதிர்காலம் சீரழிக்கப்படுவதென்பது மிகக் கவலையளிக் கிறது.

அதை விட தகப்பனால் கர்ப்பமாக் கப்பட்ட பல சிறுமிகளைப் பார்த்த எங் களுக்கு தனது பிள்ளையை மனைவியின் கெட்ட நடத்தையிலிருந்து பாதுகாக்கப் போராடும் தந்தையைப் பார்க்கும் போது தாய்மையின் இன்றைய நிலையை எண்ணி அழுகைதான் வருகிறது. பெண்பிள்ளையின் பாதுகாப்பு தாய்க்கு மட்டுமே உரித்தானது என்பதற்காகவே பெண்பிள்ளையின் பரா மரிப்பு தாய்மாருக்கே வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது 8 வயதுக்கு மேற்பட்ட பெண்பிள்ளையை தந்தையர்கள் குளிப்பாட் டுவது கூட தண்டனைக்குரிய குற்றம். இவ் வாறெல்லாம் நிபந்தனைகள் விதிக்கப்படு வது தாய்மையின் கண்ணியத்தை உணர்ந்தே. ஆனால் அந்த தாய்மையே இன்று இப்படி யாகிப் போய்விட்டதே.

தனது தவறான தொடர்பு சம்பந்தமாக முடிவெடுக்கும் அதிகாரம் தனக்கிருந்தாலும் தனது பிள்ளை சம்பந்தமாக அதிகாரம் தனக் கில்லை என்பதனை ஒவ்வொரு தாய்மாரும் உணரவேண்டும். அதுமட்டுமல்லாது பெண் ணுரிமை பேசும் பெண்களுக்கும் சில சமூகப் பொறுப்புக்கள் உள்ளது என்பதனை அவர் கள் நினைவில் கொள்ளவேண்டும்.

சமூகத்தில் இவ்வாறான சம்பவங் கள் இடம்பெறுகின்றபோது அவை சம்பந்தமாக விழிப் புடன் செயற்பட அவர்கள் முன்வரவேண்டும்.


தனது அயல் வீட்டில் என்ன நடக்கிறது என் பதையும் சற்று அவதா னிக்கின்ற பெண்களாக ஒவ்வொரு பெண்ணும் மாறினால் பெண்ணு ரிமை பற்றி மேடைக ளில் பேசவேண்டிய அவசியமே இருக் காது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தருவது
தமண்ண
செட்டியார்



# காந்தப்பார்வையை அடையும் பயிற்சி

ஒரு அமைதியான இடத்தில் சௌகரியமான ஆசனத்தில் அல்லது நாற்காலியில் அமர்ந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு நேர் எதிரில் சுவரிலோ மேசை மீதோ ஏதாவது ஒரு பொருளை வைத்துவிட்டு அந்தப் பொருளையே கண்களை இமைக்காமல் பத்து நிமிடங்கள் பார்த்துவரவேண்டும். இதற்காக கண்களை விறைப்பாக வைத்துக்கொள்ளவேண்டாம். ஆரம்பத்தில் இது போல சுவரில் உள்ள புள்ளி, படம் அல்லது மேசை மேல் உள்ள பொருளைப் பார்த்துவரும்போது கண்கள் எரிச்சலடையும். கண்ணீர் மளமளவென்று வரும். அப்போது தண்ணீரில் நனைத்த ஈரக்கைக்குட்டையினால் கண்களைத் துடைத்துக் கொள்ளவும். அதன்பின் மறுபடியும் மேலே குறிப்பிட்ட இலக்கை பார்த்து வரவும். இதுபோல பார்த்துப்பழகி வந்து பார்க்கும் நேரத்தை அதிகப்படுத்தி அரைமணிநேரம் -முக்கால் மணிநேரம்-ஒரு மணிநேரம் வரை கண்களை இமைக்காமல் பார்த்து வந்தால் கண்களானது கெட்டிபட்டு இமைக்காமல் பார்க்கும் பழக்கம் ஏற்பட்டு விடும். இந்தப் பயிற்சியை காலை 6மணி முதல் 7 மணிக்குள் செய்வது சிறந்தது.

அதன்பிறகு மேசை மீது ஒரு மெழுகு வர்த்தியை எரியவிட்டு அதற்கு எதிரில் சற்று தூரத்தில் நாற்காலியில் அமர்ந்து அதன் சுவாலையைப்பார்த்து பழகிவரவும். இப்படி இதுபோல பார்வையைப் பயிற்சி செய்யும் காலத்தில் மனதில் எதுவும் எண்ணாமல் கீழே கொடுத்திருக்கும் மந்திரச் சொற்களை மட்டும் சொல்லிக்கொண்டே சுவாலையைப் பார்த்து வரவும்.

**காந்தக் கண்களை அடையும் மந்திரம்**

என் கண்கள் காந்தக் கண்கள். அவைகள் வரவர உறுதியாகின்றன. என் இமைகளை மூடாமல் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எந்தப் பொருளையும் பார்க்கும் சக்தி எனக்குண்டு. மற்றவர்களின் இருதயங்களை ஊடுருவிச் சென்று பிளக்கும் என் பார்வையின் காந்த சக்தியை சந்திக்க எவராலும் முடியாது. என் கண்கள் காந்தக் கண்கள். என் திருஷ்டி வலுவானது.

இந்த மந்திர வார்த்தைகளை மனதில் சொல்லிக் கொண்டே பார்வையை இலக்கில் நிறுத்தி பயிற்சி செய்து வந்தால் கண்களில் காந்த சக்தி அபரிமிதமாய் வந்து சேர்ந்துவிடும்.

இதனால் நீங்கள் அடையும் பலன்களை அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாம்.

இந்த விதமான பயிற்சி செய்து வருகையில் யாரையும் நேருக்குநேர் நோக்கி அவர் கண்களுக்குள் பார்த்துப் பேசினீர்களானால் அவர்களுடைய அல்லது உங்களுடைய அந்தராத்மாவில் ஒருவித அசைவு தோன்றும்.

**மனோசக்தியின் இரகசியங்கள்**

பாயும் சக்தி (Positive Power) உங்களிடத்திலும் தாங்கும் சக்தி (Negative Power) அவர்களிடத்திலும் அதிகரித்து இருக்குமானால் அவர்கள் மனதில் ஒரு அசைவு தோன்றி உங்கள் பார்வையை அவர்கள் தாங்க முடியாதவர்களாகி தங்கள் பார்வையை தாழ்த்திக் கொள்வார்கள்.

அவர்களின் பார்வையை மற்றப் பக்கங்களில் அப்படியும் இப்படியும் திருப்பிக் கொள்வார்கள். பக்கத்தில் வேறு ஒரு பொருளைப் பார்ப்பதுபோல் பார்க்க ஆரம்பிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனால், அவர்களிடத்தில் பாயும் சக்தியான பொசிடிவ் சக்தி அதிகமாக இருக்குமானால் உங்களால் தாங்க முடியாமல் நீங்கள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டோ அல்லது வேறு பக்கம் திருப்பியோ கொள்வீர்கள். ஆகவே, இந்த அற்புத சக்தியின் மகிமையை அடிக்கடி செயற்படுத்தி சோதனை செய்துபார்க்கவும்.

இதன்பின் காந்தசக்தியின் தன்மையை அதிகரிக்கச் செய்ய ஏதாவது ஒரு விஷயத்தை மனதில் தீர்மானித்துக் கொண்டு அதைப்பார்க்கப் பழகவும்.

இவ்விதம் பழகி வருவீர்களானால் சீக்கிரத்தில் அன்பு - அனுதாபம் - வல்லமை- தைரியம் முதலிய சகல குணங்களையும் உங்கள் பார்வையின் மூலமாக வெளியாக்கி மற்றவர்களைச் சீர்திருத்தவும் உங்கள் விருப்பப்படி இணங்கி நடக்கச் செய்யக்கூடிய சக்திகளையும் அடையலாம்.

எப்போதும் நீங்கள் யாரிடம் பேசினாலும் அவர்களது கண்களை நோக்கி நிமிர்ந்து பார்த்து பேசப்பழகிக் கொள்ளுங்கள்.

**மனோவசியம்**

உங்களது எண்ணங்களையும் கட்டளைகளையும் வெளியே செலுத்தும் வழி உங்கள் கண்களே என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

இதுபோல கண்களாலேயே எண்ணங்களையும், கட்டளைகளையும் வெளிப்படுத்தும் சக்தியை வளர்த்துக்கொள்ளலாம்.

நீங்கள் யாரை நோக்கிப் பார்த்தாலும் உங்கள் பார்வையானது இருபக்கமும் கூரான பட்டாக்கத்திபோல் அவர்கள் இருதயத்தை ஊடுருவிச் செல்ல அவர்கள் பலம் குன்றி உங்களுக்கு அடங்குவார்கள்.

கண்களே ஆத்மாவின் வாசல் என்பதை மனதில் வைத்து மற்றவர்களின் இருதயத்தில் உள்ள இரகசியங்களை எல்லாம் அவர்களது கண்கள் மூலமாகவே நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

பயிற்சிகள் தொடரும்

---

# ஆங்கில கதையின் மொழிபெயர்ப்பு - தமிழில்

## ஞானஸ்நானம்




சாலொமோன் ராஜாவிடம் இரண்டு பெண்கள் ஒரு குழந்தைக்கு சண்டை போட்டுக் கொண்டு வந்தனர். ஒவ்வொரு பெண்ணும் தான் தான் குழந்தையின் தாய் எனக்கூறினர். ஒரு பெண், ''ஓ! நான் தான் குழந்தையின் தாய்''. எனவும் மற்றய பெண், இல்லை இல்லை, ''ஓ மன்னா அவளை நம்பாதே. அவள் அம்மா அல்ல. நான் குழந்தையின் தாயாக இருக்கிறேன் ''என்றாள். சாலொமோன் ராஜா குழப்பமடைந்தார் ஒரு ஆழமான சிந்தனைக்குப் பிறகு அவர், ''குழந்தையை இரண்டு பகுதிகளாக வெட்டி, ஒவ்வொரு தாய்க்கும் ஒவ்வொரு பகுதியைக் கொடுக்க வேண்டும்'' என்றார். ஒரு பெண் அமைதியாக இருந்தாள்.'' ஓ! குழந்தையை வெட்ட வேண்டாம், என் குழந்தை அவளிடம் இருக்கட்டும். குழந்தை வாழட்டும்'' என கூறினாள். தாயின் உண்மையான பாசம் வெளிப்பட ராஜா அழுதுகொண்டிருக்கும் தாயிடம் குழந்தையைக் கொடுத்தார்.

### நீதி, சத்தியம் எப்போதும் வெல்லும்

மொழிபெயர்ப்பு - மீசாலையூர் சக்தி விஜயாவேல்
ஆசிரியர், கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் பக்கம்


# வெற்றியின் ரகசியம்...?



“நான் இளைஞனாக இருக்கும்போது பத்துக் காரியங்கள் செய்தால், அதில் ஒன்பது, தோல்வியில் முடிந்ததையே கண்டேன். வாழ்க்கையில் தோல்விகளை விரும்பாத நான், ‘ஒன்பது முறை வெற்றி பெறுவது எப்படி?’ என்று யோசித்தேன். அப்போது, எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. ’90 முறை முயன்றால், ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும்!’ என்பதே அது. ஆகவே, எனது முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன்!”

**இப்படி தனது வெற்றியின் ரகசியத்தைக் கூறியவர் யார் தெரியுமா?**
**பெர்னாட்ஷா தான் அவர்.**

# தாயின் அறிவுரையைப் பின்பற்றிய விஞ்ஞானி!



சி.வி.இராமன் இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார். இருந்தாலும், அவர் எந்த வேலையையும் ஒருமைப்பாட்டுடன் செய்யவில்லை என்பதால் அவரது தாயார் மிகவும் வருந்தினார்.

ஒருநாள் அவரை அழைத்து பூதக்கண்ணாடியையும் சில காகிதங்களையும் கொண்டு வரச் சொல்லிக் காகிதங்களை கீழே போட்டுக் கண்ணாடியை வெயிலில் காட்டினார்.

பூதக்கண்ணாடியைப் பிடித்த தாயின் கைகள் இங்கும் அங்குமாய் அசைந்து கொண்டிருந்தது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு தனது கைகளைப் பூதக்கண்ணாடியின் ஒளிக்குவியல் காகிதத்தின் மேல் படுமாறு நீட்டினார்.

ஒளியின் ஒரு முனையில் தீ காகிதத்தை எரித்தது. இதைக் கவனத்துடன் பார்த்த சி. வி. இராமன் ஆச்சரியப்பட்டார்.

உடனே அவரது தாயார், ஒருமுகப்படுத்திய ஒளிக்கதிர்கள் நெருப்பாகிக் காகிதத்தை எரிக்கும். ஆனால் ஒருமுகப்படுத்தாத கதிரின் ஒளியில் நெருப்பு உண்டாகாது.

அதுபோல் நீயும் உள்ளத்தை ஒருமுகப்படுத்தினால் எந்த வேளையிலும் வெற்றி அடையலாம் என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

அன்று முதல் தாயின் அறிவுரையை மனதிற் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் தனது செயல்களைச் செய்யத் தொடங்கிய இராமன், பிற்காலத்தில் உலகமே போற்றும் மனிதன் என்று ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புள்ள அம்மாவுக்கு!

## உங்கள் அன்பு மகள் நிதானா எழுதும் மடல்

அம்மா நான் இங்கு நலமாக உள்ளேன், வீட்டில் நீங்கள் எல்லோரும் நலமா? உங்கள் அனைவரினதும் நலனுக்காக இறைவனிடம் பிரார்த்தித்தபடியே இம்மடலை வரைகிறேன். நான் இப்படி ஒரு வேலை தேடிக்கொண்டு உங்கள் அனைவரையும் பிரிந்து வந்ததில் உங்களுக்கு கோபமோ வருத்தமோ அல்லது இரண்டுமோ இருக்கும். என்ன செய்வது? என் விதி இப்படித்தான் என்றாகிவிட்டது.

அம்மா நான் சொல்லப்போவதை கேளுங்கள். உங்கள் முன்னால் நின்று சொல்லமுடியாததை இப்போது கடித மூலம் சொல்கின்றேன். நீங்கள் பார்த்த மாப்பிள்ளையை நான் மறுத்தது உங்களுக்கு கோபம் என்பது தெரியும், ஆனால் என்னைப் பொறுத்தவரை அவரை ஏமாற்றவேண்டாமே என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. பலபேர் இப்படித்தான் வாழ்கின்றார்கள் என்று நீங்கள் சொல்வதை என்னால் ஏற்கமுடியவில்லை. என்னை ஒருவர் ஏமாற்றிவிட்டார் என்பதற்காக நானும் ஒருவரை ஏமாற்ற விரும்பவில்லை.

என்ன உனக்கும் அவனுக்கும் கலியாணமா நடந்தது எனக்கேட்கின்றீர்கள்? அம்மா, அழித்து எழுதுவதற்கு மனம் ஒன்றும் கரும்பலகை அல்ல. ஒரு முறை பதித்ததை அவசரமாய் அழித்துவிடமுடியாது. தங்கைகள் திருமணம் அது, இது என்று நீங்கள் என்னைத் தொந்தரவு செய்ததனால் தான் இப்படி எங்கோ உள்ள ஒரு ஆச்சிரமத்தில் வேலைக்கு வந்துள்ளேன். அம்மா, எனக்கு நடிக்கத்தெரியவில்லை, நான் நானாக இருக்கவே விரும்புகின்றேன். எங்களுக்குள் வந்த சிறிய பிரச்சினை எங்கள் திருமணத்தை நிறுத்துமளவிற்குச் சென்றுவிட்டது என்னவோ உண்மைதான். காலம் மாறிவிட்டதென்று நீங்கள் எல்லோரும் சொல்வது உண்மைதான், ஆனால் ஒவ்வொரு விடயங்களையும் அவரவர் பார்க்கும் விதத்தில் தான் அதன் ஆழம் இருப்பதாக நான் நினைக்கின்றேன். ரசனையும் பார்வையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதம் தானே.



நான் தேடிய மனஅமைதி இங்கே கிட்டிவிடும் என்றே எண்ணுகின்றேன், யாராவது கேட்டால் வேலைக்குச் சென்றுள்ளதாக மட்டும் கூறுங்கள். ஏனைய விடயங்களைக் கூறினால் பலரும் பலவிதமாய் பேசுவார்கள். அதன் புனிதத்தினைப் புரிந்து கொள்ளாதவர்களின் இயலாமைகள் வெவ் வேறு விதங்களில் வெளிப்படக்கூடும். ஒரு ஆணுக்கான நியாயங்கள் போல் இருப்பதில்லை, பெண்ணுக்கான நியாயங்கள். அது, கண், காது, மூக்கு வைத்தே பேசப்படும். அந்த விடயத்தில் நாம் இன்னும் விடுதலை பெற்றுவிடவில்லை. என் தரப்பு நியாயங்கள் உங்கள் அனைவருக்கும் புரிந்திருக்கும் என நினைக்கின்றேன்.

இத்துடன் எனது மடலை நிறைவு செய்கின்றேன்.

இப்படிக்கு நிதானா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காலம் பல சாதனையாளர்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. அந்த வகையில் வாழ்க்கையின் ஓட்டத்துடன் போராடி தொழிலதிபர்களாக தம்மை உருவாக்கிக்கொண்ட இளம் தொழில் வழங்குநர்களை நேர்கண்டு அவர்களின் வெற்றியின் வழிகளை, ரகசியங்களை வளரும் சந்ததிக்கு கடத்தவேண்டும் என்னும் எண்ணத்தில் வெற்றியாளர்கள் என்னும் பகுதியினை உருவாக்கியுள்ளோம். அந்த வகையில் இம்மாத வெற்றியாளர் பகுதியை அலங்கரிப்பவர் **தொழிலதிபரும் ரியூப் தமிழ் நிறுவனத்தின் உரிமையாளருமான ரவிசங்கர் சுகதேவன்.**

# துணிச்சல் இல்லாதவனுக்கே இலக்கு இல்லை



நேர்காணல் ஜயிலா

**உங்களைப் பற்றிய அறிமுகம்.**

பதில் : எனது பெயர் ரவி சங்கர் சுகதேவன். தற்போது டென்மார்க் நாட்டில் வாழ்ந்து வருகிறேன், தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்டு வடமராட்சி அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் விழுந்தகுண்டில் தந்தையை இழந்து, தமிழகம்சென்று, பின் தாயார் இரண்டு சகோதரர்களுடன் டென்மார்க் வந்து சேர்ந்தோம். போரினால் பாதிக்கப்பட்டு மீண்டெழ பாடுபடும் இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரி எனது வாழ்வு. போர், தாயகத்தில் கல்வி கற்க முடியாது ஊர் ஊராக நம்மை விரட்டியடித்தது, அழிவில் இருந்து நம்மைக் காக்கவல்ல கல்வியையும் பறித்துவிட்டது.

போர் உயிரை எடுப்பது கொடிய நிகழ்வு. அதுமட்டுமன்றி குழந்தைகளை பெற்றோரை இழக்கும் பெரும் சோகத்தில் தள்ளி உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதும் கல்வியைப் பறித்தெடுப்பதும் அதீத கொடுமையானவை. கொடிதிலும் கொடிது இளமையில் வறுமை, இவைகள் தான் எனது சிறு பராயத்து கண்ணீர்க்கதை.. என் நாட்டின் பெரியோர் எனக்குத் தந்த பரிசு. அதைத் தொடர்ந்து எனது மாமாவின் உதவியுடன் டென்மார்க் வந்தேன், அங்கும் எனக்கு பிரச்சினையே வந்தது, டேனிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழியைக் கற்றுவர பாடசாலைக் கல்விக்காலம் கடந்துவிட்டது. கல்வி கற்பது இரண்டு நாடுகளிலுமே சவாலாக மாறியது. அந்த நேரத்தில்தான் , வாராது வந்த மாமணியாக இணையம் வந்தது, அதில் ஆழமாக ஈடுபட்டு தேடலை ஆரம்பித்தேன்.. அந்தத் தேடல்தான் என்னை ஒரு தொழில் அதிபராக மாற்றியது. எனது இளமைக்காலம் முழுவதும் தேடல் தேடல்.. தேடல் அவ்வளவுதான்.

**இளம் தொழில் அதிபராக விளங்கும் உங்கள் ஆரம்பத் தொழில் என்ன..?**

பதில் : நான் ஆரம்பத் தொழில்களாக பல தொழில்களைச் செய்திருக்கிறேன், கடைகளுக்கு செய்தித்தாள்கள் போடுவது, ஓட்டல்களில் வேலை செய்வதென மிகவும்கடினமான வேலைகளைச் செய்துள்ளேன். அதனைக் கடக்க உதவியது அலைகள் இணையப்பத்திரிகை. அதில் இருந்து அலைகள் மூவீஸ் திரைப்படங்களைத் தயாரித்து, ரியூப் தமிழிற்கு முன்னேறி, பின்னர் உலகின் பல பாகங்களிலும் இணைய மூலமான சிறு சிறு தொழில்களைச் செய்து படிப்படியாக முன்னேறினேன். அதற்குப் பின்னர்தான் எனது வர்த்தக சாம்ராஜ்யம் உருவாகியது.. எனது தொழில் நிறுவனங்கள் படிப்படியாக வளர்ச்சியடைய ஆரம்பித்தன, இன்று உலகின் பல நாடுகளில் எனக்கு தொழில்நிறுவனங்கள் உண்டு.

**உங்கள் சாதனைக்கு வழிகாட்டியதாக யாரைக்கருதுகிறீர்கள்..?**

பதில் : சாதனைக்கு வழிகாட்டியது என்முன் இருந்த சவால்கள்.. இந்த வாழ்க்கை ஒரு தடவைதான், அதனுடைய ஆரம்பத்தை போர் சூறையாடிவிட்டது, இனி என்னுடைய எதிர்காலம் என்ன.. போர் மீது பழியைபோட்டுக்கொண்டு வாழ்வைச் சீரழிப்பதா?

போரின்துயரங்களுக்கு எதிராக நானே ஒரு போரைப் பிரகடனப்படுத்தினேன். காலம் எனக்கு வழிகாட்டியது, எனது மாமனார் கி.செ.துரை கூடவே இருந்து சாதனைக்கு வழிகாட்டினார், மாணவர் மன்றம் ஒன்றை அமைத்து தலைமைப் பதவியைத் தந்தார், இதனால் நிர்வாக முகாமைத்துவத்தைக் கற்றுக் கொண்டேன். பல நாடகங்களில் நடித்துள்ளேன், பூக்கள், இளம்புயல் என்ற இரண்டு திரைப்படங்களிலும் நடித்திருக்கிறேன்.

பாடசாலைக்கல்வியைத் தோற்கடிக்கும் பாரியகல்விஎனக்குபாடசாலைக்குவெளியே கிடைத்தது. இத்தோடு எனது நண்பர்கள் பலருடன் சேர்ந்தியங்கினேன், சிறப்பாக வஸந்த் செல்லத்துரையுடன் இணைந்து பல கலை முயற்சிகளைச் செய்தேன்.. இப்படி பலருடன் பணியாற்றிய அனுபவம் வெற்றிக்கு வழிகாட்டியது, இன்று தாயகத்தில் கவிஞர் கம்பிகளின் மொழிபிறேம், தமிழகத்தின் ரியூப்தமிழ் பணியாளர்கள் போன்றவர்களுடன் பணியாற்றுவது, டென்மார்க்கில் எனது நிறுவனங்களில் பணியாற்றும் டேனிஸ் ஊழியர்கள் வரை பலர் என் வாழ்வின் வெற்றிக்கு வழிகாட்டிகளாகவும் உறுதுணையாகவும் உள்ளனர். எனது தந்தையிடமிருந்த தொழில் நுட்ப ஆற்றலும் என்னை வழி நடத்தியிருப்பதை இப்போது உணர்கிறேன். டென்மார்க்கில் உள்ள எனது குடும்பம் பெரியது. எல்லோரும் துணை புரிகிறார்கள். குடும்பத்தைச் சரியாக நிர்வகித்தால் அதுவே சாதனைக்கான சரியான வழிகாட்டியாகும்.

**வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் என எண்ணிய தருணம் எது?**

பதில் : அவமானம், மட்டந்தட்டல். டொக்டராகவோ, என்ஜினியராகவோ இருந்தால் மட்டுமே மரியாதை என்று கருதிக்கொண்டு நம்மை இளக்காரமாகப் பார்த்த நமது பாமர சமுதாயம், டேனிஸ் பாடசாலைகள் சொல்வதே வேதமென கேட்டு, படித்தாலே வெற்றி என்ற டேனிஸ் பாடசாலைகளின் ஏட்டுச்சுரைக்காய் கல்வி இவை எல்லாம் எனக்கு ஒரேயொரு வழியை மட்டும் காட்டின. கிரிமினல் செயல்களை செய்து சிறையில் இருக்கவே திசை காட்டிகளாக இருந்தன. தாமே எல்லாம் தெரிந்தவர்கள் என்று கருதும் இந்த சமுதாய முட்டாள்கள் ஏன் குற்றவாளிகளாகவும், சமுதாய கிரிமினல்களாகவும், தோல்வியாளராகவும் இருக்கக் கூடாது என்று என் கேள்விகளை மாற்றிப் போட்டேன்.

இந்தப் பாடசாலைகளின் கல்வியில் பெரிய தவறு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல் மாணவனாக வராமல் தப்பித்தது என் அதிர்ஷ்டமாக ஏன் இருக்கக் கூடாது என்றும் யோசித்தேன். ஆனால் சீச்சீ இந்தப்பழம் புளிக்கும் என்ற கதையாகி விடக்கூடாது, அதை எதிர்ப்பது எனது கடமையல்ல, அதற்கு எதிராகச் சாதிப்பதே என் கடமை. அதையே செய்தேன். இன்றைய சிஸ்ரத்திற்கு மாறாக மேலும் ஏதோ ஒன்று புதிதாக இருக்கிறது.

எல்லோரும் அப்பிள் மரத்தின் ஒரு பக்கமே கல்லெறிகிறார்கள், யாருமற்ற மறுபக்கமாக போய்ப் பார்த்தேன், வெற்றிக்கனிகள் ஆடிக் கொண்டிருந்தன. சாதித்துக்காட்ட வாய்ப்பு தானாகப் பிறந்தது, பெரிய பட்டப்படிப்பு எதுவுமே இல்லாமல் ஒரு சாதனையை சாதிக்க தூண்டியது, இந்த சமுதாயத்தினது பழைய காலத்திற்கு ஒவ்வாத கட்டமைவே. இரண்டாம் உலக மகா யுத்த வெற்றியை ஆதாரமாக வைத்து மேலை நாடுகள்தங்களுக்கு வாய்ப்பான பொருளாதாரத்தைக் கட்டியமைத்து நமது கையில் ஒரு போலியான கல்வியைத் தந்து கண்ணைக்கட்டி காட்டில் விட்டதைப் போல விட்டுள்ளதால் ஏற்பட்ட சிக்கலே நான் எதிர்கொண்ட சவால். எனது வெற்றி யாரும் தொடாத புதிய வெற்றி. அரசுகள் மக்களுக்கு போட்டுக்கொடுக்காத புதியபாதை.

**இலக்குகளை நிர்ணயிப்பதே வெற்றிக்கான சிறந்த வழி என்பது பற்றிய உங்கள் கருத்தென்ன..?**

பதில் : இதைத்தான் இதற்கு முந்திய கேள்வியில் சொல்லியிருந்தேன். நமக்கான இலக்குகள் நமக்கு யாரென்றே தெரியாதவர்களால் வகுக்கப்பட்டுள்ளன. மதங்கள் காட்டும் மோட்ச இலக்கை நாமா வகுத்தது ? அரசியல் காட்டும் விடுதலை இலக்கை நாமா வகுத்தது ? எதையுமே நாம்வகுக்கவில்லை, யாரோ வகுத்த இலக்கில் நாம் தலையை பிடித்து முக்குளிக்கும் படியாக அமிழ்த்தப்பட்டுள்ளோம், முதலில் இந்த அழுத்தங்களை உடைத்து வெளியேற ஒரு துணிச்சல் வேண்டும். துணிச்சல் இல்லாதவனுக்கு இலக்கு இல்லை. துணிந்து விட்டால் ஆழ்மனம் இலக்கை அடையாளம் காட்டும், இயற்கை கோழைகளுக்காகவும் அது ஒருபாடப்புத்தகம் வைத்துள்ளது.

அதுவும் இலக்குத்தான். அதைத்தான் கோடானகோடி மக்கள் கடைப்பிடிக்கிறார்கள். இலக்கை குறிப்பது வெற்றிக்கான இலக்கு என்பது சரியான வாசகமே. ஆனால் அதற்குப் பின்னர்தான் சிக்கலே வரும். வெற்றியை தக்க வைப்பது வெற்றி பெறுவதை விட கடினம். எனவேதான் இலக்குகள் புதிது புதிதாக உருவாக்கப் படவேண்டியவையாகவும் இருக்கின்றன.

**இன்றைய இளைஞர்கள் பலரும் துடுப்பற்ற படகு போல வாழ்கிறார்களே அவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது யாது..?**

பதில் : எதிலுமே பொறுப்பெடுக்காமல் இளைஞன் ஒருவன் இருந்தால் அவன் அடிமனம் அச்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறது. அதை முதலில் உடைக்க வேண்டும். இன்றைக்கு சாதிக்க அடிப்போடாவிட்டால் பிற்காலத்தில் பெரும்கவலைப்பட நேரிடும். இளைஞர்கள் விரைந்து முடிவெடுக்கப் பழக வேண்டும்.

தண்ணீருக்குள் போட்டதும் மீன் குஞ்சு நீந்துகிறது, அது யோசிப்பதில்லை. அது போன்ற செயற்பாட்டு விரைவு வேண்டும். பணக்காரரை விட ஏழைகளுக்குத்தான் கோபம் அதிகம் வருமாம். அதுதான் அவர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள், அத்த கையோரையே சிலர்தூண்டி விடுவார்கள். இன்று செயற்படாவிட்டால் நாளை உங்களையே தூண்டிவிடுவார்கள்..

உங்கள் கைகளில் என்ன இருக்கிறதெனப் பாருங்கள்,, நீங்கள் தூண்டிவிடப்பட்டிருக்கிறீர்களா இல்லையா என்பது தெரியும். நீங்கள் எதைத்தூக்கினாலும் உங்களுக்காக தூக்கினால் வெற்றி வரும். இல்லையேல் தோல்விதான். இந்த நிலைக்கு உங்களை எது தூண்டியதென கண்டு பிடித்து அதைதூக்கி வீசுங்கள். கை வெறுமையாகும் காலம் உங்களுக்கான புதுமைக் கருவியை கையில் தரும். மற்றவருக்காக வாழாதீர்கள். உங்களுக்காக வாழுங்கள். உங்கள் ஒவ்வொரு மூச்சுக்கும் விலை இருக்கிறது. அதை வீணாக்கி விடாதீர்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சிறப்புக்கவிதை

# மங்களம் பொங்க பொங்கலோ பொங்கல்

செங்கதிரோன் நகை காட்டி
விடியலை உணர்த்திட
புன்னகையும் புதுப்பொலிவும்
வாசலில் கோலமிட
புதுப்பானையில் புத்தரிசி
பொங்கிவரும் பொங்கல்.


முப்பழமும் சர்க்கரையும்
தானியமும் சேர்ந்துவிடும்
நாவினிய பொங்கல்.
உழவர் உழைப்பின்
உயர்வைக்காட்டும் பொங்கல்.

தங்கத்தமிழர் உரிமை காட்டும்
நன்றிமறவா பெருமை காட்டும்
கன்னல் சுவை சேர்ந்துவரும்
தை மாதப் பொங்கல்.

கதிரவன் கருணைக்கு
காணிக்கையான பொங்கல்.

களனிகள் நிறைய
காதலும் பொங்க
வீரமும் விளைச்சலும்
விண்ணுயர ஓங்க
அன்பும் பண்பும்
அறிவும் அமைதியும்
நீடூழி வாழ,
இணையில்லா மனையாளின்
இல்லறம் செழித்திட
மங்களமாய் பொங்கிடும்
சூரியப் பொங்கல்.

பொங்கலோ பொங்கலென்று
பொங்குக நெஞ்சமெல்லாம்.
வளம்நிறை வாழ்வுதன்னை
இவ்வையத்தார் பெற்றுவாழ
சாந்தியும் சமாதானமும்
சர்வமும் ஏகிவிட
பொங்கி வருக!
பொங்கலோ பொங்கல்.



தேவா மாதவன்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் தெரிந்த நிலவையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் திவ்யா...அவளது மனம் பல கேள்விகளுக்கு விடை காண முயன்று கொண்டிருந்தது...சில நாட்களாகவே அவள் எதை நினைத்துப் பயந்து கொண்டிருந்தாளோ, அது நாளை நடக்கப் போகிறது என நினைக்கும் போது அவளது கண்கள் அவளைக் கேட்காமலேயே கண்ணீர்த்துளிகளை பரிசளித்துக் கொண்டிருந்தன...



# இது காதலா...

உதயசகி, யாழ்ப்பாணம்

கண்ணீர் அவளை மொத்தமாய் நனைக்கத் தொடங்கிய நேரம் அவளைத் தேடி வந்தான் பிரணவ்...

''திவ்யா..இங்க என்ன பண்ணிட்டு இருக்காய்..தூங்கலையா...??''

அவன் வருவதை உணர்ந்து கண்ணீரை வேகமாய் துடைத்துக் கொண்டவள் அவன் புறம் திரும்பி அவனது கேள்விக்குப் பதிலளித்தாள்..

'' தூக்கம் வரல...நீ தூங்கலையா..??''

''ம்ம்...எனக்கும் அதேதான்,தூக்கம் வருதேயில்லை..''

அவனுக்கும் அவளைப் போல் தூக்கம் வரவில்லையென்றதும் அவள் மனம் தானாகவே பல கற்பனைக் கோட்டைகளை கட்ட ஆரம்பித்தது...

''அவனுக்கும் எனக்கு தோன்றியது போலவே தோன்றியிருக்குமா?? அவனும் என் மனநிலையில்தான் இருக்கிறானா??.. ''அவளுக்கு அதைப்பற்றி நினைக்க நினைக்க மனதில் சூழ்ந்திருந்த கவலைகள் நொடியில் கரைந்து போனது... ஆனால் அவளது மகிழ்ச்சி சிறிது நேரம் கூட நீடிக்கவில்லை.. அவளது ஒட்டுமொத்த மகிழ்ச்சியும் காணாமல் போகும்படியாக அவன் வேறு சொன்னான்...


''நாளையோட கோட் நமக்கு தந்த ஒரு வருஷம் முடிஞ்சு, கேசும் நாளைக்கு கோட்டுக்கு வருது...நம்ம இரண்டு பேர் பக்கமுமே எந்த எதிர்ப்பும் இல்லாததால நாளைக்கே நமக்கு விவாகரத்து கிடைச்சிடும்னுதான் நினைக்கிறேன்...நாளைக்கு எல்லாமே நினைச்சமாதிரி முடிஞ்சாதான் நிம்மதியா தூங்க முடியும் போல...உனக்கும் அதனாலதான் தூக்கம் வரலையா திவி...??''

பிரணவ்வின் மனம் அவள் இல்லையென்று சொல்ல வேண்டுமென்று வேண்டிக் கொண்டது...அவள் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறியவே அவன் அவ்வாறு சொன்னான்...அவளது பதிலிற்காக காத்திருந்த ஓர் நொடியில் அவன் மனம் பழையதை மீட்டிடச் சென்றது...

இருவருக்குமே பெற்றோர்கள் பார்த்துச் செய்து வைத்த திருமணம்.சொவ்ட்வெயார் இஞ்சினியராக பணி புரியும் பிரணவ்விற்கு அமெரிக்காவிற்குச் சென்று வாழ வேண்டு மென்பதே சிறுவயது முதலான கனவு...அவனுக்கு, காதல்,கல்யாணத்திலெல்லாம் என்றுமே ஈடுபாடு வந்ததேயில்லை... திருமணத்தை தன்னுடைய சுதந்திரத்திற்கு இடையூறாகவே எண்ணியிருந்தான்...அதனால் வீட்டில் கல்யாணப் பேச்சை எடுத்தாலே அதை தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தவன்...இறுதியில் அவனது பாட்டியின் சொல்லிற்கு கட்டுப்பட்டே திவ்யாவைத் திருமணம் செய்து கொண்டான்...

ஆனாலும் கல்யாணம் நடந்த மறுநாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவாகரத்து பற்றி அவளோடு கதைத்து விட்டான்....அவளிடமிருந்து பெரிய சண்டையை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு அவள் உடனேயே தன் சம்மதத்தை தெரிவித்தது கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தாலும்... அவன் நினைத்தது சுலபமாகவே முடிந்ததில் விவாகரத்து பெறுவதற்கான நடவடிக்கைகளை மறுநாளே வீட்டிற்குத் தெரியாமல் செய்யத் தொடங்கிவிட்டான்...

அதன் பின் தான் திவ்யாவும் இந்த கல்யாணத்திற்கு விருப்பம் இல்லாமல்தான் சம்மதித்திருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரியவந்தது... அவளும் அவனைப் போல் தான் திருமணத்தை தன் சுதந்திரத்திற்கு எதிரான இடையூறாகவே பார்த்தாள்...என்னதான் இருவரும் ஒருமனதாக விவாகரத்துப் பெற சம்மதித்தாலும் கோட் அவர்களுக்கு ஒரு வருட கால அவகாசம் அளித்திருந்தது...

இந்த ஒருவருடமாய் இரு குடும்பத்தினருக்கும் சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறார்கள்... விவாகரத்து கிடைத்ததும் அவன் அமெரிக்காவிற்கும்..அவள் லண்டனிற்கும் செல்வதாகவே திட்டம்...சில காலத்தின் பின் இருவர் வீடுகளிற்கும் தெரிவிக்கலாம் என முடிவு செய்திருந்தார்கள்...

எந்த நாளிற்காக அவர்கள் இதுவரை காலமும் காத்திருந்தார்களோ...அது நாளை வரப் போகிறது.....விடிந்தால் அவர்கள் நினைத்தது போலவே அனைத்தும் சுபமாகவே முடிந்துவிடும்..ஆனாலும் இருவர் மனதிலும் சந்தோசத்திற்குப் பதில் கவலையே குடிகொண்டிருந்தது...இந்த ஒருவருடத்தில் எதுவுமே மாறப்போவதில்லை என நினைத்தவர்கள் இருவருமே ஒருவராக மாறிப் போயிருந்தார்கள்...எது எல்லாம் அவர்களுக்குத் தடையாக இடையூறாகத் தெரிந்ததோ அது அனைத்துமே இந்த ஒரு வருடப் பயணத்தில் ஒன்றுமேயில்லையென்று ஆகிப்போனது...

இருவருமே நெருங்கிய நண்பர்களாய் மாறியிருந்தார்கள்...ஒருவர் அருகாமையை ஒருவர் எப்போதுமே விரும்பினார்கள்... எப்போது இருவருக்குமே ஒருவருக்கொருவர் காதல் வந்தது என்பதை அறிந்திருக்கவில்லை...ஆனாலும் ஒருவர் இன்றி ஒருவரால் இருக்க முடியாதென்பதை இருவருமே மிகத்தெளிவாகவே உணர்ந்திருந்தார்கள்... இருந்தும் அதை ஒருவரிடத்தில் மற்றவர் சொல்லிக் கொள்வதில் இருவருக்குமே தயக்கம் இருந்தது...

ஆரம்பத்தில் ஒருவர் வாழ்வில் ஒருவர் தலையிடப் போவதில்லையென்று கூறிவிட்டு.. இப்போது எப்படி காதலென்று சொல்வதென்று இருவருமே யோசித்து யோசித்து நாட்களைக் கடத்திக் கொண்டிருக்க அவர்களுக்காக கோட் கொடுத்திருந்த ஒருவருடமும் முடிந்து, நாளை விடிந்தால் விவாகரத்தாகிவிடும் என்பதை நினைக்கும் போது இருவருக்குமே தூக்கம் தொலைவாகிப் போயிருந்தது.... அனைத்தையும் மீட்டிப் பார்த்து பெருமூச்சென்றை வெளியிட்டவன் திவ்யாவின் பதிலில் முழித்துக் கொண்டான்...

''எனக்கும் அதே நினைப்புத்தான் பிரணவ்.. நாளைக்கு எல்லாம் நல்லபடியா முடியணும்னு... என்று மனதை மறைத்து பொய்யுரைத்தவள், கண்ணீரை மறைக்க



மறுபுறமாய் திரும்பிக் கொண்டாள்..''

அப்போது அவளது கண்ணீரை மறைப்பதற்கு உதவி செய்யவென்றே அவளோடு இணைந்து வானமும் பெரிதாய் அழத் தொடங்கியது...

திவ்யாவின் பதிலில் உடைந்து போன பிரணவ் அவனது கண்களிலும் எட்டிப்பார்த்த கண்ணீரை மழையில் நனைத்துக் கொண்டான்... எப்போதுமே மழையை இணைந்து ரசித்து மகிழ்பவர்கள்,இன்று தம்மை மறந்த நிலையில் மழையில் நனைந்து கொண்டிருந்தார்கள்... அந்த இரவு அப்படியே நீளாதா??என்றிருந்தது திவ்யாவிற்கு...

முதலில் சுயநினைவுக்கு வந்தது பிரணவ் தான்...இருவருமே நன்றாக நனைந்துவிட்டிருந்ததை உணர்ந்தவன்,அவளது கையைப் பிடித்து உள்ளேசெல்வோமென்றான்...அவன் கையைப்பிடித்ததும் அவனது கையை உதறிவிட்டவள்...'' நான் வரல... நீ போ...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏய் லூசு...மழை இப்படி பெஞ்சிட்டு இருக்கு வரலனு சொல்லுற...உனக்கு எப்பவுமே மழையில நனைஞ்ச உடனேயே காய்ச்சல் வரும்...இதில இப்படியே நிண்டா...விளங்கிடும்...முதல்ல உள்ள வந்து உடுப்பை மாத்திட்டு தலையை காய வை...''

''எனக்கு என்ன ஆனா,உனக்கு என்னடா??கவலைப்படாத, நாளைக்கு நடக்க முடியாத அளவுக்கு காய்ச்சலே வந்தாலும் கோட்டுக்கு வருவேன்...உனக்கு இப்போ அதானே முக்கியம்..''

''என்கிட்ட அடி வாங்கப்போறாய்... இதான் நீ என்னை புரிஞ்சுகொண்ட இலட்சணமாடி...லூசுமாதிரி பேசிட்டு...இப்போ உள்ள வரப்போறியா இல்லையாடி...??''



''வரமுடியாது...போடா..''

அவன் இனி என்ன சொன்னாலும் உள்ளே வரமாட்டாள் என்பதை உணர்ந்தவன்,அவளது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றான்...ஆனால் அவளுமே விடுவதாக இல்லை...அவளது கையை விடுவிக்க அவனோடு போராடிக்கொண்டிருந்தாள்...

''கையை விடுடா....இப்போ விடப் போறியா,இல்லையா..??''

''விடமுடியாது.....இப்போ மட்டுமில்லை... இனி எப்பவுமே உன்னோட கையை என்னால விடமுடியாதுடி...''

அவன் என்ன சொல்கிறான்...சிறிது நேரத்திற்கு அவளால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை...அவனை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்...

அவளது பார்வையே அவன் மீதான அவளது காதலைச் சொல்லாமல் சொல்ல..உதட்டில் சிறு முறுவல் பூக்க அவளை வம்பிழுக்கத் தொடங்கினான் பிரணவ்...

''இப்போ எதுக்குடி என்னை சைட் அடிக்கிறாய்..?''

அவனது முறுவலே அவனைக் காட்டிக் கொடுக்க அவளும் அவனுக்கு இணையாக வம்பு செய்யத் தொடங்கினாள்..

''ஆமா..இவரு பெரிய மன்மதன்னு...நாங்க இவரை சைட் அடிக்கிறம்..''

''அப்போ நீ என்னை சைட் அடிக்கலை..?''

''பச்...ஏதும் நடக்கிறதா சொல்லுங்க சேர்...சும்மா காமெடி பண்ணிக்கிட்டு..''

''சரி விடு....நம்மளை சைட் அடிக்க தான் ஒரு கும்பலே இருக்கே...அதில கூட நேற்று ஒருத்தி நாம கல்யாணம் பண்ணிக்கலாமா பிரணவ்னு கேட்டா...நமக்கு தான் டிவோர்ஸ் ஆகப்போகுதே...நாளைக்கு கூட ரொம்ப நல்ல நாளாம்...நாளைக்கே அவளுக்கு ஓகே சொல்லிறன்...உனக்கு ஓகேதானேடி...?''

அவன் கேட்டு முடித்ததும்தான் தாமதம் கீழே கிடந்த தடியைத் தூக்கி அவனை அடிக்கத் தொடங்கிவிட்டாள்...

''ஏன்டா டேய்...உனக்கு எவ்வளவு தைரியமிருந்தா...அவளிட்ட ஓகே சொல்லப் போறேன்னு என்கிட்டேயே சொல்லுவ நீ...''

''ஐயோ....வலிக்குதடி...நான் விளையாட்டுக்குத்தான் அப்படிச் சொன்னேன்...''

''விளையாட்டுக்கெண்டாலும் நீ எப்படி அப்படிச் சொல்லலாம்...இன்னைக்கு நீ தொலைஞ்சடா..''

அவளின் அடியிலிருந்து தப்பிக்க அங்கு மிங்குமாய் ஓடிக் கொண்டிருந்தவன் அவள் எதிர்பாராத வேளையில் அவளை சடாரெனத் தூக்கினான்..

''டேய் விடுடா என்னை...விடுடா'' என்று அவனிடமிருந்து கீழே இறங்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்...அவள் செய்த எதையும் கண்டுகொள்ளாமல் அவளை இறுக்கமாய் பிடித்துக் கொண்டவன்,மழைத்துளிகளில் நனைந்து கொண்டிருந்த அவள் முகத்தை ரசிக்கத் தொடங்கினான்...

''இப்போ நீ எதுக்குடா...என்னை சைட் அடிக்கிறாய்??..''

''நான் என் பொண்டாட்டியை சைட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிக்கிறேன்...உனக்கென்னடி..?''

''நீ ஒன்னும் என்னை சைட் அடிக்க வேண்டாம் போடா...உன்னைப் பார்க்கத்தான் பெரிய கும்பலே திரியுதே அவங்கள்ள யாரையும் போய் சைட் அடிச்சுக்க போடா...''என செல்லமாக அவனோடு கோபித்துக் கொண்டாள் திவ்யா...

''எனக்கு அவங்க எல்லாம் வேணாம்... எனக்கு என்னோட செல்ல ராட்சசிதான் வேணும்...வாழ்க்கை முழுதும் அவ மட்டுமே போதும் எனக்கு....வேற எதுவுமே வேண்டாம்..''

அவனது வார்த்தைகளைக் கேட்டு இப்போதும் அழுதாள்தான்...ஆனால் அது துக்கத்தில் வந்த கண்ணீர் இல்லை...கலங்கிய கண்களோடே அவனிடம் கேட்டாள்...'' ஏன் இந்த செல்ல ராட்சசிதான் உனக்கு வேணும்..?''

''ஏன்னா....ஏன்னா....நான் தூக்கினதிலேயே நீதான் கொஞ்சம் வெயிட் கம்மியா இருக்காய்...மத்தவங்க எல்லாரையும் இப்படி தூக்கி வைச்சிட்டிருக்க முடியாதுடி...அதான்..''என்று சொல்லி முடித்தவன் அவளது முகத்தில் தெரிந்த கோபத்தைக் கண்டு பெரிதாகச் சிரித்தான்...

அவனது சிரிப்பில் இன்னும் கடுப்பாகியவள் அவனிடமிருந்து குதித்து மறுபக்கமாய் போய் நின்று கொண்டாள்....அவளது கோபத்தை வெகுவாக ரசித்தவன்...அவளை பின்னாலிருந்தே அணைத்துக்கொண்டான்.. அவனது இந்த அணைப்பை எதிர்பாராத திவ்யா அசையாமல் அப்படியே நின்றாள்.... இதில் அவன் வேறு அவளது காதோரமாய் ரகசியம் பேசியதில் இதுவரை மழையில் நனைந்தும் நடுங்காத உடல் இப்போது நடுங்கத் தொடங்கியது..

''ஏன் எனக்கு இந்த செல்ல ராட்சசியை பிடிச்சிருக்கின்னு சொல்லட்டுமா திவி..?''

நடுங்கிக் கொண்டிருந்த உதடுகளை அடக்கி ம்ம் என்று சொன்னாள்... அவளது படபடப்பை உணர்ந்து கொண்டவன்,அவளை அதற்கு மேலும் காக்க வைக்காமல் அவனது காதலை அவளிடம் சொன்னான்...

''ஏன்னா எனக்கு என்னோட ராட்சசியை அவ்வளவு பிடிச்சிருக்கு... அவளை நான் நேசிக்கிற அளவுக்கு வேறு யாரையும் நான் நேசிக்க முடியாதுன்னு தோணுது... அவ இல்லைன்னா எதுவுமே இல்லைன்னு தோணுது... அவளை அவளுக்காக மட்டுமே இந்த வாழ்க்கை முழுதும் காதலிச்சுக்கிட்டே இருக்கனும்னு தோணுது....இது எல்லாத்தையும் விட அவகிட்ட மட்டுமே என் காதல் மொத்தத்தையும் கொடுத்து அவகிட்ட இருக்கிற காதல் மொத்தத்துக்கும் நான் மட்டுமே சொந்தக்காரானா இருக்கணும்னு தோணுது... ''என்று கூறியவாறே அவளை அவன் புறமாய் திருப்பினான்....

அவன் ஒவ்வொன்றையும் சொல்லச் சொல்ல அவள் அவளாகவில்லை....அவன் புறமாய் திரும்பியவள் அவன் இவ்வளவு நேரமும் வார்த்தைகளில் சொன்னதை அவள் கண்களில் காட்டிக் கொண்டிருந்தாள்....அவளது கண்களில் தெரிந்த காதலில் தன்னை மறந்தவன்..அவளை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டான்...அவனுடைய அணைப்பில் அவளும் விருப்பத்தோடே இணைந்துகொண்டாள்...

''என்னை கல்யாணம் பண்ணிக்கிறியாடி...?''

அவனது கேள்வியில் லேசாக சிரித்தவள்...''எனக்குத்தான் ஏற்கனவே கல்யாணம் ஆயிட்டுதேடா??...வேணும்னா அவனை நாளைக்கு டிவோர்ஸ் பண்ணிட்டு உன்னை கல்யாணம் பண்ணிக்கவா..?

''வேணாம் வேணாம் அவன் ரொம்ப நல்ல பையன்...நீ அவனை டிவோர்ஸ் பண்ணாத....

அவன் சொல்லிய விதத்தில் பெரிதாகச் சிரித்தவள்...'' உன்னைக் கல்யாணம் செய்தபோது உன்கிட்ட இதை நான் சொல்வேன்னு நினைக்கவே இல்லை என்றவாறே அவனது முகத்தை நேராக நோக்கியவள்...'' ஐ லவ் யூ பிரணவ்...''எனன்றாள். ''ஐ லவ் யூ ரூ பொண்டாட்டி....''என்றவாறே அவன் அவளை தன்னோடு சேர்த்து இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்...

காதல்,கல்யாணம் என்பதிலெல்லாம் நம்பிக்கையில்லாமல் திருமணம் செய்து கொண்ட இருவரும் இன்று காதல் அத்தியாயத்தில் புதுக்கவிதைகளை வரையத் தொடங்கினர்....வாழ்க்கை யாருக்கும் நினைத்தது போல் அமைந்திடுவதில்லை....நமக்கு கிடைத்த வாழ்க்கையை நமக்கு பிடித்தது போல் மாற்றிக் கொள்வது நம் கையில் தான் உண்டு....கிடைத்த வாழ்க்கையை ரசித்து வாழுங்கள்....நகரும் ஒவ்வொரு நொடியும் அழகாகத் தெரியும்...

**இனி எல்லாம் வசந்தமே......**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலக்கிய உலகில் மெல்ல காலடித்தடங்களைப் பதித்துவரும் படைப்பாளர்களை தட்டிக்கொடுத்து, உலகிற்கு காட்டும் ஒரு உன்னத நோக்கில் கவிஅரும்புகள் பகுதியை ஆரம்பித்துள்ளாள் ஒளிஅரசி.

அந்த வகையில் இம்மாத கவிஅரும்பாக அறிமுகமாகவுள்ளவர் ஈழத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் தேசத்தை வசிப்பிடமாகவும்கொண்ட மகேந்திரம் குலநாத். இவர் யாழ் மாவட்டத்தில் பண்ணாகம் என்ற கிராமத்தில் மகேந் திரன் சுதாஜினி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர்.

நான்கு சகோதரிகள் உடன் பிறந்தவர்கள். இவரது ஆரம்பக்கல்வி





நேர்காணல் :
து.திலக்(கிரி )
சுவிட்சர்லாந்து

# முதலாவது சிறுவயதுப் பாடலாசிரியன்

யாழ்.பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம். இவர் தனது 11வயதில் கவிதை எழுத ஆரம்பித்து 12வது வய தில் அதாவது 2011ம் ஆண்டு ''வைரம்'' எனும் கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். இந்நூலுக்காக வலி காமம் மேற்கு பிரதேச சபை ''கவி அரசு'' என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது.

அத்துடன் 14வது வயதில் சீரழிந்துபோகும் தமிழரின் பண்பாடு என்ற தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். காலம் தன்போக்கில் ஓட கவிதைகளோடு ஓடி 16 வது வயதில் இந்திய சினிமாவில் பாடலாசிரியராய் புள்ளியிட்டார் குலராஜ்.

ஈழத்து இரத்தினம் என்பவர் 53 வரு டங்களிற்கு முன்னர் தென்னிந்திய சினிமாவில் பாடல் எழுதினார். அதன் பின்னர் நீண்ட இடைவெளிகளின் பின் கவிஞர் பொத்துவில் அஸ்மின் 2011ம் ஆண்டு விஜய்ஆண்டனியின் நடிப் பில் வெளிவந்த ''நான்'' திரைப்படம் மூலம் தென்னிந்திய சினிமாவில் பாட லாசிரியராக அறிமுகமானார்.

அதன் பின்னர் குலராஜ் தென் னிந்திய சினிமாவில் ''வெல்'' திரைப் படம் மூலம் பாடலாசிரியராக அறி முகமாகியுள்ளார். இவர் இருபதிற்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட திரைப்படங்களுக்காக இரு பத்தாறு பாடல்களை எழுதியுள்ளார்.

இந்திய சினிமாவில் கால்பதிக்கும் மூன்றாவது இலங்கைக் கவிஞன் என்ற பெருமையைத் தவிர இந்திய சினிமாவில் 16வயதில் பாடலாசிரியராகும் முதல் இளம் கவிஞன் என்ற பெருமைக்கும் உரியவர் குலராஜ். பல மாமேதைக ளையும் புத்திஜீவிகளையும் உருவாக்கிய யாழ் மண், தன் பிள்ளை இவனென்று பெருமை கொள்ளும் விதமாய் வளர்ந்து வரும் இவர் தமிழ் உணர்வுகளை எழுத் துகளினூடாக பதித்துவரும் துடிப்பான இளைஞனாகவும் மிளிர்கின்றார்.

தனது வெற்றிகளின் பின்னால் தனது பெற்றோரும் சகோதரர்களும் தனது பாட சாலையின் தமிழ் ஆசிரியை, மற்றும் அதிபர் ஏனைய ஆசிரியர்களும் தன்னை ஊக்குவித்தவர்கள் எனவும் கூறுகின்றார்.

உங்கள் எழுத்துப்பயணம் பற்றிக் கூறுங்கள் எனக்கேட்டதும், எனது பத்தாவது வயதில் படம் பார்த்து கவிதை எழுதும் பாடப்பரப்பில் ஆரம்பமானதே எனது எழுத்தாற்றல். அந்தப் புள்ளியே இன்று பாடலாசிரியனாய் கோலமிட்டி ருக்கின்றது என்கிறார் சிரித்தபடியே.

விதை அறக்கட்டளை மையம் ஒன்றை நடாத்தி வருகின்றீர்களே, அதைப்பற் றிக் கூறுங்கள் என்றபோது, அதாவது போர்க்காலங்களில் கூட முன்னணியில் இருந்த எமது யாழ்ப்பாணத்தின் கல்வி நிலைமையானது இன்று பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

விதை என்பது திறமையிருந்தும் போரில் அகப்பட்டு கல்வி கற்பதற்கு சிரமப்படும் வறிய மாணவர்களை ஊக்கு விக்கும் ஒரு நிறுவனமாகும். விதையை நாம் போடுகின்றோம், விருட்சமாவது அவர்களின் கைகளில் உள்ளது என்றார்.

இதுதவிர, சூர்யா இசைக்கழகம் என்ற ஒரு அமைப்பையும் நடாத்துவதாக அறி கின்றோம், அதுபற்றிக் கூறுங்கள் எனக் கேட்டபோது, தமிழர்களின் பண்டைய இசைக்கருவியான யாழ் இசைக்கருவி என்பது இன்று அருகிவரும் ஒன்றாக மாறியுள்ளது. யாழ் இசைக்கருவி எனக்கு மிகவும் பிடித்த இசைக்க ருவி. அதனை எமது இளை யோரிடம் கொண்டு சேர்க் கும் பணியைச்செய்யவேண்டும் எனும் மன உந்துதலில் உருவானதே இந்த இசைக்கழகம் எனவும் காலப் போக்கில் நிச்சயமாய் அவ்எண்ணத் தினை நிறைவேற்றுவேன் எனவும் உறு தியுடன் கூறுகின்றார்.



உலகமெங்கும் வாழும் தமிழ் இளை ஞர் யுவதிகளுக்கு நீங்கள் கூறவிரும்பு வது என்ன, எனக்கேட்டபோது மேற்கு நாட்டவர்கள் எம்மிடம் இருந்து கலாசா ரத்தையும் பண்பாட்டையும் உயர்வாக கருதி பெற்றுக்கொள்ளும் போது நாம் எமது தனித்துவங்களை மறப்பதோ இழப்பதோ கூடாது.

எமக்கான தனித்துவங்களை போற் றிப் பாதுகாக்கவேண்டியது தமிழர் களாகிய எமது முதற் கடமை. அதனை ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் உணர்ந்து செயற்படவேண்டும் எனவும் புன்னகையோடு பதிலளித்தார்.

பள்ளிப்பருவத்தில் இருக்க வேண்டிய துடிப்பும் ஆளுமையும் ஆற்றலும் கொண்டது மட்டுமன்றி தன் தேசக்காற்று தனக்காக வும் வீசுகின்றது என்னும் உயர்சிந்தையை உள்ளத் தில் கொண்டு சிறுவ யதிலேயே தேசப்பற் றாளனாய் கல்விச் சே வையாளனாய் வாழும் இக்கவி அரும்பு பார் போற்ற உயர்ந்து பல சேவை புரிய இக்கணத் தில் தானும் வாழ்த்தி நிற்கின்றாள் ஒளிஅரசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





30.12.2017 அன்று சுவிஸ் தமிழீழ இசைக்குழு, சுவிஸ் சுப்பர் மெலோடிஸ் என்பவற்றின் அனுசரணையில் சந்தனப் பேழைகள் மாவீரர்கானங்கள் என்ற இசைத்தட்டு வெளியிடப்பட்டது. அவ்வெளியீட்டின் மூலம் கிடைத்த பணத்தொகையானது **பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு பாசம் பகிரும் பயணம்** என்னும் மனிதநேயப்பணியின் ஊடாக வன்னி யுத்தத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகள், மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகள், வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மாணவர்கள் ஆகியோருக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக வழங்கப்பட்டது.



தகவல்
து.திலக்(கிரி )
சுவிட்சர்லாந்து

கண்டாவளை, பெரியகுளம் பகுதியிலுள்ள பொதுநோக்கு மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. சுமார் 150 மாணவர்களுக்கு தலா ரூ. 2000.00 பெறுமதியான பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வினை ஒழுங்குபடுத்திய, இந்நிகழ்வில் பங்கெடுத்து கரம்கொடுத்த அனைவரையும் ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்துகின்றோம்.

---



ஆசுகவி அன்புடீன் இலக்கிய பொன்விழா தொடர்பான கட்டுரை டிசம்பர் மாத ஒளிஅரசி இதழில் வெளியாகியிருந்தது. ஒளிஅரசி இதழினை பொன்விழா தொடர்பான குழுவினருக்கு ஆசுகவி அன்புடீன் வழங்கிவைப்பதையும், அருகில் விழாக்குழுவின் செயலாளர் எஸ்.எல். எம். ஹனீபா (பிரதேச செயாளர்), கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யு.எல்.ஏ. அஸீஸ், மலர்க்குழுத் தலைவர் எஸ்.எல்.மன்சூர், சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், மற்றும் பாடசாலையின் அதிபர் அன்சார், ஜெலீல் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Wedding Cards

உங்களை மட்டுமல்ல.
அனைவரையும்
ஆச்சரியமடையச் செய்து
உங்கள் விழாக் கோலத்தை
மறக்க முடியாதபடி மாற்றும்

**திருமண அழைப்பிதழ்கள்**



Head Office Branch Overseas

www.harikanan.com

+94 21 222 2717 | 8/ +94 21 739 7530|1
+94 21 228 00 00

print@harikanan.com
printharikanan@gmail.com
printeuro@harikanan.com

#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
#126, Aananthapuram, A9 Road, Kilinochchi, Sri Lanka.

வடக்கின் அச்சகதாரர்

# ஹரிகனன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org